1298

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—12—58

25 நயா பைசா



1298 / 4-58
OFFICE OF THE REGISTR...
30 DEC 1958
MADRAS
183226



# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

டிசம்பர் 1958. மலர் 35, இதழ் 12. விளம்பி ஞு கார்த்திகை மீ

## விஷய அட்டவணை


| | |
|---|---|
| க்ஷேமலாபங்கள் | 1 |
| பாதிக்கிணறுதானே தாண்டமுடிந்தது —வி. கே. பார்த்தசாரதி | 3 |
| வாழ்த்துகிறோம் | 6 |
| பாரதப் பூங்கா —வசுமதி ராமசுவாமி | 7 |
| பண்டரீபுரம் —டி. எஸ். ராஜகோபாலன் | 9 |
| கம்பியில் கல்யாணம் —விஜயலக்ஷ்மி வரதராஜன் | 14 |
| பிளேட்டோவின் அரசியல் முடிபு —ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ. | 18 |
| சொல்லட்டுமா? —எல். நாராயணராவ் | 21 |
| நடுநிசிப் பேய் —புஜலா | 23 |
| செய்திகள் | 25 |
| காளிதாஸர் கனவு கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி | 28 |
| கிழக்கு வெளுத்தது —வை. மு. கோ. | [213-248] |


## முக்கிய அறிவிப்பு.

இன்னும் சில கட்டுரைகள் தாமதமாகக் கிடைத்ததால் இவ்விதழில் வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம். அடுத்த இதழில் வெளிவரும்.

ஆசிரியை


### வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4.
சாந்தியின் சிகரம்

ரூ. 3.
வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

ரூ. 2-50
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2.
அநாதைப்பெண்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாநாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி
தம்பதியும் ராஜாராம்
[முதல் பாகம்]

ரூ. 1-75
கலாநிலயம்
சிலாசாஸனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-50
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

ரூ. 1-25
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-13
அபராதி

ரூ. 1.
வத்ஸ்குமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

நயாபைசா 75
பக்ஷிமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

நயாபைசா 50
உகுந்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

### வை. மு. ஸ்ரீ.

| | |
|---|---|
| தீபஸ்தம்பம் | 4-0 |
| உதய சூரியன் | 1-25 |
| பெண்மணிக்கனல் | 1-0 |
| இருளில் ஒளி | 1-25 |
| தியாகபலி | 0-75 |
| ஜயந்திசிந்தனைகள் | 1-50 |
| கோதாஹ்ருதயம் | 0-75 |
| ஸ்ரீஸ்துதி | 0-25 |


### வை. மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் ரூ. 1-50
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
சாந்தி கீர்த்தனம் 3-50

ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0

ஸ்ரீ:




சுமார் 35 வருஷகாலமாக "ஜகன்மோகினி" பயிரை அன்பும், பேராதரவும்கொண்டு போஷித்துவரும் ஆத்மநேய வாசக அன்பர்களுக்கு நமஸ்காரம். உபய குசலம். ஸ்ரீ கீதாசாரியன் கடாக்ஷத்தினாலும் உங்கள் மகோபகாரத்தாலும் மோகினி செல்வி தன் முப்பத்தைந்து வயதை கடந்து 59 ஜனவரியில் முப்பத்தி ஆறுவது வருஷத்தை அடையப்போகிறாள் என்ற மகிழ்ச்சியை உங்களுடன் நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்த 35 வருட காலத்தில் "சிறுக கட்டி பெருக வாழு" என்கிற பழமொழிபடிக்கி முதலில் முழு நாவல் பத்திரிகையாக தோன்றி வாசகர்களை பெரு மகிழ்ச்சிக்குள்ளாக்கி தனக்கென தனி ஸ்தானம்பெற்று கம்பீரமாக மிளிர்வதோடு சர்க்காரின் கட்டளைப்படி பலதரப்பட்ட பொதுவிஷயங்களையும் நவீனத்துடன் தாங்கி தன்னால்ஆன இலக்கிய சேவையை சிறப்புடன் செய்து வருகிறதை வாசகர்கள் அறிந்த விஷயம்.

மோகினி 36-வது வருடமாகிய புத்தாண்டிலும் வழக்கப்படி பல புதிய அம்சங்களையும், இரண்டுதொடர்நாவல்களையும் தாங்கி 59-ம் வருடம் ஜனவரி மாதம் உங்களை மகிழ்விக்க வருவாள். என்றும்போல் இன்றும் உங்களுடைய அன்புமிக்க ஆதரவை அளித்து இப் பத்திரிகை பயிரை செழிக்க உதவவேண்டுமாய் கோருகிறேன்.

**விஜயலக்ஷ்மி வரதராஜன்**

(நிர்வாக ஆசிரியை)

1-12-58

# புத்தாண்டின் விஷய அட்டவணை

—*—

வை. மு. கோவின் புதிய தொடர்க்கதை

## "குளிர்ந்த நெஞ்சம்"

●

விஜயலக்ஷ்மி வரதராஜன் தொடர் நாவல்

## 'அன்பு அருவி'

●

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

**சம்சார சக்கரம்.**

[வாழ்க்கைக்கு இன்றியமையாத விசேஷக் கட்டுரை]

●

உண்மை விளம்பி

**உண்மை சித்திரம்**

●

A. சரோஜாபாய்

**வ்ருதாதிகளின் மகிமை**

●

ஹாஸ்ய நடிகர் L. நாராயணராவ்

**சொல்லட்டுமா !**

[ஜீவிய சரித்திரம்]

தவிர ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள், ஸ்ரீமான் வி. கே. பார்த்தசாரதி ஐயங்கார், ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமி, ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன் அவர்கள், ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன் முதலியோர் பல அறிய விஷயங்களை அள்ளி அளிப்பார்கள். மேலும் இன்னும் பல எழுத்தாளர்கள் சிறுகதைகள், கட்டுரைகள் அளித்து எல்லோரையும் மகிழ்விப்பார்கள். படிக்கத் தவராதீர்கள்.

183226

# * * பாதிக் கிணறுதானே தாண்ட முடிந்தது ! * *

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

'திட்டத்தின் வெற்றியே சமூகத்தின் பெருமை' என்று அரசியல் விளம்பரங்கள் எங்கும் கோஷிக்கின்றன, இரண்டாம் ஐந்தாண்டு திட்டம் மூன்று வருடங்களாக நடைமுறையிலிருந்து வருகிறது. திட்டத்தின் போக்கு இனி எப்படி என்ற சிந்தனை இன்று எல்லோர் மனத்தையும் கலக்குகின்றது. பாதிக் கிணறு தாண்டிய கதைதான் ஆகுமோ என்றே கிலி கொள்ள வேண்டியிருக்கிறது. எதிர்பார்த்த அளவு வெற்றி காணாததுடன், எதிர்பாராத கஷ்டங்கள் எதிர்ப்பட்டு, வருங்காலத் திட்டப் போக்கைப் பயமுறுத்துகின்றன. சமூகத்தாருக்குப் பெருமை சம்பாதிக்க இடப்பட்ட திட்டம், சமூகத்தாரைச் சும்மாவிட்டால் போதுமென்ற நிலைக்கு வந்துளது.

திட்டத்தின் வெற்றிக்காக ஏற்கனவே சமூகம் மிகமிக அதிகப்படி வரி விதங்களில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. இங்கிலையில், தேசிய விஸ்தரிப்பு கவுன்சில், திட்டத்தின் போக்கை நன்கு கணிசித்து, முன்னர் மதிப்பிட்ட 5·5 கோடிக் குறைவு பணம் தேடுவது மட்டும் போதாது, வரும் இரண்டு வருடத்திற்குள் 25 அல்லது 30 கோடி ரூபாய் தேடிக் கொடுத்தால்தான் திட்டம் ஒரு மட்டத்திற்கு வரலாம் எனச் சொல்கிறார்கள். இந்தப் பணம் தேடும் பொறுப்பு மாகாணங்களையே சார்ந்ததெனப் பளுவை நம்மீது போட்டு விட்டார்கள். அரசியல் நிபுணர்களும், பொருளாதாரப் பெரியார்களும் இன்றைய திட்ட நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, முன்னும் போக முடியாது 30 லட்சமில்லாவிட்டால், பின்னும் திரும்ப முடியாது 30 லட்சமில்லாவிட்டால் என்று முடிவு கூறி திட்டக் கிணற்றைத் தாண்ட ஆசை காட்ட அழைத்துச் சென்ற சமூகத்தைப் பாதிக் கிணற்றைத் தாண்டிய நிலையிலேயே நிறுத்தி விட்டார்கள். கிணறு தாண்ட ஆரம்பிக்கையில் கணிக்கப்பட்ட பலம், பாதிக் கிணறு தாண்டியவுடனேயே செலாவணியாகிவிட்டது. மீதிப் பாதி கிணறு தாண்டவேண்டிய புதுப்பலம் பெற்றாலொழிய, பாதிக் கிணறு தாண்டிய நாம் மேலே தாண்ட முடியாது கீழே, கிணற்றுக்குள்ளே விழ வேண்டியதுதான். சமூகத்தாரின் பெருமைக்காகத் திட்டம் வகுத்தோரது இன்றைய தீர்ப்பும், நமது உண்மை நிலைமையும் இதுதான்.

## இரண்டாம் திட்டம் முடிவதற்குள் மூன்றுவதைப் பற்றிக் கவலையா ?

இரண்டாந் திட்டத்திற்கே பாதிக் கிணறு தாண்டிப் பல மற்றுத் தவிக்கையில், மூன்றும் ஐந்தாண்டு திட்டத்தை முன்னிற்குக் கொணரவேண்டிய சிரத்தையும் பரபரப்பும் அரசாங்க வட்டாரத்தில் சலசலத்து வருகிறது. இதை என்னென்று சொல்வது? நமது ராஜ்யத்தைச் சுற்றிலெங்கும், குடியரசு முறிந்து ராணுவ ராஜ்யம் ஓங்கி நிற்கிறது. வெளி நாடாம்

இராக், எகிப்து, ஸொடான் இருக்கட்டும். அதைப்பற்றி மேற் கத்தி வல்லரசுகள் பெருமூச்செறிந்து பஞ்சதந்திர நட வடிக்கைகள் நடத்துகின்றன. நமது அண்டைய பாகிஸ்தான், பர்மா, தாய்லாந்து என்பவைகளில் ராணுவ ராஜ்யமும், இலங்கை, காஷ்மீர் குழப்பங்களும் நமது அரசியல் தந்திரிகளுக் குப் போதுமான பீதியும் தொல்லையும் தந்து வருகிறதே! எந்த நிமிடம், எந்த அரசு எந்தப் பள்ளத்தில் யாரைத் தன்னுடன் இழுத்துக்கொண்டு எகிறிக் குதிக்குமோ யென்றல்லவா சமூக மக்கள் எந்த நிமிஷமும் கவலைகொண்டிருக்க வேண்டி வருகிறது. அரசியல் நிலை அப்படிக் கொந்தளித்திருக்க, பொருளாதார நிலை யில் உள்நாட்டுச் சட்டதிட்டங்களை மேலும்மேலும் இறுக்கிக் கடினமாக்கி வாழ்வே முடியாததான கசப்புநிலை நேரிடப் பெருகிப் போமாகில், குடிமக்கள் மனோநிலை எவ்வழியதாகும்?

## மத்தியத் தரத்தாருக்கு திரிசங்கு சொர்க்கமா?

வருகிற நிதியாண்டில், இன்னமும் என்னென்ன புதிய வரிகள் போடுவதென்பதைப் பற்றி நமது மந்திரிகளும், சட்ட சபையாளர்களும் தீவிரமாக யோசனை செய்து வருகின்றனர். சமூகத்தின் மத்தியதரத்தார் தலையில்தானே இந்தப் பளு விழப் போகிறது. அதைப்பற்றி கீழ்ப்பட்ட ஏழைகளுக்கும் பயமில்லை, மேற்பட்ட தனவான்களுக்கும் கவலையில்லை. மத்தியதரத்தார் தானே இன்று தின்னச்சோறு கிடைக்காமல் திண்டாடுவதும், சம்பாதிக்க வேலையில்லாது தவிப்பதும், வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காமல் திணறுவதும். கால் காசு சம்பாதித்தாலும் வரி கொடுத்துவிட்டு, வயிற்றில் ஈரத்துணி போட்டுக்கொள்ள வேண்டியதுதான். துணிக்கூட கஷ்டந்தான்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் உற்பத்தி சக்தியும் நீர்ப் பாசன வசதிகளும் கவனிக்கப்பட்டன. அடுத்தபடியான மக்கள் தேவை உண்ணச் சோறும், உடுக்க உடையும், நோயற்ற வாழ்க்கை வசதிகளும். இதற்கு வேண்டியவற்றை இரண்டாம் திட்டத்தில் குறிக்கோளாகக் கொள்ளாது, கைத்தொழில் அபி விருத்திக்கும், இரும்புக்கும் வழிதேட ஆரம்பித்ததில்தான், தேசிய வியாபாரப் பித்தும், பொதுப்பட்டார், தனிப்பட்டார் தொல்லைகளும், முதலாளி தொழிலாளி முடக்கங்களும் அரசியல் பொருளாதார ஊழல்களும், லஞ்சம், கள்ளக் கொள்ளை முதலிய வும் தலைவிரித்தாடி, பாதித் திட்ட வழியிலேயே மேல் நடத்த பணமின்றியும், பலருக்கு வேலையின்றியும், மொத்தத்தில் வேளாண்மை குறைந்து, விலைவாசி ஏறி, அரிசித் திண்டாட்ட மும் உண்டாக்கி வருத்துகிறது.

கிராமத்திலிருந்து சீர்திருத்தம் ஆரம்பித்து, மக்கள் மனத்தை மதப்பற்றிலும், பேதமையற்ற ஒத்துழைப்பிலும், பரஸ்பர கூட்டுறவு பான்மையிலும் வளர்த்துப் பட்டினம் வந்து அரசியல் முறை வகுத்தால் குடியரசு வேரூன்றியும், திடத்தும், ஸ்திரமாகவும், சமூக நலத்திற்கும் நாட்டின் க்ஷேமலாபத்திற்கும் உதவுவதாயிருக்கும். அதை விட்டு, அதிகாரத்திலிருப்பவர்,

அவரவருக்குத் தோன்றியவாறெல்லாம் திட்டங்களிட்டு, சட்டங்கள் யோசனையின்றி கணக்கில்லாது பிறப்பித்துக்கொண்டு, எல்லா விவகாரங்களையும் தேசியமாக்கி வருவதில் முனைந்தால், வேரற்ற மரமும், அடியற்ற கலமும் கவிழ்வது போலத்தானே நாட்டின் நலம் ஒரு காலத்தில் கவிழவேண்டி வரும். அரசாங்கம் சமூகத்தில் அவரவர் தொழில் முறைகளை அவரவர் நன்கறிந்து நடத்தப் பயிற்றுவதை விட்டு, யாவற்றுத் தொழில்களையும் அரசாங்கமே தேசியமாக்கி ஏட்டுச் சுரைக்காயாக நாட்டாருக்கு விநியோகித்துப் போனால், தோட்டமேது, தோட்டச் சுரைக்காய காண்பதேது? அரசாங்க அதிகாரிகளோ, பொருளாதார நிபுணர்களோ இதை அறியாதவர்களா? இல்லவேயில்லை. நன்கறிந்தவர்ளே! ஆயினும் தனது அதிகாரமுள்ளவரை அதை அமுல் செலுத்தி ஆதரவுபெறப் பார்ப்பவர்களாயுள்ளார்களே யொழிய, குடியரசில் பொதுநலனைக் கவனிப்பாரில்லை, மக்கள் தம்மைத் தாமே ஆளும் குடியரசென்பது, நம் நாட்டில் மக்கள் பிரதிநிதிகள் மக்களைத் திண்டாடவிட்டுத் தமக்குத் தாமே சுகம்பெற ஆட்சி நடத்திப் போவதுதானோ எனப் பொதுமக்கள் எண்ணத்தான் செய்கிறது. இதன் விளைவு, தேச சரித்திரம் நன்கு எடுத்துக் காட்டித்தான் வருகிறது.

### முன்னோர் மூடரென்றால் இருப்போரில் யார் ஞானி ?

69 ஆண்டு நிறைந்து 70-ல் பிரவேசிக்கும் பாரதப் பிரதமர் குருநாநக் பிறந்த தினக் கொண்டாட்டத்தில் பேசுகையில் சொல்கிறார்: "உலகம் சமாதான ஸ்தாபனமாக வேண்டும். நமது மக்களெல்லாம் தமது செயல்களையும், சிந்தனைகளையும் புதுப்பித்து நேர்வழியாக்கிக் கொள்ளவேண்டும். நமது முன்னோர் செய்துவைத்துள்ள அனுஷ்டான விதிகள், எல்லாக் காலத்திற்கும் ஏற்றவை அல்ல. நாம் நமக்கேற்றதைப் புதிப்பித்துப் போகவேண்டும்" என்று இம்மாதிரி, நோக்கற்ற விபரீதப் பேச்சுக்களே நம் சுதந்தர நாட்டைச் சின்னாபின்னப்படுத்திவிட்டது. முன்னோர் மூடரென்றால், இருப்போரில் யார் ஞானி? ஒவ்வொருவருந்தான் தன்னை ஞானியெனப் பிரசுரித்து இதரனை மூடனென மதித்து, தனது அதிகாரத்தைச் செலுத்த வருகிறான். நேருவைமட்டும் நம்பி நடக்க விடுகிறார்களா இதர தலைவர்கள் ?

பழைய கட்டுப்பாடுகளைக் கைவிடும் நாடு எக்காலும் சாந்தியோ, சமாதானமோ பெறாதுதான். மூத்தோரை முட்டாள்கள் என்னும் இன்றையோரை, நாளையோர் முட்டாள்களென்றே அவமதிப்பது நிச்சயம். முன்னையோரை இன்றையோர் மதித்து, அவர்கள் காட்டிய வழி நடந்தால்தான் பிந்தியோர் நம்மை மதித்து நம் வழி நாடுவார். இல்லையேல், சுதந்திரம் பெற்ற இந்திய நாடு, இரண்டாம் திட்டத்திலேயே பாதிக் கிணறு தாண்டிப் பலமற்றுத் திணறிப் பரதவிக்கத்தான் வேண்டி வரும்.

## வாழ்த்துகிறோம்.

சென்னையில் ப்ரபல அட்வகேட்டும், பல தமிழ் நாடகங்களை இயற்றித் தாமேநடித்து மக்களை மகிழ்விப்பவரும், ஸ்ரீவைஷ்ணவ நூல்களை ஆராய்ந்து பல கட்டுரைகளை எழுதி ரேடியோ நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து கொள்பவரும், நமது ஜகன்மோகினியில் சில வருடகாலமாக நிஷ்பக்ஷபாதமாக தலையங்கம் எழுதி, வாசகர்களின் பாராட்டுதல்களுக்கு உரியவருமான ஸ்ரீ உ. வே. வி. கே. பார்த்தசாரதி ஸ்வாமியின் சஷ்டி அப்த பூர்த்தி கொண்டாட்டம் சென்ற மாதம் 10-ம் தேதி (தீபாவளியன்று) மிகவும் விமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் திருவல்லிக்கேணி தமிழ் சங்கம் "சூடிக் கொடுத்தாள் மாலை" என்னும் நூலை வழங்கியது.

அவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும், நீண்ட ஆயுளும், தேக ஆரோக்யமும், சகல சௌபாக்கியங்களும் அளிக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

---

### வேரிலிருந்துதானே வளர வேண்டும்?

மீண்டும் வரிகள் பலன் தரா. வேளாண்மை கட்டுப்பாடு சட்டங்கள் யாவும் ஒழியவேண்டும். கிராம வாழ்க்கையிலிருந்து நம் ரிஷிகளும் முன்னோரும் வழியே வேளாண்மை பெருக்கி, நவீன முறைகளில் குடிசைத் தொழிலபிவிருத்தியாகி, அதன் பின்னர் கைத்தொழிலபிவிருத்தி பெருகவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் மனத்தில் பரஸ்பர சந்தேகமின்மையும், கூட்டுறவும், ஒத்துழைப்பும், மதிப்பும், மரியாதையும், பரோபகாரப் பண்பும் பெருகும். அரசாங்க அதிகாரம் இன்னமும் இப்படிக்கே அடக்கியாளுமானால், ஒவ்வொருவரும் சமயம் பார்த்திருந்து, எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபமென சுயலாபக்ஷேம தேட்டர்களாக, நம் நாடு, சீக்கிரத்திலேயே நலமிழந்து, சுதந்தரம் நசித்து, திட்டங்கள் பாதியிலேயே முறிந்து, நாமும் பிறர் கை பார்க்கும் பேதையராய், ஆங்கில அரசு அடிமைத்தனத்தைவிட அதிக இழிவான மனப்பான்மை அடிமைத் தனத்தில் ஆழவேண்டியே வரும். எனவே முன்னோர் சமூக திட்டங்களைக் கைப்பற்றியொழுகி நலம் பெறுவோமாக.

# ★ பாரதப் பூங்கா ☆

— வசுமதி ராமசுவாமி —

—○●✻●○—

மஹா பாரதம் ஐந்தாவது வேதம் என்று பெரியோர்களால் மதிக்கப்பட்டது. அதில் அநேக நீதிகளும், இல்லற தர்மங்களும் நிறைந்து இருக்கும் சிறுகதைகள் நிறைந்திருக்கின்றன. பாரதத்தில் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் கிருஷ்ணனுடைய கருணையும், அற்புத செயல்களும் படிக்க படிக்க தெவிட்டாத அமுதமாக வியாச பகவான் தீட்டி விட்டார்.

ஒரு சமயம் கிருஷ்ணர் இரு கரையும் புரண்டு ஓடும் யமுனையில் இருக்கிறார். கரையில் ராணி திரௌபதி தன் சேடிகளுடன் ஸ்நானத்திற்கு வருகிறாள். அப்பொழுது கிருஷ்ணர் மிகுந்த வெட்கத்துடன் வருத்தத்துடன் ஜலத்திலேயே நின்றுகொண்டு "பாஞ்சாலி, என்னுடைய துணிகளை வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. நான் மேலே ஏறி வருவதற்கு முடியாமல் தண்ணீரில் நின்றுகொண்டு தவிக்கிறேன். இவ்வளவு நேரம் நதிப் பக்கம் யாரும்வராததால் என்ன செய்வதென வருந்தினேன். இப்பொழுது உடனே எனக்கு சின்ன துணி கொடுத்து உதவினால் என் மானம் போகாமல் இருக்கும்" என்றார். பாஞ்சாலி பதறிவிட்டாள். கண்ணனுக்கா இந்த கஷ்டம் என்று நினைத்தாள். ராணியானதால் அவளுடைய முந்தாணியில் பலவித நவரத்ன கற்கள் வைத்து இழைத்த பொன்னுடையை எடுத்துக் கொண்டு வந்தாள். கொஞ்சம் கூட யோசிக்காமல் புடவைத் தலைப்பை கிழித்து கிருஷ்ணரிடம் கொடுத்து "கண்ணா, இதை நீ அணிந்து கொண்டு மேலே ஏறிவா நான் அதற்குள் அரண்மனையிலிருந்து அனேக ஆடைகளை தருவிக்கிறேன்" என்று அன்புடன் சொன்னாள்.

பிற்காலத்தில் பாவி துச்சாதனன் பாஞ்சாலியை அரசசபைக்கு இழுத்து, சேலையை அவிழ்த்து அவமானம் செய்யும்பொழுது, கண்ணன் திரௌபதியைக் காப்பாற்றுகிறான். ருக்குமணியுடன் பகடை ஆடிக் கொண்டிருந்த கிருஷ்ணன் திரௌபதியின் துன்பத்தை உணர்ந்து "அக்ஷயம்" என்று காயை உருட்டுகிறார். துச்சாதனன் சேலையை உருவும் பொழுது மேலும் மேலும் எண்ணற்ற சேலைகள் அக்ஷயமாக வளருகின்றன. இந்த மான சம்ரக்ஷணத்திற்கு திரௌபதி கிருஷ்ணருக்கு ஒரு சிறிய துணியைக் கொடுக்கும் பாக்கியத்தை தப் பெற்றிருக்கிறாள் என்று கர்ண பரம்பரையில் அழகிய கதை உண்டு.

வனத்தில் துர்வாசர் சாபத்திற்கு ஆளாகாமல் பாண்டவர்களைக் காப்பாற்றுகிறார். அக்ஷய பாத்திரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரு பருக்கையையும் ஒரு கீரை இதழையும் கிருஷ்ணர் உண்டு துர்வாசரும், அவருடைய சிஷ்யர்களும் வயிறு புடைக்க சாப்பிட்டது போல் ஆக்கி விட்டார்.

குந்தி யுதிஷ்டர் பட்டாபிஷேகத்தைப் பார்க்க போகும் பொழுது வழியில் கண்ணபிரான் எதிர்ப்படுகிறார். அப்பொழுது குந்தி கிருஷ்ணருடைய அபார கருணையை நினைத்து உருகிப் பேசுகிறாள்.

"எங்களை ஏழு பேரையும் எவ்வளவு முறை காப்பாற்றி விட்டாய். அரக்கு மாளிகையில் பகைவர்களால் எரிந்து சாம்பலாகாமல் காப்பாற்றியவன் நீயல்லவா? திரௌபதியின் மானத்தை ரக்ஷிக்க உன்னுடைய அதி அற்புதமான கருணையைக் காட்டினாயல்லவா? பஞ்ச பாண்டவர்களுக்கு ராஜ்யத்தை வாங்கிக் கொடுக்க பகைவர்களிடம் தூது சென்றதை மறக்க முடியுமா? பாரத யுத்தத்திற்கு உன்னிடம் உதவி கேட்க ஒரே சமயத்தில் துரியோதனனும், அர்ஜுனனும் வந்தார்களல்லவா? உன்னுடைய திருவடி மஹிமையால் கால்மாட்டில் உட்கார்ந்திருந்த அர்ஜுனனுக்கே கருணை புரிந்ததை மறக்க முடியுமா? கோர யுத்தத்தில் பார்த்தனுக்கு சாரத்தியம் செய்ததும், தேர்த் தட்டில் நின்று கீதா உபதேசம் செய்ததை உலகம் உள்ளளவும் மறக்க முடியுமா? உத்தரையின் கர்ப்பத்தை பகைவர்கள் அழிக்கும்போது கருணைக் கடலான நீ கட்டை விரல் பிரமாணத்தில் ரூபமெடுத்து கர்ப்பத்தை காக்க வில்லையா? திரௌபதியின் கூந்தலை அவிழ்த்த பாவிகளுடைய கூட்டம் அழியும் வரையில் தலையை முடிவதில்லை என்று பாஞ்சாலி சபதம் செய்தாள். மாயக் கண்ணா, உன்னுடைய வேலையை நான் அறிவேன். மற்றவர்களுக்குத் தெரியாது. நீ என்ன செய்தாய் தெரியுமா? பாஞ்சாலியின் தலைமயிர் அவிழ்ந்திருந்தால் அமங்களமாகும் எனக் கருதி நுனியில் ஒரு சிறு முடியிட்டாய் அல்லவா? இது மட்டுமா? அவள் கூந்தல் பகைவர்களின் ரத்தத்தால் முடியப்பட்டது உன்னால் அல்லவா? இப்படி இன்னும் எவ்வளவோ சொல்லிக் கொண்டே போகலாம். கிருஷ்ணா, எனக்கு மேலும், கஷ்டங்களையே கொடு. அதனால் உன்னை நினைக்கவும் சமயம் வரும்" என்றாள் குந்தி.

இந்த பாரதப் பூங்காவில் பீஷ்மர் வைராக்கியத்தில் சிறந்தவராகவும், கர்ணன் நன்றி உணர்ச்சியில் மேன்மை யுள்ளவனாகவும், தரும புத்திரர் மிக சாத்வீகியாகவும், தர்மம் நிறைந்தவராகவும் விளங்கினார்கள். இன்னும் பீமன் பக்தியில் சிறந்தவனாகவும், தேக பலம், மனோ பலம் நிறைந்தவனாகவும், இருந்தான். அர்ஜுனன் வீராதி வீரனும், கடமையைச் செய்பவனாகவும் இருந்தான். சஹாதேவன் பக்தியால் கிருஷ்ணரையே கட்டி விட்டான். காந்தாரி கூட தன் கணவன் கண் இழந்து உலகைப் பார்க்காமல் இருக்கும் பொழுது, தான் மட்டும் இயற்கை அழகுகளை பார்க்கக் கூடாதென்று கண்களை கடைசி வரையில் மறைத்துக்கொண்டு விட்டாள். பாரதம் என்ற இந்த நந்தவனம் அனேக மலர்கள் நிறைந்தது. அவைகளைத் தொடுத்தது பொற்சரடு கிருஷ்ண பகவான். ❋

---

## முஸ்தூப்பு

ராமு:- ஏண்டா மண்டு! என்னடா இந்த மழையிலே கொழாய் அடியோடு நிற்கிறாய். பரீக்ஷைக்கு படிக்க வேண்டாமா?

கிட்டு:- அடுத்த வாரம் பரீக்ஷையோன்னோ, அதுக்குத் தான் இந்த முன் ஜாக்கிரதை.

ராமு:- ......?

# ★ பண்டரீபுரம் ★

ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ. எல். டி.

*ஹிந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.*

---

**உறுபிணியும் மூப்பிறப்பு மோச்சிடுவோம், சாலப்**
**பெரும்பதமும் பெற்றிடுவோம், ஞானச்—சிறுவற்காப்**
**பண்டரியாய்த் தூண்தோன்றிப் பொன்ன னுரங்கீண்ட**
**பண்டரியான் பேரே பகர்ந்து.**

திருமகள் கேள்வனாகிய பரமன், பரமபதத்திலே, அனந்த கருட ஸேனாதிபதிகளுடனும், நித்ய ஸூரிகளுடனும் "அந்தமில் பேரின்பத்துடனும்" இருப்பினும், கருணைக் கடலாகையாலே, மண்ணிலுள்ளவர்களுடைய நிலையை நினைந்து, அவர்களை உய்விப்பதற்காக "என்னின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்" என்றவாறு பலவகையான அவதாரங்கள் செய்தான். அவதாரங்களின் முக்கிய நோக்கு, "பரித்ராணாய ஸாதூநாம்" என்றவாறு நன்மக்களை வாழ்விப்பதேயாம். இந்த அவதாரங்கள் யாவும், பெருக்காறுகள்போல் அவ்வப்போதே சிலருக்கே பயனளித்தன. இவற்றிற்குப் பிற்பாடரான நாம் இறைவனை அடைவதற்கெனவே, அவன் அர்ச்சா ரூபங்கொண்டு கோயில்களிலே எழுந்தருளியிருக்கிறான். இந்த நிலையிலே அக்காலங்களிலே தோன்றும் ஞானிகளுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்துத் தன்பால் ஆதரம் பெருகக் கலந்து பரிமாறிக்கொண்டிருப்பதைப் புராணங்களின் மூலம் தெரிந்து கொள்ளுகிறோம். மெய்யடியார்களுடன் இறைவன் பழகும் விதத்தை நம்மாழ்வார் பின்வரும் பாசுரத்திலே காட்டியிருக்கிறார் :

வாரிக்கொண்டு (உ)ன்னை விழுங்குவன் காணிலென்று
ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம்
பாரித்துத் தான்என்னை முற்றப் பருகினன்
காரொக்கும் காட்கரை யப்பன் கடியனே.


திருக்காட்கரை என்ற திருப்பதியிலே உறையும் பெருமானைத் தாம் காணில், பசியராயிருப்பவர் சோற்றினைக் கண்டால் வாரி விழுங்குவதுபோல் வாரி விழுங்கப் பார்த்தார் ஆழ்வார். காட்கரைப் பெருமானோ எனில் ஆழ்வாரை நினைந்து, பெருந் தாகத்தால் தவிப்பவன் போலானான். ஆழ்வாரது மனத்தினைக் கரையச் செய்து, அவரை நீர்ப் பண்டமாக உருகச் செய்து, அவருக்கு முன்னமேயே பாரித்து, தாகந் தீரக் கரகம் முழுதினையும் வாயில் மடுப்பவர் போல் ஆழ்வாரை நன்கு அனுபவித்தான். இவ்வாறு ஒவ்வொரு தலத்திலும் மெய்யானபத்தரிடம் இறைவனுக்கு உள்ள மெய்யன்பு, சுவைமிக்க வரலாறுகளிலே பொலிந்துள்ளது. இத்தகைய மேம்பாடு கொண்ட க்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும் பண்டரிபுரம் ஒன்றாகும். இங்குக் கோயில்கொண்டுள்ள கண்ணன், நாம்தேவ், துக்காரம் முதலிய அடியார்களுக்குத் தன்னை மானிட ரூபத்திலே காட்டிக்கொடுத்து, "அடியவர்க்கு மெய்யன்பன்" என்பதை மெய்ப்பித்துக் கொண்டான்.

இந்தத் தலம், மதராஸ்—பம்பாய் இருப்புப் பாதையில் குர்துவாடி என்ற ஜங்க்ஷனிலிருந்து சுமார் 35 மைல் தொலைவிலுள்ளது. குர்துதவாடியிலிருந்து நாரோ கேஜ் (இரண்டடி அகலமுள்ள) இருப்புப் பாதை, பண்டரிபுரத்திற்குச் செல்லுகிறது. ரயில் வண்டிப் பெட்டிகள் மிகக் குறுகியவை. ரயில் வண்டி எவ்வளவு வேகமாகச் சென்றாலும் மணிக்கு 15 மைலுக்குமேல் விரைவு முடியாது. நாங்கள் இந்த வண்டியிற் செல்லுவதே எங்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது. எனினும் பண்டரிபுரத்தில் நாங்கள் காணப் போவதை நினைத்துக்கொண்டே சென்றதால், சிரமத்தைச் சிறிதும் பாராட்டவில்லை.

பண்டரிபுரம் ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒரு மைலிலுள்ளது பண்டரிபுரத்துப் கோயில். பண்டரிபுரம், பண்டை நாகரீகத்தின் சின்னமாக விளங்குகிறது. வீடுகளும் மாளிகைகளும் பழமையானவை. தெருக்கள் பெரும்பாலும் குறுகியவை; கருங்கற்கள் வேயப்பெற்றவை. மக்கள், தெருக்களைத் துப்புரவாக வைத்துக் கொள்ளவில்லை. தேவாலயங்களின் சுற்றுப் புறங்கள் கண்ணைக் கவரும் வகையில் இருக்கவேண்டும். கோயிலை அணுகும்போதே நமது மனம், தானே மாசற்றதாகி இறைவனை நினைக்குமாறு வெளிப்புறம் அமையவேண்டும். ஆனால் பல இடங்களில் தேவாலயத்திற்கு அருகிலேயே மக்கள் எச்சில் உமிழ்ந்து, சிறுநீர், மலம் முதலியன கழித்து இடத்தைப் பாழாக்கி விடுகின்றனர். ஆலயத்தையும் சுற்றுப் புறங்களையும் அடிக்கடி சுத்தம் செய்வது அதிகாரிகளது பொறுப்பாகும். ஆலயத்திற்குச் செல்லும் மக்களும் அதிகாரிகளுடன் ஒத்துழைப்பது மிகவும் அவசியமாகும்.

பண்டரிநாதன் ஆலயம் மிகப் பெரியது. நான்கு பக்கங்களிலும் வாயில்கள் உள்ளன. முக்கியமான கோபுர வாயில், பீமா நதியை நோக்கியுள்ளது. இதிலிருந்து ஆற்றங்கரை ஒரு பர்லாங்கூட இராது. இந்த இடத்தில் பீமா நதி வளைந்து செல்லுவதால் இதற்குச் சந்திர பாகா என்ற பெயரும் உண்டு. ஆறு அதிக அகலமில்லை; ஆனால் ஆழமுடையது. ஆற்றின் கரையில் உயர்ந்த மரங்களும் பரந்த சோலைகளும் இருக்கின்றன. ஆங்காங்குக் கோயில்கள் பல உள்ளன. ஆதலால் யாத்ரீகர்கள் படகுகளில் ஆற்றிலேயே சென்று வருகின்றனர். ஆறு, மிகப் புனிதமாகக் கருதப்பட்டாலும், ஆற்றின் படுகையும் ஆற்றின் கரையும் நரகமாகவே காணப்படுகின்றன. யாத்ரிகர்களுக்கு ஏற்ற வசதியிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிராது. இக்கரையில் ஓரமாகப் பெரியோர்களது சமாதிகளும் படித்துறைகளும் வரிசையாக அமைந்துள்ளன.

ஆற்றின் கரையில் நாம்தேவ் மந்திர் உள்ளது. இது, நாம்தேவ் பிறந்த இடமே யாகும். இந்த மந்திர், கருங்கற்களாலானது; மூன்று அடுக்குகள் வாய்ந்தது. இதில் யாத்ரீகர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதிகள் உள்ளன. நடுக்கட்டில் ஒரு கோயிலில் பாண்டுரங்கன் எழுந்தருளியிருக்கிறார். இந்தக் கோயிலில் எப்போதும் ஒருவர் தம்பூரா்வை மீட்டிக்கொண்டு ராமநாமத்



பண்டரீபுர பாண்டுரங்க விட்டல்

தையே பாடிக்கொண்டிருக்கிறார். இவர் உட்காருவதே கிடையாது. இவர் கோயிலை விட்டுப் போகும்போது வேறொருவர் இப் பணியில் ஈடுபடுகிறார். இந்தக் கோயிலில் அடியார்கள் ஒருவரையொருவர் வணங்கிக் கொள்வது, மனத்தைக் கவரும் முறையிலுள்ளது. வணங்குமவர், மற்றவரது அடிகளிலே தமது தலையைத் தாழ்த்துகிறார்; இந்த வணக்கத்தை ஏற்றுக்கொண்டு மற்றவரும் இவ்வாறே செய்கிறார். "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா" என்பதை யொத்திருக்கிறது இவர்கள் செய்வது. "பனிக் கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு, ஓடிவந்து (எ)ன் மனக் கடலில் வாழவல்ல மணாளன்" என்பதுபோல் இறைவன் அடியார்களது மனக்கடலில் சாய்ந்துள்ளவனாகையால், அடியார் அடியார் ஒருவரை யொருவர் காணும்போதெல்லாம் இறைவனை வணங்குவதுபோல் வணங்குகின்றனர். இந்த மந்திர் நன்கு பராமரிக்கப்பெற்று வருகின்றது; ஒவ்வோர் இடமும் துப்புரவாகவுள்ளது; யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகள் இங்கு வாய்ந்துள்ளன.

இந்த இடத்திலிருந்தே பண்டரிநாதனது விமானம் கட்புலனாகின்றது. கோயிலுக்கு எதிரில் இரண்டு வரிசைகளில் கடைகள் உள்ளன. கோபுர வாசலில் மலர்மாலைகள், பழங்கள் முதலியன விற்கப்படுகின்றன. கோயிலுட் சென்றதும் பெரியதொரு மண்டபம் தென்படுகின்றது. இதன் தூண்கள் யாவும் நல்ல வேலைப்பாடு வாய்ந்தவை; மேல் தளம் மரத்தாலானது. கோயிலில் வழிபாட்டு முறை, தென்னாட்டு முறைக்கு மாறுபட்டது. சேவார்த்திகள் தாமே இறைவனுக்கு அருச்சனை நைவேத்யம் முதலியன செய்யலாம். உள்ளேயுள்ள பண்டாக்கள், வழிபாட்டிற்கு வேண்டிய மந்திரங்களை ஓதுவிக்கின்றனர். கோயிலில் பல இடங்களில் மூர்த்திகள் உள்ளனர்; இந்த இடங்களிலெல்லாம் பண்டாக்கள் நின்றுகொண்டு யாத்ரீகர்களை வலிய இழுத்து அர்ச்சனை செய்யுமாறு வற்புறுத்துகின்றனர். நாம் உள்ளே போய் வரும்போது அமைதியுடனேயே வணங்க இயலவில்லை, இந்தத் தொல்லையினாலே.

கோயிலில் எப்போதும் கூட்டமாகவே இருக்கிறது. மக்கள் "க்யூ" வரிசையாக நின்றுகொண்டு ஒருவர்பின் ஒருவராக உள்ளே செல்லுகின்றனர். கர்ப்பக்ருஹகத்தில் வாயிற்படியும் கதவுகளும் வெள்ளியாலானவை; நல்ல வேலைபாடு செய்யப் பெற்றவை. நாங்கள் போகும்போது கூட்டமாயிருந்ததால், வெகு நேரம் நிற்கவேண்டியிருந்தது. மூர்த்தியின் எதிரில் செல்லும்வரை உள்ளே இருப்பனவற்றைச் சரியாகக் காணவில்லை. எனக்கு முன்னுள்ள கூட்டம் கலைந்ததும் என்னுடைய கண்களிப்ப நோக்கினேன். எதிரில் பாண்டுரங்கனைக் கண்டேன், "மன்னன் திருமார்பும் வாயும் அடியிணையும்" என்ற கணக்கிலே. திருமார்பு பரந்திருந்தது; வாய் புன்னகை நிறைந்து அடியாரை அழைத்து மாற்றம் கொள்வதுபோல் காணப்பட்டது. அடியினை அடியார்களது சென்னி பொருந்துவதற்கெனக் காத்து நிற்பதுபோல் தோன்றியது. பெருமானின் கரங்கள் இரண்டும் இடுப்பில் அமைந்துள்ளன. திருக்கண்கள் அகன்று, நீண்டு காதளவும்

பரந்துள்ளன; கோலநீள் கொடிமூக்கும், பரந்த திருநுதலும், தலையில் கட்டிய பட்டுப் பாகையும், பின்னே அமைந்துள்ள பிரபையும், தலைக்குமேல் பணங்களைக் கவித்த ஆதிசேடனும்—ஒவ்வொன்றும் என்னைப் பரவசமாக்கியது; "தோள்கண்டார் தோளே கண்டார்" என்ற நிலையிலே, ஒவ்வொன்றையும் முடியக் காண்பதற்கு முன், கூட்டத்தால் வெளியேற்றப்பட்டேன்; இந்த வெள்ளத்தில் எதிர்த்து நீந்திச் செல்லுவது இயலாததாயிற்று. பின்னர் இரண்டு முறை உள்ளே சென்று கண்களாரளவும் பெருமானைக் கண்டு களித்தேன். இன்றுதான் என்னுடைய சென்னி இறைவனது அடியிணையில் தாழ்ந்து உத்தமாங்கமாயிற்று. கண்ணிற் காணாத மூர்த்தியைக் கண்டு களித்துத் தலையையும் அவனது அடிகளிலே பொருத்தி என்கைகளாலே மாலையை அணிவித்த பெருமைஅன்றொரு நாள்தான் எனக்கு வாய்த்தது.

இந்த ஆலயத்திற்கு இடப் பக்கமாக லக்ஷ்மி, ராதா, சத்தியபாமை இவர்களது ஆலயங்கள் உள்ளன. வலப் பக்கமாக ருக்குமணிப் பிராட்டியாரது ஆலயம் உள்ளது. அடியார்கள் இப்பிராட்டியாரை ருக்மாபாய் என்று பரிவுடன் அழைக்கின்றனர். கனிந்த உள்ளத்தினளாகையாலே ருக்குமணிப் பிராட்டி அடியார்களுக்கு அருள்வதற்காக இங்கு எழுந்தருளிவிட்டாள். கண்ணன் இவளைத் தேடிக்கொண்டு துவாரகையிலிருந்து மதுரைக்கும் பிருந்தாவனத்திற்கும் சென்று, அங்கு இவளைக் காணாமையால், கோபால வேஷத்துடன் கறவையுங் கன்றுங் கோபாலர்களும் புடைசூழ இங்கு வந்து பிராட்டியுடன் கூடினான் என்பது தல புராணத்தி லுள்ளது. அடியார்களுக்கு அருள் செய்வதற்கெனப் பெருமானை இங்கு வரச்செய்த பெருமை, இப்பிராட்டிக்குத் தனிப்பட்ட தொன்றாகும். ஆதலால் மக்கள் மிகப் பரிவுடனும் அன்புடனும் ஆர்வத்துடனும் இந்தப் பிராட்டியாரை வழிபடுகின்றனர். கோயிலுக்குள் மற்றும் பல மூர்த்திகளை வணங்கிவிட்டு வெளியே வந்தேன்.

நடுப் பகலில் கண்ணன், லக்ஷ்மி, ருக்குமணி முதலியோருக்கு திருமஞ்சனம் நிகழ்கின்றது. பின்னர் மூன்று மணிக்கு இவர்கள் ஆடைகள் ஆபரணங்கள் அணிந்து அடியார்களுக்குக் காட்சியளிக்கின்றனர்.

கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் பல மடங்கள் உள்ளன. இவற்றில் எப்போதும் பஜனையும் அடியார்களுக்கு அன்னதானமும் செய்யப்படுகின்றன.

அர்ச்சா ரூபத்தில் இங்கு எழுந்தருளியிருக்கும் கண்ணன், தன்னை மெய்யடியார்களுக்குக் காட்டிக்கொடுத்ததும் அவர்களுக்காகத் தான் செய்தனவும் "பக்த விஜயம்" போன்ற நூல்களில் பரக்க விவரிக்கப்படுகின்றன. இவனது குணங்களைப் பற்றிய கீர்த்தனைகள் நாம் கேட்டுவருகிறோம்; தென்னாட்டிற்குத் திலகம்போல் ஸ்ரீரங்கம் அமைந்துள்ளது; ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இத்தலத்தின் பெருமையைப் பாடிப் பக்தி மார்க்கத்தைத் தழைக்கச் செய்தனர். இவ்வாறே பக்தி மார்க்கம் தழைத்தோங்கியது வடநாட்டுத்திலகமான பண்டரீபுரத்தில். ✽

# ★ கம்பியில் கல்யாணம் ★

— விஜயலக்ஷ்மி வரதராஜன் —

★

"சார்! பையனின் சம்மதம் தெரிந்தால் உடனே அவர்கள் கல்யாணத்தை நடத்திவிடச் சித்தமாக இருக்கிறார்கள். பெண்ணின் போடோவைப் பாருங்கள். ரம்பை என்றால் தகும். ஜாதகப் பொருத்தமோ கேட்க வேண்டாம். என்ன, நான் சொல்லுவது" என்று ஒரு வாலிபனின் தகப்பனாரிடம் தரகர் கல்யாணத்திற்காகத் தூண்டிக் கொண்டிருந்தார்.

"தரகர்வாள்! பெண்ணின் போடோ எங்களுக்கெல்லாம் ரொம்பவும் பிடித்து விட்டது. உடனே நான் பையனுக்கு எழுதுகிறேன் சார்...இந்த இடத்தையே முடித்துவிட என் மனம் துடிக்கிறது..." என்று கூறிக்கொண்டிருக்கையிலே,

"சார்...தந்தி!" என்ற ஒரு குரல் சைக்கிள் மணியோசையோடு இணைந்து வாயிற் பக்கத்திலிருந்து உள்ளே நுழைந்தது.

தந்தி என்ற வார்த்தை காதில் விழுந்ததும் அவ்வீடே தரையோடு பெயர்ந்து ஆட்டம் கொடுப்பது போன்ற ஒரு உணர்ச்சியால் தாக்கப்பட்டு விட்டிலுள்ளோர் அனைவரும், தரகர் உள்பட வாசலுக்கு ஓடி வந்தனர். தந்தியைக் கைநீட்டி வாங்க ஒருவருக்கும் தைரியம் இல்லை.

எவர் வாங்கினரோ? யார் பிரித்து விஷயத்தைக் கூறினரோ? அவர்கள் நடுங்கி பயந்ததற்கேற்ப ஒரு இடிபோன்ற விஷயத்தையே அந்த பயங்கரத் தந்தி தாங்கி வந்திருந்தது.

"சுந்தருக்கு அபாயம். உடனே புறப்படவும்" என்று அந்தத் தந்தியில் எழுதியிருந்தது. ஒரு சிநேகிதன் அடித்திருந்தான்.

"யார்? சுந்தருக்கா?" என்ற அலறல் பலரிடமிருந்து ஏக காலத்தில் எழுந்தது. தரகரின் முகம் பீதியால் வெளிர தலையைத் தடவிக்கொண்டே அவர் நழுவி விட்டார்.

எந்த சுந்தருக்காக தரகரை அழைத்து கல்யாண விஷயம் பேசிக் கொண்டிருந்தனரோ... அந்த சுந்தருக்கா அபாயம்?

குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்து, தூர தேசம் சென்று பெற்றோரைக் களிப்பூட்டும் சுந்தருக்கா அபாயம்?......என்று பல திக்கிலிருந்து கிலி கலந்த பேரொலி எழுவதுபோல் பிரமை.

எந்த மகனால் தங்கள் குடும்ப கௌரமும் பெருமையும் உயரும் குடும்பநிலை மாறும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெற்றோருக்கா இந்த இடி போன்ற விஷயம்?

வடிவழகன், சாமர்த்தியம் மிகுந்த அறிவாளி என்ற பெயர் வாங்கி, தன் திறமை என்னும் சொக்குப் பொடி போட்டு அனைவரையும் மயக்கி பெண் கொடுக்க போட்டியிடும்படி செய்த சுந்தருக்கு இப்படி ஒரு அபாயம் நேரலாமா?

கல்யாணத்திற்காக வரப் போகும் தன் சுந்தர் அண்ணனைக் காண துடித்த இளம் உள்ளங்களை வாடி வதங்கச் செய்து விட்டதே இத் தந்தி.

பெற்றத் தாயின் கதறலும், தந்தையின் துடிப்பும், குழந்

தைகளின் இணையிலா ரத்த பாசமும் எங்காவது கடன் வாங்கிக் கொண்டாவது அவர்களனைவரையும் அத் தூர தேசத்திற்கு ஓடும்படி தூண்டியது.

சிலமணிநேரத்தில்வீடுபூட்டப் பட்டிருந்தது. சுந்தரின் உடன் பிறந்த சுற்றத்தினர் அனைவரும் ரயிலில் சென்றுக்கொண்டிருந்தனர். அவர்கள் உடல் உட்கார்ந்திருந்தனவே தவிர உள்ளங்கள், அவர்களை இழுத்துச்செல்லும் ரயிலைப்போலவே ஒவ்வொரு விதமாக ஓலமிட்டுக் கொண்டிருந்தது.

பெருகிய கண்ணீரும், சிந்திய மூக்குமாக செல்லும் அவரைப் பார்த்து சக ப்ரயாணிகளின் உள்ளமும் உருகியது. மன வேகத்தின் நிலைக்கேற்ப அவ் வியந்திரத்தால் ஓட முடியுமா? அல்லது அவர்கள் செல்லும் ஊர்தான் அவ்வளவு அருகிலிருக்கிறதா?

ஆ! ரயில் நிலையம்!

அவர் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. அனைவரது குடலும் குலுங்கத் தொடங்கியது. ஐயோ! யார் என்ன செய்தி கொண்டு வந்திருப்பார்களோ! சுந்தருக்கு எப்படி யிருக்கிறதோ! என்ற பயம் மேலோங்கி எழுந்தது.

" சுந்தர்...ஐயோ.......சுந்தர் எங்களை துக்க சாகரத்தில் ஆழ்த்தாதேடா......" என்று அவன் தந்தை வேண்டினார்.

" சுந்தர்......என் கண்ணே! என் வயிற்றில் பாலை வாரடா" என்று அவன் அன்னை புலம்பினாள்.

" சுந்தர அண்ணா! எங்களையெல்லாம் ஏமாத்தாதேடா..." என்று குழந்தை உள்ளமும் ஏக்கம் பெருக நினைத்துக் கொண்டன.

ஆ! என்ன ஆச்சரியம்! மனித இயல்பே ஒரு விசித்திரந்தான். ஸ்டேஷன் வருமா... வருமா என்று தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு வந்து விட்டதே என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ரயில் நிலையத்தில் எல்லோரும் நம்மைத் தேடிக் கொண்டு யார் வந்திருக்கிறார்? என்று சுற்றி பார்த்தனர். அப்போது நாகரீகமான உடையணிந்த ஒருவன் வந்து "நீங்கள் சுந்தரின் வீட்டவர்கள் தானே" என்று மிக்க அடக்க ஒடுக்கத்துடன் வினவினான்.

" அ.... ஆமாம்....சுந்தருக்கு எப்படியிருக்கிறது. அவன் எங்கிருக்கிறான்...நீங்கள்......" என்று சுந்தரின் தாயார் பதறினாள். " அம்மா!" என்ற குரல் அமைதியாக பின்புறத்திலிருந்து வந்தது.

" அம்மா! சுந்தர் இதோ இருக்கிறேன். எனக்கு ஒன்றுமில்லை" என்று குறும்பு நிறைந்த சிரிப்போடு கூறினான்.

ஒருவருக்கும் விஷயம் விளங்கவில்லை. நம்பிக்கையற்ற கண்களோடு, சந்தேகம் நிறைந்த பயத்தோடு அவனை நோக்கினர்.

" சுந்தருக்கு அபாயமில்லையப்பா......கல்யாணம்!" என்றான் மீண்டும்.

" என்...டா!...கல்யாணமா? ......உடம்பில்லையா......? என் கண்ணே, புதிராயிருக்கிறதே! சொல்லடா" என்று அவனை கட்டித் தழுவினாள்.

"இதோ...என் அருகில் நிற்கிறானே, அவன் தங்கையை தானம்மா என் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறேன். ஏதோ என்னவோ என்று என் மீது கோபமும், வெறுப்பும் அடையாதீர்கள். விவரமாகக் கூறுகிறேன்" என்று தொடங்கினான்.

"டேய் சுந்தர்! பாவம் அவர்கள் களைத்து வந்திருக்கிறார்கள். 'வெயிட்டிங் ரூமி'ல் டிபன், காப்பி காத்திருக்கிறது. அங்கு அழைத்து வா அவர்கள் சாப்பிட்டுக் கொண்டேயிருக்கட்டும். நீ விஷயத்தைக் கூறடா" என்றான் சம்மந்தியாக வரப்போகும் சிநேகிதன்.

அப்படியே அங்கு சென்ற பிறகு மீண்டும் தொடங்கினான் சுந்தர்.

"அம்மா!... அப்பா!...நான் இந்த ஊரிற்கு வந்த புதிதில் பாஷையும் புரியாது, ஊரும் தெரியாது திண்டாடியபோது எனக்கு பல விதத்தில் உதவி புரிந்ததோடல்லாமல் தான் இருக்கும் வீட்டிலேயே இடம் பார்த்து கொடுத்து என்னைத் தலையால் தாங்குகிறான். கவலைப்படாதீர்கள் என்று எழுதினேனே அவன் இவன்தான். என் ஆபீஸிலேயே வேலை செய்யும் சக உத்யோகஸ்தன்.

இவனுக்கு ஒரே தங்கை. தாய் தந்தையற்ற அவளுக்கு இவனே சகலமும். தன் உயிரைவிட மேலாக அவளை கண்ணில் வைத்து இமையால் மூடி வளர்த்தான். தன் அருமைத்தங்கைக்காக கையிலிருக்கும் பணத்தோடு உத்தம மனைவியின் நகைகளையும் சில வற்றை விற்று, தங்கையை நல்ல இடத்தில் விவாகம் செய்து கொடுத்து கண்குளிர காணத் துடித்தனர் இத் தம்பதிகள். கல்யாணமும் நிச்சயமாயிற்று. பத்திரிகையும் அடித்தாயிற்று. இரண்டே நாள் கல்யாணத்திற்கு என்ற நிலையில் அந்த கிராதக குணம் படைத்த பிள்ளை வீட்டினர், கலி தெய்வமாய் கூத்தாடும் பணத்திற்காக–பிச்சைக் காசிற்காக ஏதோ தகராறு செய்து கல்யாணத்தை நிறுத்தி விட்டனர்.

கண் கலங்கி நிற்கும் அந்தப் பெண்ணையும், செய்வதறியாது தவிக்கும் இந்தத் தம்பதிகளையும் பார்த்து என் நெஞ்சம் தவியாய் தவித்தது; உருகியது; குழம்பினேன்; சிந்தித்தேன்.

என் சிநேகிதனின் எதிரே சென்று "நண்பா! குழம்பாதே. இதோ நானிருக்கிறேன். உன் கவலையைத் தீர்க்க. நான் மணக்கிறேனடா உன் தங்கையை" என்று அவனைத் தட்டிக் கொடுத்து எழுப்பினேன்.

"சுந்தர்...நீயா? நீயா!...... மணக்கிறாய்" என்று குதிக்கத் தொடங்கி விட்டான். ஒருவர் துன்பப்பட நாம் பார்த்து நிற்பதா? தாய் தந்தையற்ற ரதி போன்ற ஒரு இளம் பெண்ணின் வாழ்வு பாழாவதா? அவள் உள்ளம் வெந்து வேகுவதா? அந்த நிமிடம் முதல் என் இதயத்தில் அமர்ந்துவிட்டாள் அக்காரிகை.

அம்மா! இதை யெல்லாம் எழுத நேரமில்லை. கல்யாணம் என்றால் வருவீர்களா? நீங்கள் தீர்மானித்துள்ள பெண்ணையே நிச்சயிக்க முடிவு செய்வீர்கள். இந்தக் கல்யாணத்

தைத் தடை செய்வீர்கள். அதனால் ஒரு குடும்பமே துக்கத்தில் சுழலும். அதற்காகவே இந்த நண்பன் மூலமே தந்தியடிக்கச் செய்தேன். குடும்பத்தோடு வந்துவிட்டீர்கள். எப்படியம்மா......என் யோசனை? ஒரு கம்பி மூலம் செய்தியனுப்பி கல்யாணத்தையே முடித்துவிட்டேன்'' என்று கைதட்டி குழந்தைபோல் சிரித்தான்.

''அம்மா! தாய் தந்தையற்ற பெண்ணுயிற்றே. சீர்வகையெல்லாம் நினைத்தபடி வருமோ, வராதோ என்று கவலைப்படாதே. எனக்கு வரதட்சிணை என்று கையில் வேண்டாம். எல்லாவற்றிற்கும் உன் தங்கைக்கு நகையாகப் போட்டுவிடப்பா என்று அவனிடம் கூறிவிட்டேன். அம்மா! மேலும் ஒரு விஷயம். நான் மாதா மாதம் உங்களுக்கு ஊருக்கு அனுப்பிய பணம் போக, தாம்தூம் என்று செலவழிக்காமல் 5000 ரூபாய் சேர்த்து வைத்திருக்கிறேன். நான் ஒன்றும் அசடல்லம்மா! என் சிக்கன வாழ்வின் சேமிப்பை உன்னிடம் கொடுத்து விடுகிறேனம்மா'' என்று சுந்தர் கூறிக்கொண்டே போனுன்.

அவன் தாய் திடீரென சீறத் தொடங்கினுள். ''ஏண்டா சுந்தர்! நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். மூச்சுகூட விடாமல் போட்மெயில்போல் பேசிக்கொண்டே போகிருய். கல்யாணமாம், சிநேகிதனுக்கு உதவியாம்...... நன்ருயிருக்கிறது. முன் பின்னறியாத பெண்ணை, அதுவும் கல்யாணப் பத்திரிகை அடித்த பிறகு கல்யாணம் நின்றுபோன பெண்ணை மணக்கிருனும். அதெல்லாம் முடியாது. பெற்றவர்கள் மனம் நோகவா செய்கிருய்?

ஊரில் தரகர் ஒரு ஜாதகமும், பெண்ணின் போடோவும் கொண்டு கொடுத்தார். பெண் அழகு சொட்டுகிறது. அதற்கு நாங்கள் வாக்கும் கொடுத்துவிட்டோம், அதை கையில் வாங்கும்போதுதான் அசட்டுத்தனமாக நீ அடித்த இந்த தந்தி வந்து எங்களை யெல்லாம் கலக்கிவிட்டது. அந்தக் கலவரத்தில் அப்படியே அப்பா ஜோபியில் சொருகிக் கொண்டார். 'எங்கே அதைக் கொடுங்கள்'' என்று ஆவேசம் பொங்க கத்தவே தொடங்கி விட்டாள்.

உடனே போடோவை சுந்தரிடம் நீட்டினுர்.

அதை நோக்கிய சுந்தர் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினுன். தன் நண்பனுக்கு செய்கை செய்து அவன் தங்கையையும் வரவழைத்தான்.

''அம்மா! அந்தப் போடோவையும், இந்தப் பெண்ணையும் பார்'' என்ருன்.

''அட! டேய் இவளா நீ பார்த்திருப்பவள். என்ன ஆச்சரியம்! இந்தப் போடோவில் இருப்பவள் இவளேதான். ப்ராப்தம் என்பது எப்படி அமைகிறது பார்த்தாயா? சுந்தர்! தாராளமாக உன் இஷ்டப்படி செய்யடா. எனக்கிருக்கும் ஆசையில் இதேயிடத்தில் கூட கல்யாணத்தை நடத்திவிடச் சொல்லுவேன்'' என்ருள்.

தன் பெற்ருேரின் முகமலர்ச்சியைக் கண்டு சுந்தர் ஆனந்தமடைந்தான்.

அழகான மருமகளையும், தன செல்வமகனின் திறமையையும் கண்டு அவர்கள் உடம்பு இருஉம்டபாகப் பூரித்தது.

# பிளேட்டோவின்

# அரசியல் முடிபு

ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

கட்புலன் காண்கின்ற பொருளும், செவிப்புலன் நுகர்கின்ற பொருளும்,—சுருங்கக் கூறுமிடத்து இந்திரியங்கள் நுகர்கின்ற எல்லாப் பொருள்களும்—நித்தியமாக—அழிவற்றதாகக் கருதுவதற்கு இடமில்லை. இந்திரியங்களுக்கு அப்பால் இருக்கின்ற ஒரு பெருநலம், (The Good), ஒரு பெருநெறி—அதுதான் அழிவற்றது என்று பிளேட்டோ கருதுகின்றார். இப் பிரபஞ்சம் அந்தப் பரம்பொருளின் பிம்பம் அல்லது நிழல் என்று கூறலாம். ஞானி பால் (St. Paul) மொழிகின்ற உண்மை ஆராய்ச்சிக்குரியது. 'காணப்படுகின்ற பொருள்களை நாம் நோக்க மாட்டோம்; காணப்படாத பொருள்களையே எங்கள் நயனங்கள் நண்ணும். ஏனெனில் இந்திரிய வட்டத்திற்குள் மிதந்துவரும் எதுவும் அழிவுறும்; இந்திரியங்களுக்குப் புறம்பாய்க் காட்சி அளிக்கிறது அழிவற்றதாகும்'. ஆழ்வாரும்,

'அண்டர் கோன் அணியரங்கன் என் னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே'

என்று உள்ளம் உருகப் பாடும் பாட்டும் நம் சிந்தையில் ஒலிக்காமலில்லை.

பிளேட்டோவின் அடிச்சுவட்டைத்தான் ஞானி பாலும் பின்பற்றுகிறார். என்பது சொல்லாமலேயே விளங்கும். 'குடியரசு' என்ற நூலின் இறுதியில் அவர் வகுக்கின்ற பாதையில்செல்லுகிறவர்கள் நற்கதி அடைவார்கள் என்பது திண்ணம். 'மேலே நம்மை அழைத்துச் செல்லுகிற தூய பாதையை இடையறாது பின்பற்றுவோமாக; அறநெறியையும், ஞான நற்சுடரையும் நற்றுணைகளாகக் கொள்ளுவோமாக' என்று நமக்கு நல்லதோர் உபதேசஞ் செய்கின்றார். மேலும் அவர் கவிகளைத் தம் குடியரசிலின்று துரத்தி அடித்ததின் மர்மத்தையும் நாம் அறிவோம். இவ்வுலகமே ஒரு நிழல்; அந் நிழலைப்பற்றி எழுந்த கருத்தும் மற்றொரு நிழல். அந் நிழலுக்கு உருக் கொடுக்கின்ற கவிகளும் பொய்யர்கள். ஆதலால் அவர்களுக்குக் 'குடி அரசில்' இடமில்லை. ஆனால் அவர் மாணுக்கரான அரிஷ்டாடில் வேறு சுருதியில் மொழிகின்றார். உலகம் உண்மை; அவ் வுண்மையின் வெண்ணெயை நாம் நன்கு சுவைக்கத் திரட்டித் தருகின்ற பாவலர்கள் போற்றத் தகுந்தவர்களே என்று கருதுகின்றார் அரிஷ்டாடில். அவரவர் கண்ட உண்மைக்கேற்றவாறு உபதேசமும் வேறுபடுகின்றதன்றோ?

குடியரசு என்ற நூலின் ஏழாம்பிரிவில் ஒருசித்திரம் நம்முன் விரிகின்றது. அச் சித்திரத்தில் பிளேட்டோ கண்ட உண்மையொளி அதில் படரக் காண்கின்றோம்.

'ஒரு குகை; அதன் வாய் வழியாக ஒளி உள்ளே பாயும். அக் குகையில் அங்கும் இங்கும் திரும்பிப் பார்க்க முடியாதபடி

விலங்கிடப்பட்ட மாந்தர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். அவர்களுக்கு மேலும், பின்பும் சற்றுச் சேணில் ஒரு தீ கொழுந்துவிட்டெரிகின்றது. தீயிக்கும், சிறைபட்ட மாந்தர்களுக்கும் இடையே ஓர் உயர்ந்த பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதை வழியே ஒரு சுவர் ஓடுகின்றது. இந்நிலையில் அவர்கள் பார்ப்பவை நிழல்களே. அச் சுவர்மீது வெளிப் பொருள்களின் நிழல்கள்தான் நடனமாடும். இந் நிழல்கள்தான் அவர்களுக்கு உண்மைகளாகத் தோன்றும். ஆனால் தம் தம் தளைகளை அறுத்தெறிந்துவிட்டு நோக்கினால், தாங்கள் முன்பு கண்ட உண்மைகள் நிழல்களே என்று உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

முதல் முதலில் உண்மையின் ஒளியைக் கண்டு திகைப்பார்கள். பிறகு அந்த ஒளி பழக்கத்தில் மனிதனுக்கு இயல்பாய்ப் போய்விடும். இந்த வையகத்திற்கு ஒளி தருவது சூரியனே. ஆனால் இந்தச் சூரியனும் அந்தச் சோதிப் பிழம்பின் பிம்பமே. நம்முன் விரிந்து கிடக்கின்ற பிரபஞ்சம் அந்த மூல தத்துவத்தின் நிழலே. இவ்வுலகில் எத்தனை ஜீவராசிகள் இருக்கின்றனவோ, அத்தனை ஜீவராசிகள் விண்ணகத்திலிருக்கின்றன. விண்ணகத்தில் இருக்கக்கூடிய அசல்களின், நகல்களே இவ் வுலகத்திலுள்ள பொருள்கள் யாவும்' என்று பிளேட்டோ கூறுகின்றார். இங்கே இருக்கிற சாதாரண பூனை அங்கே ஒரு தங்கப் பூனையாகக் காட்சியளிக்கும்; இத்தகைய சர்ச்சையை நோக்குமிடத்து, மத்வர்களுடைய சித்தாந்தம் நம் மனத்திற்கு வராமற் போகாது. ஜீவராசிகளுக்குத் தகுந்தபடி இன்பத்தில் வேறுபாடு ஏற்படும் என்று அவர்கள் மொழிகின்றனர். ஆனால் முக்தி அடைந்த ஜீவன் எந்த வடிவையும் எடுத்துக்கொண்டு அதற்கேற்ற இன்பத்தை நுகரமுடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

உலகத்தில் தோன்றிய வனப்பு வாய்ந்த பொருள்களை நாம் சிந்தித்தோமானால், இப் பொருள்களுக்கு அப்பாலுள்ள சுந்தர வடிவங்கள் தோன்றும். இறுதியில் ஆண்டவனின் சொற்கடந்த அழகை நாம் பருகமுடியும். நம்மாழ்வாரும் இதே கருத்தைத் தம் பாசுரத்தில் மிக்கக் கவின்பெற அமைத்துள்ளார்.

'அடங் கெழில் சம்பத்து
அடங்கக் கண்டு ஈசன்
அடங் கெழில் அஃதென்று
அடங் குக உள்ளே'

ஆத்மாவுக்குச் சிறை உடல்தான், ஆர்பிக் கொல்கைகளும், பைத்தகோரரின் கருத்துக்களும் இவ் வுண்மையை வலியுறுத்துகின்றன. பிளேட்டோவும் அவர்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகின்றார். உடலை வாட்ட வேண்டியதில்லை. அழகையும் நன்மையையும் மனிதன் நாடினால், காயச் சிறையிலிருந்து வெளியேறலாம். சங்கீத வாயிலாக ஒருவன் அழகுக் கலையின் ரகசியங்களை அறியமுடியும். திருவைத் தியானித்தால் ஆண்டவனை அடையமுடியும் என்று வைணவர்கள் கருதுகின்றனர். உண்மையின் மார்பில்தான் திருவீற்றிருக்கிறதன்றோ? அன்பென்பது வனப்பின்பால் வைக்கப்படும் தூய்மையான உணர்ச்சியே.

அல்லது அழியாத் தன்மையான அன்புதான் டாண்டேயை அமர நாட்டிற்கு அழைத்துச் சென்றது. அழகையும் உண்மையையும் பிரிக்க முடியாதென்று கீட்ஸ் கூறுகின்றார். அன்புதான் உண்மைக் கதவுகளைத் திறக்கும் என்று ஷெல்லி மொழிகின்றார். இயற்கை அன்னையைத் தொழுவதால் பேரின்ப வீட்டை அடையமுடியும் என்று வேட்ஸ்வொர்த்து உபதேசஞ் செய்கின்றார். கலை மூலம் அல்லது சங்கீத வாயிலாக ஆண்டவனுடைய அருட்பிரகாசத்தை நாடமுடியும் என்று பிரௌனிங் (Browning) நயம்பட நவில்கின்றார். *

* 'But God has a few of us whom
He whispers in the ear;
The rest may reason and welcome:
'its we musicians know.'

[*Abt. Vogler.*]

அழகை வணங்கினால் ஆண்டவன் அருட் கபாடம் திறக்கும் என்று பிளேட்டோ கூறுகின்றார். இசையை அவர் போற்றுகிறார். அது அழகுக் கோயிலின் வாசலுக்கு அழைத்துச் செல்லும். பிளேட்டோவின் உபதேச மொழிகள் பற்பல சுருதிகளில் ஒலிக்கின்றன. உலகம் வெறுந் தோற்றம் என்ற அத்துவைத உபதேசம் ஒருபால் விரியும். அநேக ஆத்மாக்களைப் பற்றிப் பேசுகிற மத்துவ மத நிழலும் ஒருபால் சற்று ஆடும்; ஆண்டவனுக்கு இந்தப் பிரகிருதி, ஆத்மா எல்லாம் சரீரமாகும் என்ற சித்தாந்தத்திற்கும் அவர் நூலில் மற்றொரு பால் இடமிருக்க உணர்வோம். அவரவர் நோக்கத்திற்குத் தகுந்தவாறு அவருடைய நூலுக்கு உரை செய்துகொள்ளலாம். எல்லாவற்றிற்கும் அது இடந்தருகின்றது. இப்படியெல்லாம் உயர்ந்த கருத்துக்களைப் பற்றி வானளாவப் பேசுகின்றவர் அவர் நாட்டில் உழலும் அடிமைகளைப் பற்றிச் சிந்தித்தாரில்லை. அடிமைகளுக்கு அகவுயிர் வாழ்க்கை இல்லையென்று கருதினார் போலும். அரசியலில் முதல் 'பாசிஸ்ட்' (Facist) பிளேட்டோ என்று அச்சமின்றிக் கூறலாம். மனிதனுக்காக அரசியலா? அல்லது அரசியலுக்காக மனிதனா? என்ற வினாவை எழுப்பலாம். பிளேட்டோவின் 'குடியரசை' ஒருவன் படிப்பானாகில், அரசியலுக்காகவே மனிதன் படைக்கப் பட்டிருக்கிறான் என்ற உண்மையை உணராமலிருக்கமாட்டான். பிள்ளையைக் கூட அவன் சுவதானிமாகப் பெறமுடியாது என்றதை அவன் அறியாமற் போகான். ஹெகல், பொசாங்கே, கார்ல் மார்க்ஸ், ஹிட்லர்—போன்றவர்களுடைய கொள்கையின் முதல் வேர் பிளேட்டோ நூலில் படரப் பார்ப்பான். ஆனால் உலகத்தில் மனிதனின் கால்கள் வேர் ஊன்றியிருந்தாலும், அவன் கைகள் விண்ணைப் பிடிக்க விரைகின்றன என்ற தத்துவத்தை நமக்களித்த பிளேட்டோவை நாம் ஒரு சான்றோன் எனக் கருதி அவருக்குப் புகழ்மாலை சூட்டுவோமாக. கால வெள்ளத்தையும் அவர்களுடைய சில கொள்கைகள் எதிர்த்து நீந்தும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. சாக்ரடீஸ் பெற்ற ஞானக் குழந்தைகளில் அவர் மிகச் சிறந்தவர் என்று நாம் உவகை நறவுண்டு களிக்காமலிருக்க முடியுமோ!

# ★ சொல்லட்டுமா! ★

ஹாஸ்ய நடிகர் எல். நாராயண ராவ்.

—★—

காசி ஐயரின் ஹார்மோனியத்தில் எப்படி மயங்கியிருப்பேனே அதேபோல் கிட்டப்பாவின் கானம் என்றால் தனி ஆசைதான் எனக்கு. நான் நடிக்கச் சென்ற இந்த கம்பெனியில்தான் முதன் முதலில் கிட்டப்பாவைச் சந்தித்தேன். அப்போது அவருக்கு வயது ஐந்து.

'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' எனபதற்கேற்ப அந்த சிறு வயதிலும் கணீர் என்று இனிக்க இனிக்கப் பாடுவார். அப்போதே அப்படிப் பாடும் அவர் பெரியவரானதும் பாடியதில் என்ன வியப்பு என்று எனக்குத் தோன்றும். அவர் பாட்டு எங்கு நடந்தாலும் போய் விடுவேன். அவர் நாடகமும் அப்படியே. அந்த ஐந்து வயதுக் குழந்தையாயிருக்கும் போது, மேடையிலேயே உட்புறம் படுத்துத் தூங்கி விடுவார். பாட வேண்டிய சமயம் போய் எழுப்புவார்கள். உடனே எழுந்து வந்து நாலைந்து பாட்டு பாடி விட்டு, மறுபடியும் தூங்கி விடுவார். எனக்கெல்லாம் ஆச்சரியமாகவும், வேடிக்கையாகவும், இருக்கும். தூக்கக் கலக்கத்திலும் இவ்வளவு சிறிய குழந்தை, நடுவில் மறந்து போகாமல், பாட்டின் சுவை குன்றாமல், எப்படி பாடுகிறான் என்று எண்ணுவேன். என் உயிர் தோழர்களில் அவர்ஒருவர்என்பது கூறாமலேயே அனைவருக்கும் தெரிய வேண்டியது.

அந்த நாடகக் கம்பெனியில் இடையில் வந்து நடித்தவர்கள் அநேகர்கள். அவர்களில் கே. எஸ். அனந்த நாராயண ஐயர், ராஜாமணி அம்மாள், புதுச்சேரி ரத்னசாமி பிள்ளை, குல்ரோஜ் பாலசுந்தரம், பப்பூனுக்கு திருவாளர் குப்புசாமி சாஸ்திரிகள். இவர்கள் முக்கியபட்டவர்கள்.

இந்த கால நாடகத்திற்கும், அந்த கால நாடகத்திற்கும் வித்தியாசம் அதிகம். அப்போதெல்லாம் நாடகம் என்றால் அதற்கு ஒரு தனி பத்ததி உண்டு. ஆரம்பத்தில் சூத்திரதாரன், விதூஷகன் இருவரும் முதலில் தோன்றி விக்னேஸ்வரரிடம் ப்ரார்த்திப்பார்கள். இவர்களது ப்ரார்த்தனையும்,, விக்னேஸ்வரர் கூறும் பதிலும் சங்கீதத்திலேயே நடைபெறும். முதல் சீன் முடிந்ததும் சரஸ்வதியைப் ப்ரார்த்திப்பார்கள். அதன் பிறகு மோகினி, மோகினிராஜா தோன்றி ஒரு சிறிய சீன் நடைபெறும். அதன் பிறகே நாடகம் துவங்கும். அதில் மோகினி வேஷம் எனக்கும், மோகினி ராஜா வேஷம் காசி ஐயருக்கும், மனுபளியாகி விட்டது. சரஸ்வதி வேஷத்திற்கு அனந்த நாராயண ஐயர்.

எனக்கு...மோகினி வேஷத்தோடு நிற்பது மனதிற்கு த்ருப்திகரமாகப் படவில்லை. மேலும் மேலும் பெரிய வேடங்கள் தாங்க எனக்கு ஆசை அடித்துக் கொண்டது. அப்போது ஹார்மோனியம் வாசிப்பவர் பெயரும் என் பெயரே.

நாராயண ராவ்தான். அவருக்கு என்னிடம் அலாதியான ப்ரீதி. அதனால் எனக்கு நிறையப் பாட்டுக்கள் சொல்லிக் கொடுத்தார். நான் விடுவேனு? நிறையக் கற்றுக் கொண்டேன். எல்லோரையும் தாஜா செய்து காசி ஐயரை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு சரஸ்வதி வேஷம் போட ப்ரயத்தனம் செய்தேன். கெஞ்சிக் கேட்டதோடு நில்லாது சரஸ்வதியாக நடித்தும் விட்டேன். நான் ரொம்ப நன்ருகப் பாடவும் பாடுவேன். எனக்குப் பின் பாட்டு நாகபட்டணம் வெங்கட்ராமய்யர் என்பவர். எல்லாம் சேர்ந்து என் நடிப்பை உச்சியில் கொண்டு வைத்து விட்டது.

கரூர் நாடகத்தில் நான் நடித்து வந்த சமயம் சில்லறை பார்ட் நடிக்கும் சப்தரிஷி ஐயர் என்பவர் என்னிடம், "சின்னசாமா ஐயர் என்ற பெரிய நாடகக்காரர், சேலத்தில் நாடகம் நடத்த இன்று ரயிலில் போகிருர். அவரை எனக்கு நன்ருகத் தெரியும். உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்" என்று அழைத்தார். நானும் குஷியோடு சென்றேன். ரயிலில் சின்னசாமா ஐயர், ராஜபார்ட் காட்டுராஜா க்ருஷ்ண ஐயர் இருவரிடமும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். பிறகு திரும்பி விட்டோம்.

நான் இந்த கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்த சமயம் நடேச பத்தர் என்பவர் என்னை தாராபுரம் அழைத்துச் சென்ருர். அங்கு அப்போது "வீரராகவலு நாயுடு கம்பெனி"யின் நாடகம் நடந்து கொண்டிருந்தது. அதில் என்னை சேர்த்து விட்டார். அந்த கம்பெனி முதலாளி வீரராகவலு நாயுடுவே ஸ்திரீபார்ட் போடுவார். அதில் புகழ்பெற்றவர். அவரிடம் என்னைப் பாட்டுப் பாடச் சொன்ஞர். சுட்டிப் பயலாகத் தோன்றும் என்னையும், என் பாட்டும் அவருக்கு ரொம்பப் பிடித்து விட்டது. அந்த கம்பெனியில் அப்போது ஆரிய கான செல்லப்பா ஐயர் என்பவர் நடிக்க வந்தார். அவர் என் மீது அன்பு கொண்டு வள்ளி நாடகத்தில் நாரதராக நடிக்க நல்ல பாட்டுகள் தயார் செய்து நடிக்க வைத்தார். நான் அவர் எதிர் பார்த்தபடியே திறமையோடு நடித்து சபாஷ்! பெற்று விட்டேன். அந்த கம்பெனியிலேயே பல நாடகங்கள் நடித்துவிட்டு ஊர் வந்து சேர்ந்தேன்.

நாடகத்திலேயே ஓடிய என் உள்ளம் வீட்டில் தங்க மறுத்தது. உடனே முன்பு ரயிலில் அறிமுகமான சின்னசாமா ஐயரை நாடி ஒரு சிறிய பெட்டியையும் தூக்கிக் கொண்டு சேலத்திற்குக் கம்பி நீட்டிவிட்டேன். அங்கு கொட்டகைக்காரர் சுப்பிரமணிய பிள்ளை வீட்டில் பெட்டியுடன் தங்கினேன். நான் சென்ற சமயம் ராஜபார்ட் ஜி. எஸ். முனுசாமி அங்கிருந்தார். சென்னையில் நாடகம் நடத்திக் கொண்டிருந்த "கன்னையா" கம்பெனி மானேஜர் பாலசுந்தர முதலியார் சேலத்தில் நாடகத்திற்குக் கொட்டகைப் பேச எதிர்பாராத விதமாக வந்தார். அவரிடம் என்னைப் பற்றி ப்ரமாதமாகப் புகழ்ந்து பேசி, அவர் கம்பெ

(தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க)

# நடுநிசிப் பேய்

—✽ புஜலா ✽—

சரியாக இரவு ஒன்றரை மணி. தெருவில் டக்......டக் என்ற ஓசை விட்டு விட்டு கேட்டுக் கொண்டிருந்தது. கடைசியில் தேய்ந்துகொண்டே வந்து அந்த சப்தம் ஓய்ந்து போயிற்று. அந்தத் தெருவில் ஒரு வீட்டில் சிறிது சலசலப்பு உடன் எழுந்தது. அரைத் தூக்கத்தில் ஒருவரை ஒருவர் சிண்டிஎழுப்பி கிசுகிசுக்க ஆரம்பித்தனர்.

"ஏய்! வாசலில் ஓசை கேட்கிறதே உனக்கு என்ன என்று தெரியுமா? கொஞ்சம் போய் பாரப்பா......" என்று தன் மகனை ஒருத்தி எழுப்பினாள்.

சிலர் தலை நீட்டியும் பார்த்தனர். அவர்கள் கண்ணிற்கு எதுவும் புலப்படவில்லை.

"போம்மா! எலியாக இருக்கும்..." என்றது அசிரத்தையோடு ஒரு குரல்.

"ஐயோ! எனக்கு திருடனே என்று தோன்றுகிறது. அப்பாவை கூப்பிடட்டுமா" என்று கிலியுடன் நடுங்கியது ஒரு ஆத்மா.

தைரியமாக ரேழிவரை சென்று வந்தது ஒரு உருவம்.

மறுநாள் காலை இதைப்பற்றி அவ்வீட்டுப் பெண்கள் சம்பாஷணை நடத்தினர். வெடியைத் தூக்கிப் போடுவது போல். "ஐயோ! அதுவா...நீங்களெல்லாம் இன்றுதான் கவனித்தீர்கள். தினமும் சரியாக ஒன்றரை மணிக்கு எனக்கு இதே ஓசை கேட்கிறது." என்றாள் ஒருத்தி.

"தினமுமா...?"

"ஆமாம்...நம்வீட்டு கதவிலுள்ள கம்பியைத் தட்டுவது போல் கேட்கிறது. இன்று இரவு கவனியுங்கள்" என்றாள் ஒருத்தி.

அதற்குள் "இதோ பாருங்கள்! இது எலியும் இல்லை, திருடனும் இல்லை. தினமும் வருகிறது என்றால் காத்தோ...கருப்போதான். இனிமேல் வாசலுக்கு நேராக யாரும் படுக்காதீர்கள்" என ஒரு கிழக் குரல் எச்சரித்தது.

மறுநாளும் அந்த ஓசையை அனைவரும் கவனித்து கிழவியின் வார்த்தையை ஊர்ஜிதமாக்கினார்கள்.

இப்படியே ஒருநாள் சப்தம் அடங்கியதும், இரண்டு வினாடிக்கெல்லாம் கதவைப் பலமாகத் தட்டும் ஓசைக் கேட்டது. "அம்மா! அம்மா!" என்று அழைக்கும் குரலும் உயர்ந்தது.

பயம் கவ்வ எல்லோரும் நடுங்கினர். ஒருவருக்கும் எழுந்துபோய் பார்க்க தைரியமில்லை. பாட்டியை எழுப்பத் தொடங்கினர். "பாட்டி! பாட்டி! இரவில் கதவைத் தட்டுமே பிசாசு அது இன்று கூப்பிடவேத் தொடங்கி விட்டது, அப்பாவும் ஊரில் இல்லையே. பயமாயிருக்கிறது பாட்டி" என்று கூவினர்.

"யாரடா அவன்?" என்றொரு கூச்சலோடு பழங்காலத்து பாட்டி கையில் ஒரு துடப்பக்கட்டையை எடுத்துக்

கொண்டு தைரியமாக முன்னேறி விளக்கேற்றினாள். கம்பி வழியாக நோக்கியதில் தன் பிள்ளை நிற்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

"என்னம்மா, இத்தனை நேரமாகக் கூப்பிடுகிறேன். எல்லோருமா தூங்கி விட்டீர்கள்? ஐயயோ! இதென்ன துடப்பக் கட்டை? என்னை அடிக்கவா?" என்றான் மகன்.

"டேய்! குழந்தைகளா அப்பாதான் வாருங்கள்" என்று உட்புறம் நோக்கிக் கூவிவிட்டு "ஏண்டா! நாளை வருவதாகக் கூறிவிட்டு நடு ராத்திரியில் வந்து நிற்கிறாய்?" என்றாள்.

"பூதமில்லையா?.......அப்பா தானா!" என்றவாறு குழந்தைகள் வெளியே வந்தன.

"பூதமா...என்னடா பைத்தியம்!"...என்றார் தந்தை.

"ஆமாம்......உனக்கென்ன தெரியும். இரவு சரியாக இந்த நேரத்தில் கதவைத் தட்டிக் கொண்டே பிசாசு உலாவுகிறது. இன்று அது தட்டிவிட்டு நகர்ந்ததோ இல்லையோ ...நீ வந்திருக்கிறாய்......பிசாசு தானோ என்று இந்த கட்டை சகிதம் வந்தேன்" என்றாள் கிழவி.

அவர் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார்.

"பேயாம்....பிசாசாம்...நல்ல அம்மா நீ. தினந்தோறும் திருட்டு பயத்திற்காக ரோந்து செல்லும் கூர்கா எல்லோர் வீட்டு கதவையும் தட்டிக் கொண்டு போகிறான். அதோ போகிறான் வந்து பார்" என்றார்.

கூர்காதானா......என்பதைக் கண்டு நிச்சயப் படுத்தி மனதைத் தேற்றிக்கொள்ள அத்தனை கண்களும் தெருக்கோடியை ஊடுருவின. ●

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

னியில் சேர்ந்து கொள்ளும்படி கூறினார். அவரும் உடனே தன்னுடன் சென்னைக்கு பயணமாகும்படி கேட்டார். நானும் இசைந்தேன். சாப்பாட்டை முடித்து வர ஹோட்டலுக்குக் கிளம்பினேன்.

திரும்பும்போது எனக்கு சின்னசாமா ஐயரைப் பார்க்க நப்பாசை தட்டியது. அதனால் யார் யாரையோ விசாரித்துக் கொண்டு போய் சேர்ந்தேன். அப்போது அங்கே ஸ்திரீ பார்ட் கல்யாண ராமய்யரும், ராஜபார்ட் களத்தூர் பெரிய மகாதேவய்யர் இருவரும் அமர்ந்திருந்தனர். அந்த கம்பெனியிலேயே அவர்கள்தான் ப்ரதான நடிகர்கள். சின்னசாமா ஐயர் என்னை ஒரு நிமிஷம்தான் ரயிலில் பார்த்திருந்தாலும் உடனே அடையாளம் கண்டு கொண்டு விட்டார்.

அவர் என்னைப் பாடச் சொன்னதும் தயங்காது கம்பீரமாகப் பாடினேன். மிகவும் திருப்தியடைந்து "தம்பி! நீ இங்கேயே எங்களுடன் தங்கிவிடு. நாங்கள் உன்னை நன்றுகப் புகழுடையும்படி செய்கிறோம்" என்று கூறினர். நான் என்ன செய்வேன். என் பாடு தர்ம சங்கடமாகிவிட்டது. நானே சென்னைக்கு வருவதாய் அவரிடம் வாக்குக் கொடுத்துவிட்டேன். இவர்களோ இங்கு தங்கும்படி கூறுகிறார்கள். ஒன்றும் புரியாது முழித்தேன். (தொடரும்

## காளிதாஸ ஜெயந்தி தினம்

—ராஷ்டிரபதி பிரசங்கம்—

ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் உஜ்ஜெயினியில் காளிதாஸர் ஜெயந்தி விழாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் காளிதாஸரின் நூல்கள் எத்தனையோ நூற்றுண்டுகளாக உருவாகி வந்த மனித லட்சியங்கள், நடைமுறை நிர்ணய குணங்கள் ஆகியவைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன என்று கூறினர்.


காளிதாஸர் ஞாபகார்த்தமாக விசேஷ தபால் தலையொன்று வெளியிடப்படுமென்றும் அறிவித்தார்.

காளிதாஸர் பற்றியும் அவரது மகத்தான நூல்கள் பற்றியும் இந்தியர்கள் என்ற முறையில் நாம் பெருமை கொள்வது நியாயமாக இருந்தாலும் காளிதாஸர் நம் அரிய மேதாவிலாசம். அவரது கவிதைகளில் மகோன்னத சிறப்பு ஆகியவை காரணமாய் உலகப் பிரஜையாகப் புகழ் பெற்றுவிட்டார் என்பதை நாம் மறக்கக்கூடாது. மேல்நாட்டார் இந்தியக் கலாசாரம், இலக்கிய மரபு ஆகியவைகளின் பெருமைகளைத் தெரிந்து கொள்வதற்கு காளிதாஸரின் நூல்கள் தான் வாயிலாக இருந்தன என்று அவர் கூறினர். இந்திய மக்களுக்குக்கூட மேனுட்டார் ஆராய்ச்சிதான் காளிதாஸர் பற்றி விழிப்புணர்ச்சியூட்டியது என்றும் அவர் குறிப்பிட்டார். காளிதாஸர் சகல தேசங்களிலும் சகல காலங்களிலும் வாழ்ந்த கவிஞர்களில் எல்லாம் மிகச் சிறப்புவாய்ந்த ஒருவராக விளங்குவதால் அவருக்கு முழு கௌரவம் அளிக்கும் வகையில் நாம் நடந்துகொள்வது கடமையாகும் என்று அவர் கூறினர். காளிதாஸரின் நூல்கள் எல்லா பாஷைகளிலும் வெளிவரவேண்டுமென்று ராஷ்டிரபதி தெரிவித்தார். "காளிதாஸரின் மிகச் சிறந்த ஞாபகச் சின்னம் அவரது இலக்கிய சிருஷ்டிகளே" என்று ராஷ்டிரபதி அழுத்தமாகக் கூறினர். காளிதாஸரின் பிறந்த தினம், பிறந்த இடம் ஆகியவை பற்றிநடக்கும் ஆராய்ச்சி வெற்றிகரமாகப் பூர்த்தியடையுமானல் மிகவும் நன்மையாக இருக்குமென்று ராஷ்டிரபதி தெரிவித்தார்.


## புதிய ஒரு ரூபாய் நோட்டுக்கள்

இந்திய சர்க்கார் ரூபாய் நோட்டுக்களில் புதியதொரு தொடர் வரிசையைச் சேர்ந்த நோட்டுக்கள் கூடிய சீக்கிரம் வெளியிடப்படும். இந்த நோட்டுகளில் மத்திய நிதி மந்திராலயத்தைச் சேர்ந்த பொருளாதார விவகார இலாகாவில் தற்போது காரியதரிசியாகப் பதவி வகித்துவரும் ஸ்ரீ ஏ. கே. ராயின் கையெழுத்தும், "காரியதரிசி நிதி மந்திராலயம்" என்ற வார்த்தைகளும் இருக்கும். ஏற்கெனவே பழக்கத்தில் இருந்துவரும் நோட்டுக்களின் வரிசைத் தொடரில் "ஏ" என்ற ஆங்கில எழுத்து பொறிக்கப்பட்டுள்ள இடத்தில் அதற்குப் பதிலாக புதிய நோட்டுக்களின் இலக்கத்தின் இறுதியில் ஆங்கில எழுத்தான "பி" கொட்டை எழுத்தில் நீலம் கலந்த சிவப்பு நிறத்தில் பொறிக்கப்பட்டிருக்கும். இந்தச் சில மாறுதல்களைத் தவிர புதிய நோட்டுக்கள் எல்லா அம்சங்களிலும் பழைய நோட்டுக்களைப் போலவே இருக்கும்.

தமிழ்நாடு ... நூலகம்
183226



ஸ்ரீ வில்லிபுத்தூர்
ஆண்டாள்



ஸ்ரீ வில்லிபுத்தூர்
கோயில் கோபுரம்.

# காவிதாசர் கனவு.

## 12, சகுந்தலை பரத தர்சனம்:

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பிறகு சகுந்தலை அரசனுக்கு மோதிரத்தைக் காட்ட நினைத்தாள். ஆனால் அதைக் காணவில்லை. சகுந்தலை வெகு அடையாளங்களைக் கூறியும் அவைகள் அரசனுடைய நினைவுக்கு வரவில்லை. பிறகு சார்ங்கரவர் "பெரியோர்களுடைய அனுமதியின்றி ஏற்படும் ப்ரியம் பிறகு இப்படித்தான் பகையாக முடிகின்றது" என்றார்.

அத: பரீக்ஷ்ய கர்தவ்யம்
விசேஷாத் ஸங்கதம் ரஹ: |
அஞ்ஞாத ஹ்ருதயேஷ் வேவம்
வைரீபவதி ஸௌஹ்ருதம் ||

சாரத்வதர் "இவள் உன் மனைவி. நீ ஏற்றுக்கொண்டாலும் சரி, தள்ளிவிட்டாலும் சரி. மனைவியைப் பற்றிக் கணவனுக்கு சர்வாதிகாரம் உண்டு. நாம் போகலாம்" என்று கூறினர். பிறகுச் சகுந்தலையுடன் அரண்மனைக்குச் சென்ற மூவரும் கண்வருடைய ஆசிரமத்தை நோக்கிப் புறப்பட்டுப் போய்விட்டார்கள். சகுந்தலை வருந்தியழவே ஒளிவீசிய ஓர் பெண்ணுருவம் அங்கே தோன்றி அவளை அன்புடன் அணைத்துக்கொண்டு வான வீதியில் தூக்கிச் சென்றது.

### துஷ்யந்தன் விரகம்

இப்படிச் சில காலமான பிறகு சசிதீர்த்தத்தில் ஒரு மீன் ஒரு செம்படவன் கையிலகப்பட்டது. அதை அறுத்தபொழுது அதின் வயிற்றில் ஒரு மோதிரம் இருந்தது. அது அரசனுடைய மோதிரயானபடியால் அரசனுடையக் காவலர்கள் அச்செம்படவனைக் கைதுசெய்து மோதிரத்தை அரசனிடம் அனுப்பினர்கள். அது கண்டவுடன் அரசனுடைய மறதி மாறி நினைவு வந்தது. "உத்தமியான சகுந்தலையிடத்தில் அளவற்ற காதல் கொண்டதை மறந்தேனே இது என்ன மதியீனமா, வினைப்பயனா, தெய்வச் செயலா? கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் என்னை நாடித் தேடிவந்த என் பிறவிச் செல்வமான புண்ணியவதியைப் புறக்கணித்துப் பாவத்தைச் சேர்த்து இன்பத்தை இழந்தேனே" என்று துடிதுடித்தான்; மனங் கலங்கினன், துன்பக் கண்ணீர் சொரிந்தான். செம்படவனுக்குப் பெரும் பரிசையளித்தான். அழகிய பொருட்களையும் இனிய கீதங்களையும் வெறுத்தான். சகுந்தலையின் உருவத்தை ஓவியத்தில் எழுதியும் துயரம் தீரவில்லை. அச்சமயம் மேனகையின் தோழி சானுமதி வானவீதி வழியாக வந்து திரஸ்கரிணி வித்தையால் தன்னை மறைத்துக் கொண்டிருந்தாள். அரசனுடைய அன்பையும் துயரத்தையும் அறிந்தாள். அந்த இன்பச் செய்தியை மேன

கைக்கும் சகுந்தலைக்கும் அறிவிக்க அவள் சுவர்க்கத்திற்கு சென்றாள்.

## பரதன் பிறப்பு

பிறகு தேவேந்திரனுடைய தேர்பாகன் மாதலி அரக்கர்களுடன் போர்புரிய துஷ்யந்தனை அழைத்துச் சென்றான். துஷ்யந்தன் அசுரர்கள் யாவரையும் வென்றான். இந்திரன் அவனுக்கு அர்த்தாசனம் கொடுத்து உயர்ந்த மரியாதைகளைச் செய்து தெய்வீக ரதத்தில் துஷ்யந்தனை பூமிக்கு அழைத்துச் செல்ல மாதலிக்கு உத்தரவிட்டான். அந்த விமானம் பூமியை நோக்கி இறங்கி வரும்பொழுது துஷ்யந்தன் தன் கண்களில் புலப்பட்ட பூமியின் அழகையும் விசித்திரமான தோற்றங்களையும் கண்ணுற்றுக் களித்தான். மேலே நோக்கி ஏறிவரும் மலைகளில் இருந்து தரை கீழே இறங்குவது போலிருக்கின்றது. மரங்களின் இலைகளில் மறைந்திருந்த அடிமரம் இப்பொழுது புலப்படுகின்றது. ஓடுகின்ற நீர் கண்ணுக்குத் தெரியாமல் இருந்த ஆறுகள் நீர் நிறைந்து ஓடுகின்றன. யாரோ பூமியைப் பந்தாகத் தூக்கி எறிவதுபோல் பூமி நம்மிடம் நெருங்குகின்றது" என்று அரசன் வியப்புடன் கூறினான்.

> சைலானுமவரோ ஹதீவ சிகராதுன் மஜ்ஜதாம்
> மேதினீ
> பர்ணஸ் வாந்தர லீனதாம் விஜகதி ஸ்கந்தோ
> தயாத்பாதபா: |
> ஸந்தானை ஸ்தனுபாவ நஷ்டஸலிலா:
> வ்யக்திம்பஜந்த்யா பகா:
> கேனப்யுத்க்ஷிப் தேவ பச்ய புவன்மத்
> பார்சவமானீயதே—.

ரதம் வேகமாக மலையை நெருங்கிற்று. அங்கே காச்யப்பரும் அதிதி தேவியும் தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் தரிசனம் செய்ய துஷ்யந்தன் ரதத்திலிருந்து இறங்கினான். அவனுடைய வலது தோள் துடித்தது. அது நற்காலத்தின் அடையாளம். அங்கே ஒரு சிறுவன் சிங்கக்குட்டியை விளையாடுவதற்கு தூக்கிக்கொண்டுக் குட்டியைப் பின் தொடர்ந்து வந்த பெருந் தாய்ச் சிங்கத்தை அச்சமின்றி அடித்து விரட்டும் காட்சியைக் கண்டான். அச்சிறுவனுடன் வந்த பெண்களில் ஒருவள் "பையா! இது என்ன ஆண்மை. உனக்குச் சரியாகத்தான் சர்வதமனன் என்று பெயர் வைத்திருக்கின்றார்கள்" என்றாள். மற்றொருவள் "அந்தச் சிங்கக் குட்டியை விட்டுவிடு. இந்தச் சகுந்தலாவண்யத்தைப் (பறவையின் அழகைப்) பார்" என்றாள். சகுந்தலை என்ற பெயரைக் கேட்டவுடன் "அம்மா எங்கே" என்று சிறுவன் கேட்டான். அரசனுக்கு உள்ளம் பூரித்தது. குழந்தையை எடுத்து உச்சிமுகர்ந்துத் தழுவ ஆசைப்பட்டான். சிறு பற்களும் காரணமற்ற சிரிப்பும் மழலைச் சொற்களும் உள்ள குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சித் தழுவி முத்தமிட யார்தான் விரும்ப மாட்டார்கள்.

அலக்ஷ்ய தந்த முகுளன நிமித்த ஹாஸான்
அவ்யக்த வர்ண ரமணீய வச:ப் ரவ்ருத்தான் |
அங்காச்ரய ப்ரணயினஸ்தனயான் வஹந்த:
தன்யஸ்ததங்க ரஜஸா மலினீ பவந்தி ||.

துஷ்யந்தன் குழந்தையைத் தழுவவே குழந்தையும் இன்ப மடைந்தான். ஆனாலும் அரசனுக்கு நிச்சயம் வரவில்லை. அப்பொழுது அந்தப் பெண்களில் ஒருவள் "குழந்தையின் ரக்ஷையைக் காணவில்லையே" என்றாள். அரசன் "ரக்ஷை இதோ இருக்கின்றது" என்று எடுத்தான். அவள் "ஐயோ! கீழே போட்டு விடுங்கள். குழந்தையும் பெற்றோர்களும் தவிர மற்றவர்கள் அதை எடுத்தால் அது சர்ப்பமாக மாறிக் கடிக்கும்" என்றாள். உடனே அரசன் உண்மையைஅறிந்து மகிழ்ந்துக் குழந்தையை வாரியெடுத்துத் தழுவி முத்தமிட்டு உச்சி முகர்ந்து பரமானந்தத்தை யடைந்தான். அந்தப் பெண்கள் இருவரும் அந்த ஆச்சர்யத்தைச் சகுந்தலையிடம் கூறச் சென்றார்கள்.

சகுந்தலையும் அங்கே அப்பொழுது வந்தாள். அழுக்கடைந்த துகிலை யுடுத்தி வாடின முகத்துடன் பின்னப்படாதக் கூந்தலுடன் வந்த அவளைப் பார்த்து "நான் உன்னை மறந்தது போல் நீ என்னை மறக்காமல் என்னிடம் அன்புடன் இருந்தது என் பாக்கியம்" என்று கூறினான். சகுந்தலையும் தன் மனத்தில் "மனமே! பதைக்காதே. தெய்வம் இப்பொழுதாவது கண்திறந்துக் கோபம் நீங்கித் தயை நிறைந்து என் கணவனை என்னிடஞ் சேர்த்து வைத்ததே" என்று எண்ணினாள். பாலன் தாயை நோக்கி "இவர் யார்" என்றான். "குழந்தை! உன் அதிர்ஷ்டத்தைக் கேள்" என்று மொழிந்தாள். அரசன் அவளை நோக்கி "என் குற்றத்தைப் பொறுத்துக்கொள். நான் உன்னை ஏற்றுக் கொள்ளாமல் ஏசியதை மறந்துவிடு. அப்பொழுது எப்படியோ எனக்கு மதிமயக்க மேற்பட்டது. தாமோ குணம் மேலிடுங் காலத்தில் இப்படி மனதில் குற்றங்கள் ஏற்படுகின்றன. பூமாலையை யாராவது தலையில் வைத்தாலுங் குருடன் பாம்போ என்று எண்ணி வெருண்டு கீழே தள்ளிவிடுகிறான். நீ என்னை மன்னிக்க வேண்டும்" என்று மன்றாடி வேண்டினான்.

ஸ்ரஜமபி சிரஸ்யந்த: க்ஷிப்தாம் துனோத்ய
திசங்கயா |

சகுந்தலை அரசனைப் பிரியத்துடனும் நாணத்துடனும் நோக்கி, "நாதா! நான் என் முற்பிறப்பிற் செய்த பாவங்களால் அப்பொழுது நீங்கள் என்னை மறந்தீர்கள்! ஆகையால்தான் பரம கருணையுள்ள நீங்களும் என்னிடஞ் சினங்கொண்டீர்கள்" என்றாள். பிறகு அவனுடைய கையில் மோதிரம் இருப்பதைக் கண்டு அவனிடம் அதின் வரலாற்றையறிந்தாள். அதை அவன் அவளுடைய கையில் போட முயன்றபொழுது, அவள் "இதில் எனக்கு நம்பிக்கைப் போய்விட்டது. உங்களுடைய கையிலேயே அது இருக்கட்டும்" என்றாள்.

பிறகு இருவரும், குழந்தையும் காச்யபரும் அதிதியும் இருக்குமிடஞ் சென்று அவர்களை வணங்கி ஆசியை அடைந்

தார்கள். அரசன் அவரைநோக்கி, "உலகத்தில் பூவுக்குப் பிறகு கனி என்றும், முகிலுக்குப் பிறகு மழை என்றும் முறை. ஆனல் உங்களிடத்திலோ தரிசனத்திற்கு முன் மங்களம் விளங்கு கின்றது. ஆனலும் சகுந்தலையை நேரில் பார்த்தும் எனக்கு மறதி எப்படி உண்டாயிற்றென்று மனம் வருந்துகின்றது" என்ருன்.

உதேதி பூர்வம் குஸுமம் தத: பலம்
சுனேதய. ப்ராக் ததனந்தரம் பய: |
நிமித்த நைமித்திகயோ ரயம்கிரம:
தவப்ரஸாதஸ்ய புரதஸ்து ஸம்பத: ||

காச்யபர் அவர்களுக்குத் துர்வாஸ ரிஷியின் சாபத்தைக் கூறினர். அந்த உண்மையை அறிந்தவுடன் அவர்களுடைய துயரம் நீங்கிற்று. பிறகு காச்யபர் துஷ்யந்தனைப் பார்த்து, "இந்த பாலன் எதிரிகளின்றி கடற்களை அசைவற்ற ஆகாய விமானங்களால் தாண்டி ஏழு தீவுகள் உள்ள முழு பூமியை ஆட்சி செய்வன். எல்லோரையும் அடக்கி அவன் சர்வதமனன் என்று பெயர் பெற்று பிறகு உலகத்தைப் பாதுகாத்துப் பரதன் என்று புகழ்ப் பெயரை அடைந்து விளங்குவன்" என்று ஆசி கூறினர்.

ரததனுனுத்தாத ஸ்திமித கதினு தீர்ணஜலதி.
புராஸப்த த்வீபாம் ஜயதிவஸுதா மப்ரதிரத: |
இஹாயம் ஸத்வாணும்ப்ர ஸபதமனு தீஸர்வத மன:
புனர்யாஸ்யத் யாக்யாம் பரத இதி லோகஸ்ய பரணுத் ||

பிறகு உனக்கு என்ன வேண்டும் என்று அவர் வினவ, அரசன் பரதவாக்யமாக, "அரசர்கள் மக்களுடைய நன்மையை நாடட்டும். சாஸ்திரம் அறிந்த அறிஞர்களுடைய அறிவு ஓங்கி விளங்கட்டும். எல்லாம்வல்ல சுயம்புவான கடவுள் எனக்கு மோக்ஷத்தை அளிக்கட்டும்" என்ருன்.

முடிவில் காளிதாசர் கூறினர்: "குமாரதாசா! இதுவரையில் உன்னிடம் அபிஞ்ஞான சாகுந்தலம் என்று என் நாடகத்திற்கு ஏன் பெயர் வைத்தேன் என்று கூறவில்லை. அதைக் கூற விரும்புகின்றேன். எனக்கு மிகப் பலக் குறைவாக இருக் கின்றது. இன்று நான் முக்தியடைந்து என் இதயராணிச் சந்திரகலையிடம் சென்று இருவரும் கடவுளை வணங்குவோம்."


துர்வாசர் சாபக் கதையாலும் அபிஞ்ஞானமான (அடை யாளமான) மோதிரத்தின் கதையாலும் நான் மகாபாரதத்தி லுள்ள சகுந்தலைக் கதையை உசிதமாகவும் ரசமாகவும் மாற்றி னேன். மகாபாரதத்தில் சகுந்தலைத் தன் மகனுடன் துஷ்யந்த னிடம் சென்று வாதாடுகின்ருள். முடிவில் ஆகாயவாணி அவளுடைய உண்மையைக் கூறுகின்றது. அந்தக் கதையில் ஒரு பெருமையிருக்கின்றது. இல்லாவிட்டால் மகர்ஷி வியாசர் கதையை அப்படிக் கூறுவாரா? என்னுடைய லக்ஷியம் சிங்கார ரஸத்தை நன்கு வர்ணிக்க வேண்டும் என்பதே. காதலர்கள் பிரிவில்தான் சிங்கார ரசம் ப்ரேமையின் உச்சி நிலையை அடை

கின்றது! வைதிகமான ஊர்வசி கதையை எப்படி ரசபுஷ்டிக்காக மாற்றினேனோ அப்படி இதிஹாச கதையான சகுந்தலைக் கதையையும் கொஞ்சம் மாற்றினேன். இல்லாவிட்டால் துஷ்யந்தனை உத்தம நாயகனாக வர்ணிக்க முடியாது. அவன் தூய்மையான சந்திர வம்சத் தரசனல்லவா? சகுந்தலையின் கணவனல்லவா? பரதனுடைய தந்தையல்லவா? காவ்ய நாடகங்களுடைய எல்லா குணங்களில் ஔசித்யம் (பொருத்தம்) தான் மிகச் சிறந்த குணம்.

இதுவும் தவிர இந்த நாடகத்தில் சிங்கார ரசம் தவிர வீர ரசம், அற்புத ரசம், சாந்தி ரசம், பக்தி ரசம் விளங்க வேண்டும் என்று என் அவா. சிங்கார ரசம் ரசங்களுக்கு அரசன் என்பது உண்மையே. ஆனால் ராம ராஜ்யத்தை வர்ணித்து விக்கிரம ராஜ்யத்தில் வாழ்ந்த எனக்கு வீர ரசத்தில் வெகு சந்தோஷம். பரத நாடு ஒன்றுபட்டு ஒரு குடையின்கிழ் வாழவேண்டும். அது எல்லா நாடுகளுக்கும் தலைநாடாக இருக்க வேண்டும் என்று எனக்கு அளவற்ற ஆசை. அதைத்தான் இந்த நாடகத்தில் புத்ரமேவங் குணோபேதம் சக்ரவர்தின மாப்னுஹி, பூத்வாசிராய சதுரந்த மஹீ ஸபத்னீ, புராஸப்ததத் வீபாம் ஜயதி வஸுதாம ப்ரதிரத: என்ற சுலோகங்களில் சுட்டிக் காட்டினேன்.

இது தவிர அற்புத சாந்தி பக்தி ரசங்களிலும் எனக்கு விருப்பம். அவைகளில்தான் உண்மையான தெய்விக ஒளி வீசுகின்றது. அவைகள்தான் நம்முடைய பண்பாட்டுக்கும் சமயத்திற்கும் உயிர்நிலையாகும்.

குமாரதாசா! இனி என்னால் கூறவேண்டியது ஒன்றுமில்லை. பரமேச்வரி எனக்குக் கொடுத்த சக்தியைத் திரும்பி வாங்கிக் கொள்ளுகின்றாள். நான் சாகுந்தலத்தின் முடிவில் கூறியதுதான் உலகத்திற்கு என் முடிவான திடமான உபதேசம். இந்த நாடு மேன்மையாக பெருமையாக இன்பமாக வாழ வேண்டும். அரசியல் முறை உலக நன்மையை அளிக்க வேண்டும். கலைகளும் ஞானமும் ஒளி வீசி விளங்க வேண்டும். நானும் பேரின்ப நிலையை அடைய வேண்டும்! சந்திரகலாதரா! சந்திரகலாதரி! சந்திரகலா தேவி! நான் இதோ வருகின்றேன்!!




பிறகு சாவகாசமாக உட்கார்ந்து, பின் "ரங்கா!... இல்லை இல்லை. கொலைகார ரங்கன் இறந்துவிட்டான். ப்யூன் வேலன்தான் இருக்கிறான். வேலா....நீ ஏதோ ஆழ்ந்து யோசனை செய்வதைப் பார்த்தால்........"

**வேலன்:** எஜமான். கோவிச்சுக்கக் கூடாது. உங்களைப் பிடித்த நல்ல காலந்தானுங்க அந்த வீட்டைவிட்டு வந்தீங்க. நான் ஓட்டல் படி ஏறும்போது இந்தம்மாள் படி இறங்கினதைப் பார்த்து நான் சந்தேகப்பட்டேன்...

**பாஸ்:** அடாடா! என்னடா சந்தேகப்பட்டாய்? ஐயயோ! சொல்லடா சீக்கிரம்.

**வேலன்:** எஜமான்! நானோ உங்க கால் செருப்பு தூக்கும்—துடைக்கும்—அடிமை. இந்த ஊரில் இத்தனை வருஷமா யிருப்பதால்........

**பாஸ்:** நிறுத்தாதே! பயப்படாமல் சொல்லு. நான் ஆபீஸ் கட்டிடத்தில் பெரிய உத்யோகஸ்தன்தான். ஆனால் இந்த தனி இடத்தில் பவளமலை வாசிகள். பழைய நண்பர்கள். தெரிந்ததா! தைரியமாய் சொல்லுடா!

**வேலன்:** எஜமான்! வீணாக வளத்தவாணாமுங்க. இந்தம்மாளே பெத்தவங்களே இப்படி தத்தாரியாய்த் திரியும்படி விட்டுட்டாங்க. நாகரீகமாம் நாகரீகம். நாசமாய்ப் போன நாகரீகம். எந்த ஆபீஸில் எந்த புதிய உத்தியோகஸ்தன் சின்ன வயதுள்ளவங்க வந்தாலும் அந்தப் பெண்ணுக்கு அப்பா ஆபீஸ் அதிகாரியிடம் நேரே போய் தகவல் விசாரித்துக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்வாரு.... உம்....உங்களையும் சீக்கிரமே வந்து பார்ப்பாருங்க....

தனக்குள் அந்த சோதனை இன்றே முடிந்து விட்டது என்று எண்ணி உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான். "ஏம்பா! இதற்கு முன் யாராவது வந்து பார்த்திருக்கிறார்களா! இதுதான் மூத்தப் பெண்ணா...." என்றான்.

**வேலன்:** எஜமான்! பெரிய இடத்து சமாச்சாரங்க நான் சொல்லக்கூடாது. இது நாலாவது பொண்ணுங்க. மூணு பொண்ணுக்கு இப்படியே அந்தந்த ஆபீஸில் கழுகு கண்ணோடு வேட்டையாடி அதிகாரிக்கு பத்யங் கொடுத்து நல்ல வரன்களே புடிச்சு கல்யாணம் செஞ்சுட்டாரு. அந்த மூணு பொண்ணும் கொஞ்சம் அடக்கமாகவே இருந்து துங்க. இவரு நம்ம ஆபீஸ் சாயபு தொரெ இருக்கிருரே, அவருக்கு ரொம்ப சினேகங்க. அந்த விபரீதத்திலே சாயபுவின் மகனுக்கும் இந்தப் பொண்ணுக்கும் சினேகம் உண்டாயிடுச்சுங்க.

அதிர்ச்சியுடன், "என்ன! என்ன! நம்ம எஜமான் மகனிடமா....ஜாதிவிட்ட ஜாதியிலா....அப்புறம்...அப்புறம் என்ன நடந்தது...." என்று பாஸ்கரன் பதறியவாறு கேட்டான்.

நடக்கிறதா, "ஐயோ! கடவுளே! இது நம்ப சாயபு தொரக்கி தெறிஞ்சு போச்சு. அவரு மகா யோக்யரு. உத்தமரு. அதனலே ரெண்டாம் பேருக்குத் தெறியாமெ தன் மகனே தென் தேசத்துக்கு சாமர்த்தியமா மாத்தி யனுப்பிட்டாரு. எப்படியாவது ஒரு நல்ல வரனைப் பார்த்து இந்தப் பாழும் பொண்ணெ தள்ளிவிட நம்ம தொரையே முனைஞ்சிருக்கிருரு. நீங்க பத்ரமா நடந்துக்கிங்க...."

"ஸரி! ஸரி! இந்த ஊழல் குப்பை நமக்கெதற்கடா! சனியன் பிடித்த படிப்பில் ஆணும் பெண்ணும் ஒண்ணு சேர்ந்து படிக்கிறது. பழகுகிறது. இதற்குப் பெற்ருேரும் தாளம் போடுவது...சேச்சே........அஸிங்கம். இத்தகைய வரம்பு மீறிய செயலால்தான் உலகமே கெட்டுவிட்டது. எது எப்படியாவது போகட்டும். இன்று உன்னை நான் சந்தித்தது நம்மிருவரின் நன்மைக்குத்தான் என்று நினைக் கிறேன். நீ புதிய வேலனுனலும் பழைய ரங்கன் ரங்கன் தான். தெறியுமா! நான் பழைய ஊர்க்கார சினேகித னுனலும் இன்று உனக்கு எஜமான் என்பதை மறக்கக் கூடாது."

"எஜமான்! தாங்கள் காலாலிட்ட வேலையைத் தலே யால் செய்யக் காத்திருக்கிறேனுங்க. என் பழய விஷயத்தை மட்டும் எடுத்து என் மனசெ புண்படுத்தா தீங்க. இதைத்தான் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்" என்ற போது அவன் கண் ஓரத்தில் நீர்த்துளிகள் முத்திட்டது.

"வேலா! இனிமேல் எடுப்பதில்லே. ஒரு விஷயம் உன்னிடம் கேட்கிறேன். ஸத்யமாகப் பதில் சொல்ல வேணும். அதாவது நீ ப்ரம்மச்சாரி....சாமியார்....என் றெல்லாம் சொல்கிருயே அது எந்தமட்டும் நிஜம்......."

"எஜமான். அதோ நீங்க வைத்துள்ள தெய்வத்தின் மேலே ஆணையாக நிஜமாதானுங்க. நான் மனசு ஒடஞ்சு போய் சாமியாராகி விடுவதற்கு மனத்தைக் கட்டுப்படுத்த மருந்துங்க....மூலிகைங்க....மந்திரம்......ஜபம்........எல்லாம் செய்து ஒரு சாமியார் மூலம் வெற்றி பெற்றிருக்கிறே னுங்க. இந்த ஜென்மத்துலே இனிமேல் நான் சம்சாரியாக மாட்டேன். தண்டாயுதபாணியின் ஆவி என்னை......"

அதைச் சொல்லும்போது அவன் நாத் தடுமாறி தொண்டையடைத்தது. "சரி! சரி! வேலா! உன்னை நான் பூர்ணமாக நம்புகிறேன். நீ ஒரு மகத்தான சாதனையைச் செய்து துறவியாகிவிட்டாய். நான் துறவியாகும் நிலை மைக்கு வந்திருக்கிறேன்."

"ஐயயோ! இதென்ன....எஜமான். இன்னும் கண் ணுளம் ஆகலியா...சேஷகிரிக்கு........" என்று முடிப் பதற்குள் பாஸ்கரன் இடைமறித்து, "வேலா! நான் கல்யா ணம் செய்துகொள்ளவே கொள்ளை ஆசைப்பட்டேன். ஆனல் பகவானுக்கு அது விருப்பமில்லையோ என்னவோ! (தன் விஷயம் சகலத்தையும் சுருக்கமாகக் கூறி) வேலா! விஷயம் புரிந்ததா......"

**வேலன்:** இதென்னுங்க! கேக்கறத்துக்குக் கதை மாதிரி இருக்குதுங்களே....பெத்த புள்ளை கிட்டயா கல்யாணம் அந்த பொண்ணை பண்ணிக்க வாணுமுனு சத்யங் கேட் டாங்க....அனியாயம், அக்ரமம்........

**பாஸ்:** வேலா! அக்ரமமோ! அவதியோ! கிடக்கட்டும். நான் உன்னை என்னுயிராக நம்பி மதித்து உனக்கு ஒரு வேலை கொடுக்கப் போகிறேன். அதை நீ சத்யமாய்—கடவுள்மீது ஆணையாகச்—செய்து முடிக்கவேணும். அந்த பரீக்ஷையில்தான் என் வாழ்நாளின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதில் தோல்வி என்றுல் நீ சாமியா ராவதற்கு என்னென்ன மருந்துகள், மூலிகைகள் சாப் பிட்டாயோ! ஜபம் மந்திரம் முதலியன செய்தாயோ! அத்தனையையும் நான் உன்னிடம் கற்றுக்கொண்டு செய்யப் போகிறேன்.

**வேலன்:** ஐயயோ! வாணும்! எஜமான்! குடும்பம் விளங்கி ஒரு சுடர் விளக்கேத்தி வைக்க சந்ததி வ்ருத்தி யாகணும் எஜமான். நான் பாவி....சண்டாளன்....கொலை காரன். எப்படிப் போனல் என்ன என்று முடித்தேன். எஜமான்...ஏன் கண்ணீர் வருதுங்க........

சற்று சமாளித்துக் கொண்டு, "வேலா! உன்னை நன்ருக நம்பி நான் விஷயத்தைச் சொல்லலாமா?" என்

றுன். அங்குள்ள லக்ஷ்மி படத்தைக் காட்டி, "இந்த லோகமாதா பாத சாக்ஷியாக நம்பி வேலே இடுங்க. இந்த ஜீவன் செய்யத் தயாரா இருக்குதுங்க..." என்றுன்.

"இதோ பார் வேலா! நீ சாமியார் என்பதால் உன்னை நம்புகிறேன். உனக்கு நான் ஒரு மாதம் லீவு வாங்கித் தருகிறேன். நீ என்னவோ முற்றிலும் புதிய மனிதனுக மாறிவிட்டதால் உன்னை யாரும் எளிதில் அடையாளங் காண முடியாது. என் செலவில் உன்னை நான் பவழ மலேக்கு அனுப்புகிறேன். நீ அசல் வடநாட்டானைப் போல உடையணிந்துக் கொண்டு தொப்பியும் வைத்துக் கொண்டால் உன்னைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். இந்தியே பேசு. நேராக பவழமலைக்குப் போ. அங்கு நீ ஒரு துப்பறியும் வீரனுக வேலே செய்யவேண்டும். அதாவது, அகல்யா உயிருடன் இருக்கிறுளா! எந்த நிலே மையில் இருக்கிறுள். எங்க வீட்டின் நிலேமை எப்படி. என்ஜேப்பற்றி யார் என்ன பேசுகிறுர்கள். பூமா... எங்கம்மா......இருவரும் உயிருடன் இருக்கிறுர்களா?...... சேஷகிரி எப்படி, இன்னும் உனக்குத் தெரியாதா....அது பற்றிய சகல தகவல்களேயும் தீர விசாரித்து வெகு ரகஸிய மாகக் கடிதமெழுதி எனக்கு அனுப்பு. நான் உனக்கு பதில் போடும்படியான விஷயமிருந்தால் தபாலாபீஸி லேயே நீ வாங்கிக்கொள்ளும்படி உன் பெயர் மோதிலால் என்ற வடநாட்டுப் பெயர் எழுதியனுப்புகிறேன். நீ அவரிடம் கட்டாயமாக இந்தி ஒன்றுதான் தெரியும். ஆங்கிலம் அரைகுறை தெரியும் என்று கூறி வாங்கிக் கொண்டு நம்ம ஊரிலுள்ள ஓட்டலில் ரூம் எடுத்துக்கொண்டு அதில் ரகஸியமாய்ப் படித்துக்கொள்...வேலா! என்ன யோசனே செய்கிறுய்...?"

"ஒன்றுமில்லீங்க. என் பழய நாளேய நினைவு வந்துடுத் துங்க. அதனுல் ப்ரமை பிடிச்ச மாதிரி இருந்துட்டேன்... உம்...சொல்லுங்க" என்றுன்.

"வேலா! என்னுடைய சொந்த விஷயத்திற்கு மட்டும் நான் உன்னையனுப்பவில்லே. நீ இன்னுனென்று காட்டிக் கொள்ளாமலேயே உன் பெற்றேரைக் கண்ணுரக் கண்டு வணங்கு. மருதாயி விஷயம் விசாரித்துக்கொள். அவள் உயிருடன் இருந்தால் வயித்யம் செய்யவும் குழந்தையை போஷிக்கவும் எப்படியாவது பணத்தை ரங்கன் கொடுத்த தாகக் கூறிச் சேர்த்துவிடு. அகல்யாவுக்கு இந்தி நன்றுகத் தெரியும். அவளிடம் ரகஸியமாகத் தனிமையில் பேசி விஷயத்தை அறிந்துகொள்ளு...என்ன! கடிதத்தின் மூலம் எனக்குச் சகலமும் தெரிந்துவிடும். அகல்யா இறந்துவிட் டிருந்தாலோ நீ அங்கு தங்கவே வேண்டாம். நேரில் வந்து

சாமியாராகச் செய்யும் மருந்துகள் சகிதம் என் கண் முன்பு நின்றுவிடு. என்ன! நான் சொல்வது புரிந்ததா... ஸரி. லீவுக்கு நீ நாளையே எழுது. நான் உடனே சாங்ஷன் செய்துவிடுகிறேன். நீ சீக்கிரம் புறப்படலாம்" என்று தன்னிதயத்தை மலைபோல் அழுத்தும் பாரத்தைப் பேச்சின் மூலம் ஒரு சிறிது குறைத்துக் கொண்டது போன்ற ஒரு உணர்ச்சி உண்டாகியது. ரங்கனும் சத்யம் செய்து வாக்குக் கொடுத்தான். அதே சமயம் திடீர் மழை ஜோவென்று வெளியில் பெய்து கொண்டிருந்தது.

---

# 20

## ஆசை பம்பரம்—அதிர்ச்சி சக்கரம்

பகலா, இரவா என்பதை யறியக்கூடாத அந்தகாரத்தில் தவிக்கும் அகிலாண்டம்மாளுக்கு நாள் ஏற ஏற படுக்கையின் பாதையும், மனத் தவிப்பும் அதிகரித்தது. தன் சிறிய தாயாரின் குரலும் அடிக்கடி பச்சைமிளகாய் என்று பெயர் வாங்கியுள்ள நர்ஸின் குரலும்—ஒரு தினத்திற்கு இரு வேளை பெரிய டாக்டரின் குரலும் தவிர அகிலாண்டம்மாளின் செவிகளில் வேறெந்த குரலும் விழாததால் ஒரு சிறிய சந்தேக விதை இதயத்தில் விழுந்துவிட்டது. கைகளைத் தடவியபடியே, "சித்தீ!" என்று கூப்பிட்டாள். அப்போது பின்மாலை 3 மணி இருக்கும். சித்தி விடும் குறட்டை ஆஸ்பத்ரி கட்டிட அஸ்திவாரத்தையே ஆட்டிவிடும் போல கர்ஜனை செய்து கொண்டிருந்தது. தலைவிதியே என்று விழித்துக் கொண்டிருந்த நர்ஸ், "சித்தியம்மாளின் குறட்டை சங்கீதம் காதில் கேக்கலயா....எழுப்பட்டா" என்றாள்.

"ஐயோ! இப்போதென்ன தூக்கம். இப்போது இரவா? பகலா..." என்று தன்னுடைய சந்தேகத்தை விளக்கினாள். "இப்போதா! கிழக்கு வெளுக்கும் நேரத்தை எட்டிக் கண்ணை சிமிட்டும் பின்மாலை நேரம்...ஏன் உங்களுக்குப் பகல்போல இருக்கிறதா" என்றதைக் கேட்ட அகிலாண்டத்திற்குக் கோபந்தான் வந்தது. "ஆமாம். பட்டம்பகல் போலத்தான் இருக்கிறது. என்னைப்போல் கண்ணைக்கட்டி உன்னைப் படுக்கவைத்தால்" என்பதற்குள் நர்ஸும் இன்னொரு ஸ்டாப் நர்ஸும் சேர்ந்து கலகல வென்று சிரிக்கும் ஒலி கேட்டு அகிலாண்டம்மாளின் எரியும் உள்ளத்தில் எண்ணையை ஊற்றியது போலிருந்

தது. அந்த ஆவேசத்துடன். "சித்தி! சித்தி!!" என்று உறக்கக் கூப்பிட்டாள்.

"ஏண்டியம்மா! அகிலம்" என்று குட்டி யானை சரீரத்தைப் புரட்டி யடித்துக்கொண்டு பாலாம்பா எழுந்து ஓடி வந்து. "தீர்தம் வேணுமா... பசிக்கிறதா.. இத்தனை நேரம் நன்ருகத் தூங்கினுயா" என்று அடுக்கடுக்காய் கேட்டாள்.

"என்ன கஷ்ட காலமோ! என்ன சனியனே! நான் இப்போது காலையோ பகலோ என்று எண்ணினேன். இன்னும் பொழுதே விடியவில்லையாமே! அந்த பச்சை மிளகாய் கேலி பண்றது. உனக்குத் தூக்கம் கெட்டு விட்டதா சித்தி"..."ஐயயோ! நான் தூங்கினேனும்மா! என் கவலைதான் மென்னியை மலைபோல அழுத்துகிறதே. கண்ணைக் குத்தினுலும் தூக்கம் வரல்லே. முழித்தவாறு தான் கிடக்கிறேன். அது கிடக்கட்டும் அகிலம்! நான் வந்து இத்தனை நாளாயிற்று. இன்னும் உன் சின்னப்பிள்ளையும், கணவரும் எட்டியே பார்க்கவில்லையே. அதென்ன அத்தனை இரும்பு நெஞ்சு? ஏன் வரவில்லை" என்று வார்த்தையைத் துவக்கினுள் பாட்டி.

அகிலா: சித்தி! இந்த விஷயங்களை எல்லாம் கேக்கத் தான் உன்னைக் கூப்பிட்டேன். அவர் இந்த பக்கமே வரவில்லையா?......பாஸ்கரன் உன்னைப் பார்த்தாவது பேசினுை இல்லையா! அந்த அனுமதேயங்கள் யாராவது வந்தார்களா....

பாலாம்பாள்: இங்கு ஒரு ஈ காக்காக் கூட வரவில்லை. அதனுல்தான் மனது கேக்காமல் அங்கலாய்க்கிறது. எதனுலப்படி இருக்கிருர்கள்.

அகிலா: என் பாவண்டியம்மா! என் பாவம். விச்வம் கூட இன்னும் வரவில்லையே. காகிதமும் போடவில்லையா.

பாலா: அவன் காகிதம் போடவே மாட்டான். இப்போ தீர்வை வஸூலில் பண்ற காலமோன்னே! இவன் க்ராம முனுசீப்பாயிற்றே! வேலை தொந்தரவில் வரா திருக்கலாம். நேரில் பெண்ணையும் அழைத்துக்கொண்டே வரச்சொல்லி இருப்பதால், வந்துவிடுவான். அவன் மனது கேக்குமா என்ன....அது சரிதான். நான் வீட்டிற்குப் போனுல்கூட உன் கணவர் உன்னைப்பற்றிப் பேசுவதே இல்லை. அவர் சொல்கிற மாதிரியிலிருந்து பாஸ்கரன் ஊரிலேயே இல்லைபோல் தெரிகிறதே. உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் பெத்த தாயாரை விட்டுவிட்டு ஒருவன் ஓடிப்போவானுேடீ. இதென்ன ஆச்சரியமோம்மா!.... அந்த பணக்காரக் கூட்டம் அவனை ஏதாவது பண்ணியிருக்குமோன்னு பயம் குடலைக் குழப்புகிறது.

அகிலா: அதென்ன வயித்தெறிச்சலோ! எனக்குப் போதாத காலம் கண்ணுக்குமா கட்டு வந்து என்னைக் கலங்கச் செய்ய வேண்டும். பாஸ்கரனின் குரலே கேட்காததால் நான் இப்போதுதான் சந்தேகப்படுகிறேன். நீ காலை வீட்டிற்குப் போய்த் திரும்பிவரும்போது அவரை நான் கட்டாயம் வரச் சொன்னதாகக் கூறி கையோடு அழைத்துக்கொண்டு வா. சகலமும் கேட்டுவிடுகிறேன். என்னால் இங்கு படுத்துக்கிடக்கவே முடியவில்லை. சேஷகிரிக்கு எப்படி இருக்கிறதோ, அது விஷயமும் யாரும் சொல்லவில்லை. என் மனது என்னவோ தவிக்கிறது. இரவு ஒரு நிமிஷம் கண்ணை மூடினேன் பாரு... ஐயயோ! என்ன பயங்கரமான கனவு தெரியுமா! நினைத்தாலே பயம் நடுங்குகிறது. அதுவேறு என் வயிற்றில் புளி கரைக்கிறது சித்தீ!

பாலா: கனவா! பாழாய்ப்போன கனவு. என்னையுந்தான் வந்துக் கலக்குகிறது. நீ என்னடியம்மா கண்டாய். சொல்லு. உடனே பசுமாட்டின் காதில் போய் சொல்லி, வாலைத் தடவி வலம் வந்து நமஸ்காரம் செய்துவிடடு வருகிறேன். சொல்லுடியம்மா....

அகிலா: சித்தீ! நினைக்கும்போதே பயமாயிருக்கிறது. எங்கப்பாவும் அம்மாவும் உலகத்தை விட்டு மறைந்து எத்தனை வருஷங்களாகிறது...

பாலா: ஐயோ! சேஷகிரி வயதாகிறதே. அவர்களுக்கென்னடீயம்மா வந்தது.

அகிலா: எங்கேயோ கல்யாண வீடாம். நாங்கள் எல்லாம் போயிருக்கிறோமாம். அங்கு பெரிய பரணை ஒன்றிருக்கிறதாம். அதில் ஏதோ சாமான் இருப்பதாயும் அதை ஜாக்ரதையாய் நான் எடுக்கும்படியும் யாரோ கேட்கிறார்கள். பரண்மீது நான் தாவி பார்க்கும்.....ம்...போது அப்பாவும் அம்மாவும் அங்கு பயங்கர ரூபத்தில் சுவரோடு சுவராய் படம்போல் ஒட்டிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்களைப் பார்த்ததும் நான் பயந்துபோய் அலறுகிறேனாம். அவர்கள் கையில் ஏதோ ஒரு பயங்கரமான ஆயுதத்தை வைத்திருக்கிறார்கள். அதை என் முகத்திற்கு நேரே திருப்பிக்காட்டி, பத்ரம்...ஜாக்ரதை...உஷார்...த்ரோகம் செய்தாயோ...இந்த ஆயுதத்தை அப்படியே உன் குடும்பத்தின்மீது வீசி எறிந்து...என்று கூறியபடி ஓங்கி வருவதைக் கண்டு அலறியடித்துக்கொண்டு விழித்துவிட்டேன். பிறகு வெகு நேரமாகியும் தூக்கமே வரவில்லை. அதனால்தான் பொழுது விடிந்து பகலாகி இருக்கும் என்று எண்ணினேன். இதென்ன சொப்பனம்.

சித்தி: அகிலாண்டம்!........நீ ஒருவேளை தேவசத்தை சரியா பண்ணவில்லையோ! பூவாடைக் கும்பிட மறந்துவிட்டாயோ!....ஏண்டியம்மா...உன் ஒருத்தி கையினுல்தானே உன் பெற்ருேர் இத்தனை எள்ளுத் தண்ணீருக்கு காத்திருப்பார்கள். நீ சரியானபடி செய்கிருயா!...உம். இப்ப நெனைச்சாலும் வயித்தைப் பத்தி எறியறது. உங்கம்மா அந்த துக்கத்துலேதானே உருமாறி செத்துவிட்டாள். பிள்ளையானுலும் பிள்ளையா! ராஜ வடிவு என்ருல் தகுமே! குறு குறுப்பான கண்ணும் சுருட்டை மயிரும் ஐயோ! இப்பதான் போலே இருக்கே. அது நன்ருக இருந்தால் இந்த பித்ருக்கள் இப்படி கனவில் வந்து பார்ப்பார்களா...

அகிலா: சித்தி! அந்த பேச்சையே எடுக்காதே. என் வயித்தெ என்னமோ பண்றது. மகா பாவி நான். என்னேடு அவன் ரெட்டைக் குழந்தையாய்ப் பிறக்காதிருந்தால் நன்ருக இருந்திருப்பானே என்னவோ! இந்த துக்கம் அப்போ எனக்கு அதிகம் தெறியவில்லை. வயது ஏற ஏறத்தான் அம்மா சொல்லி சொல்லிக் கதறும்போது என் சின்னஞ்சிறு உள்ளமும் துடிதுடின்னு துடித்தது. அம்மா அழும்போதெல்லாம் நானும் அழுவேன். அம்மா! இனிமேல் மணி வரமாட்டானு....என்று இரண்டாக் கெட்டானுகக் கேட்டுவிடுவேன். அம்மா புழுவாகத் துடிப்பாள். அப்பா இடிந்துபோய் உட்கார்ந்துவிடுவார். உம்...ஏதோ நாலு நாள் படுத்திருந்தது...உயிர் விட்டது வாரிப் போட்டுவிட்டோம் என்ற நிம்மதி இருந்தால் இத்தனை சங்கடம் பண்ணி வதைக்காதே. கண் குளிர, மனங் குளிர முருகக் கடவுள் உத்ஸவத்திற்கு ஸேவிக்கப் போய் உயிருடன் ஒரு குழந்தையை க்ருஷ்ண விக்ரகம் போன்ற ராஜ வடிவத்தைத் துலைத்துவிட்டுக் கதறுவதென்ருல் மனம் பொருக்கவில்லையே. அந்த சில நகைகளுக்காக எந்த கள்ளனே குழந்தையைத் தூக்கிப் போய் விட்டானே என்று அம்மா சொல்லி சொல்லிக் கதறும் போது எனக்கு எப்படித்தான் இருக்கும் தெரியுமா....

சித்தி: ஐயயோ! அந்த வயித்தெறிச்சலைக் கிளப்பாதே என்று சொல்லிவிட்டு நீயே ஆரம்பித்துவிட்டாயே! நீங்கள் ரெட்டையாய்ப் பிறந்தபோது நான்தான் சகாயத்திற்கு வந்திருந்தேன். குழந்தைக்கு 4 மாதத்தில் ஒருவிதமான வலிப்பு வந்து இப்போ அப்போ! என்ற நிலையில் படுத்திருந்தது. அப்போது ஒரு நாட்டு வைத்தியர் குழந்தைக்கு சூடுபோட்டால் வலிப்புக் குறையும் என்று சொல்லி வலது துடையில் சூடுபோட்டார். சூட்டு வடு என்றுமே அப்படியே இருக்குமாதலால் முருகக் கடவுளை வேண்டிக் கொண்டு வேல் உருவம்போல் சூடு போடுங்கள் என்று

உங்கப்பா கத்தினர். அப்படியே சாயலில் வேல் போல சுருக்கென்று இழுத்தபோது குழந்தை குறலெடுத்து வீரிட்டழுதது. முருகா? உன் பிச்சை என்று எல்லோரும் ஆனந்தக் கூத்தாடினேம். அவன் மட்டும், உயிருட னிருந்தால் இப்படியா யிருக்கும். உங்க பிறந்தகமே இப்போது பாழாயிற்றே! என்று கண்ணீர் விட்டபடியே பாலாம்பாள் மூக்கைச் சிந்தி பெருங் குரலே பாய்ச்சி விட்டாள்.

அகிலா: சித்தீ! இது ஆஸ்பத்ரி அழாதே...அந்த பச்சைமிளகாய் வந்துவிடப் போகிறது. நீ சொல்கிற வேலின் அடையாளம் தம்பியின் துடையிலிருப்பதை அப்பாவும் அம்மாவும் நினைத்துச் சொல்லிச் சொல்லி உருகியே செத்தார்கள். அந்த சிறு நகைக்காக எந்தச் சண்டாளனே குழந்தையைக் கொன்று விட்டிருப்பான் என்றுதான் தீர்மானமாகியது. அந்தத் திருவிழா முடிந்து ஒரு மாதம் வரையில் அப்பா சுற்று வட்டாரங்களில் விசாரித்தும் புலனே கிடைக்கவில்லையாம். எத்தனே ஜோஸியம், சாஸ்திரம், ஆருடம், மந்திரம் எல்லாம் பார்த் தார். அதோடுதான் சில வருஷங்களுக்குள் அப்பா அம்மாவே போய்விட்டார்களே!...என் சொப்பனத்தில் ஏன் இப்படி வந்து மிரட்டவேணும். நான் தெவசம் நன்ருகத்தானே சாஸ்த்ரிகளை வைத்துச் செய்கிறேன்.

பாலா: இதோ பாரு அகிலம்! அன்று காணுதுபோன உன் தம்பி மணியே இந்த விச்வம் என்று நினைத்துக் கொண்டு அவன் பெண்ணுக்கு வாழ்வு கொடு....அடா டாடா....அதோ விச்வமும் பர்வதமும் வந்துவிட்டார் களே....ஏண்டாப்பா இன்னும் முன்பே வரக்கூடாதோ என்ருள்.

விச்வம் அகிலாண்டத்தின் படுக்கை கோரத்தைக் கண்டு மனமுருகி "அக்கா! இதென்ன கண்ராவி காக்ஷி' என்று கண்ணீர் உதிர அகிலாண்டத்தின் கைகளைப் பற்றிக்கொண்டு பக்கத்திலமர்ந்தான். "அத்தை! சவுக் யமா....நான் பர்வதம் வந்திருக்கிறேன்" என்று கூறிய வாறு அந்தப் பெண்ணும் அணைத்துக்கொண்டாள்.

அகிலாண்டம்மாள் கரை புரண்டோடும் துக்கம்.... சந்தோஷம் இரண்டு உணர்ச்சிகளாலும் தாக்கப்பட்டுத் தம்பியைக் கையைப் பிடித்துத் தடவிக் கொடுத்தபடியே, "அப்பா விச்வம்! நீதாண்டா என் தம்பி சுப்ரமணி.. நீதான் என்னுடன் பிறந்தவன். என்னைக் கைவிடாதே விச்வம்...சுப்ரமணியம்" என்று தன் போக்காகக் கத்தி விட்டு, பருவதத்தைத் தடவிப் பார்த்தாள். உண்மையி

லேயே பெயருக்கு மிகவும் பொருத்தமாய் பார்வதமே உயிர் பெற்றுப் பெண் வடிவில் வந்து நிற்பதுபோல் அகிலாண் டத்தின் கைகளின் உணர்ச்சியினுல் அறிந்து கைகளைத் தோளை....முகத்தைத் தடவிப் பார்த்தாள். துதிக்கைத் தென்படவில்லை என்பதை அவள் உள்ளந்தரங்கம் உணர்ந்தது. அவ்வளவுதான். அகிலாண்டம்மாளை எதனுலோ தூக்கிவாரிப் போட்டது. மருமகளைப் பிடித்த கை மெல்லத் தானுக நழுவியதோடு ஒரு மகத்தான பெரு மூச்சும் தொடர்ந்து வந்தது.

இந்த ஓசையைக் கேட்ட பாலாம்பாளுக்கு அவளை யறியாது மனத்தில் துணுக்குற்றது. "ஏண்டியம்மா! அகிலம்! ஏன் ஏதோ பெருமூச்சு விடுகிருய். உன் தம்பி விச்வம் சரியாகச் செய்வானே மாட்டானே என்று சந்தேகப்படுகிருயா! அப்படி நினைக்காதே....ஏண்டாப்பா! விச்வம்! உன் அக்காவிடம் சகலத்தையும் சொல்லி விடேன்" என்று முன்கூட்டி ஒரு எச்சரிக்கை விடுத்தாள்.

விச்வம்: அக்கா! என்மீது உனக்கு நம்பிக்கை இல்லை என்ருல் சொல்லிவிடு. என்னுடைய நிலபுலன் உள்ள சகல பத்திரங்களையும் இன்றே கொண்டுவந்து உன் கையில் வைத்துவிடுகிறேன். அப்போது நம்புவாயல்லவா? உன் கண் கட்டை அவிழ்த்ததும் உன் மருமானைப் பார்த் தால் அப்போது சொல்லுவாய். இக் காலத்தில் சில நாகரீக நங்கைகள் இருக்கிருர்களே அம்மாதிரி எல்லாம் அவள் இல்லவே இல்லை. ஆதியில் நீ எப்படி இருந்தாயோ அதே போலவே இருப்பதாக அம்மா தினம் சொல் கிருள்......அது சரி! அத்திம்பேர்......பாஸ்கரன் முதலி யோர்கள் எங்கே காணவில்லை என்று கேட்டான்.

அத்தனை நேரம் ஏதோ விசாரத்துடன் படுத்திருந்த அகிலாண்டத்திற்கு இந்த கேள்வி காதில் விழுந்ததும் அவளையறியாத ஒரு தாக்குதல் தாக்கித் துள்ளச்செய்தது. என்னவிருந்தாலும் பெத்த பாசம் விடுமா! தன் ரத்தத் தில் அப்படியே உருவான பிண்டமில்லையா! பணப் பேராசையும் அல்ப புத்தியும் உடல் பூராவும் நிறைந்து மூடி இருப்பினும், தன் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோன்ற நிலையில் எத்தனை நாட்கள் இடையில் கழிந்தது என்பதை யறியாததால் மேலும் வேதனை அதிகரித்து வாட்டியது. அந்த வேகத்தில் ஏதோ ஆவேசம் வந்தவளைப்போல், "சித்தீ! நீ இங்கு வந்து எத்தனை நாட்க ளாயிற்று...நான் படுத்து எத்தனை நாட்களாயிற்று...என் கண்ணுன பாஸ்கரனைப் பார்த்து, அவன் குரலைக் கேட்டு எத்தனை யுகமாயிற்று. எங்கே அவர்....அவரைக் கூப்

பிடுங்கள்....பாஸ்கரனைப் பார்த்து நேரே பேசிய பிறகு தான் இந்த விஷயத்தை நான் தொடங்குவேன். எங்கே அவர்! கூப்பிடுங்கள்...பாஸ்கரா! பாஸ்கரா...." என்று தானே பெரிய குரலெடுத்துக் கூப்பிட்டாள்.

அதேசமயம் மருந்து கொடுக்க வந்த நர்ஸ், "பெரியம்மா! இதென்னக் கூச்சல்....நரம்பு அசைந்துவிட்டால் ஆபத்தாகிவிடுமே! டாக்டர் நாளைக்குக் கண் கட்டை அவிழ்க்கப் போவதாகச் சொல்கிறார். இந்த சமயத்தில் இப்படியா அலட்டிக் கொள்வது. உங்கள் மகன் ஊருக்குப் போய் ஒருவார மாகப்போகிறதே. இன்று பெரிதாகக் கூப்பிட்டால் வந்துவிடுவாரா! பேசாமலிருங்கள்."

என்று சொல்லியதைக் கேட்டதும் அகிலாண்டம் தன்னைமீறி, "ஹா....பாஸ்கரன் ஊருக்காப் போய்விட்டான். பத்தான் கோடுக்கா போய்விட்டான். ஐயோ! என்னுடைய பயங்கரக் கனவு....ஹா......பாஸ்கரா...." என்று தன்னைமீறிய சோகத்துடன் கத்திய வேகத்தில் படபடப்பு மேலிட்டு மவுனமாகிவிட்டாள்.

"அகிலம்! அகிலம்! இதென்னடீ மயக்கம். ஐயயோ! நீயும் தலையில் கல்லைப் போட்டுவிடுவாயா! என்ன செய்வேன். கடவுளே!....விச்வம், ஓடிப்போய் மாப்பிள்ளையைக் கூப்பிட்டுக்கொண்டு வாடா! எனக்கென்னவோ பயமாயிருக்கிறதே" என்று பாலாம்பாள் பிலாக்கணமே பாடுவது போல் கத்தினாள். உடனே விச்வம் ஒரே ஓட்டமாக ஓடினான். நர்ஸ் அகிலாண்டத்தின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு முகம் ஏதோ மாதிரியாகிய வேகத்தில் உள்ளே பறந்து ஓடினாள்.

———

## 21

### அதிசய பூகம்பத்தின் அற்புத காக்ஷி

"ஸீதா! எனக்கு மூளைதான் குழம்பி விடும்போலிருக்கிறது. நான் ஆபீஸுக்கும் தந்தியடித்தாயிற்று, பதிலில்லை. அங்குள்ள என் சினேகிதர்கள் இரண்டு பேர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கும் பதிலைக் காணவில்லை. இன்று போட்டால் தபால் நாளை வந்துவிடக்கூடிய வசதி இருந்தும் இன்னும் பதில் வராதது எனக்கே கவலையாயிருக்கிறது. அகல்யாவின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. என்ன

செய்வேன்........ஸீதா எனக்கொரு யோசனை தோன்று கிறது. நான் இன்றே ப்ளேனில் சென்று நேராகவே சகல விஷயத்தையும் விசாரித்துக்கொண்டு வந்துவிடட் டுமா? அதுதான் கடைசியில் செய்யக்கூடியது. வேறு விதத்தினுல் நாம் குழந்தையைச் சமாதானம் செய்யவோ! நாம் சாந்தியடையவோ மார்க்கமே இல்லை. நான் போகும் விஷயம் அகல்யாவுக்குக்கூட தெரியவேண்டாம். இன்றே ப்ளேனுக்கு புக் செய்துவிட்டு வருகிறேன். என்ன சொல் கிருய்" என்று கேட்டார்.

அதேசமயம் அலையக்குலைய பதறியவாறு அகல்யா மூச்சுத் திணற ஓடிவந்து, "அப்பா!....அம்மா...இங்கு வாயேன். அப்பா....எங்கே இப்படி வாப்பா. உன் துடை யைக் காட்டு...காட்டேன்" என்று பறக்கப் பறக்கக் கூறி காலைப் பிடித்துக்கொண்டாள். விஷயம் இன்னதென்று புரியாத ஸீதம்மாளும் ஸேதுராமனும், "என்னம்மா சொல் கிருய்! அகல்யா! நிதானமாகச் சொல்லம்மா! துடையைக் காட்டவேண்டுமா!...."

"ஐயோ! தாமதப்படுத்தாதே அப்பா...எங்கே உன் துடையைக் காட்டு......சாக்ஷாத் முருகக் கடவுள் ஒரு அதிசய—அத்புத—விசித்ரமான ரகஸியத்தை வெளியிட்டு விட்டார். எங்கே காட்டேன்" என்று பறந்தாள். ஸேது ராமன் துடையைப் பார்த்ததும் அகல்யா தாங்கமாட்டாத ஒரு ஆனந்தக் கூத்தே ஆடிவிட்டு, "அப்பா....அப்பா.... எனக்குப் பேசவே தெரியவில்லையப்பா! இந்த வேல் போன்ற உருவம்தான் இப்போது நம்மைக் காப்பாற்றி யது. அப்பா....அம்மா....அகிலாண்டம்மாள் வேறு யாரு மில்லை...என்னுடைய அருமையான அத்தை. அப்பா, அகிலாண்டமும் நீயும் இரட்டைப் பிறவியாகப் பிறந்தீர் களாம். அந்தம்மாள் உன்னுடன் பிறந்த சகோதரியாம். அப்பா...இப்போதே நாம் போய் இந்த ரகஸியத்தை அத்தையிடம் வெளியிட்டு விடுவோம் வாப்பா...பாலாம் பாள்தான் தற்சமயம் நமக்குக் குலதெய்வம். அவள்தான் விஷயத்தை விளக்கிக் கூறினுள்..."

இதைக் கேட்ட தம்பதிகள் விஷயமே இன்னதென்று விளங்காமல் அதிர்ச்சியடைந்து பெண்ணைக் கட்டித்தழுவி, "இதென்னம்மா விசித்திரம்...விவரமாகச் சொல்லம்மா. பாலாம்பா யாரு...." என்று பதைக்கக் கேட்டார்கள். "அப்பா! என் மனது சரியில்லாத நிலையில் நான் தவியாய்த் தவித்தேனல்லவா...எங்கேயோ சினேகிதை வீட்டிற்கும் லைப்ரரிக்கும் போய் வருவதாக நான் உங்க ளிடம் சொல்லிவிட்டு நேரே டாக்டரிடம் சென்று

அவருடைய அனுமதி பெற்று நர்ஸ் உடையில் அகிலாண் டம்மாளை ப்ரத்யேகமாக நானே கவனித்துவந்தேன்."

"என்ன! என்ன! நீயே நர்ஸ் உடையில் கவனித் தாயா? எதற்கம்மா அந்த சண்டாளியின் முகத்தில்...." அகல்யா இடைமறித்து, "அப்பா! நிறுத்துங்கள். இனி உங்கள் உடன்பிறந்த சகோதரியைச் சண்டாளி என்று சொல்லாதீர்கள். நான் அம்மாதிரி துப்பறிவது போல் அங்கு இருந்ததனுல்தான் நாம் கனவில்கூட நினைக்க முடியாத அறிய பெரிய பொக்கிஷம் போன்றதும், நம் குடும்பத்தின் அதிமுக்யமான விஷயம் மறைந்து போயிருந் ததுமான ரகஸ்யப் புதையல் பூகம்பத்தில் கிடைத்தது போல் கிடைத்தது. நான் இத்தகைய நன்மை கிடைக்கு மென்ற எண்ணத்துடன் அங்கு போகவில்லையப்பா! என்னவிருந்தாலும் பாஸ்கரனைப் பெற்ற தாயாயிற்றே! அவள் உயிருடன் இருந்தால்தானே பாஸ்கரனின் மனது பூர்ண த்ருப்தியாயிருக்கும். அவள் ஒரு கண் வெண்ணை ஒரு கண் சுண்ணும்பாக இருந்து புத்தரர்களிடையே மித்திரபேதம் செய்திருப்பினும் படித்தவர்கள் அறிவா ளிகள் அந்த மகத்தானகுற்றத்தை ஒரு சிறிது மறந்து நல்ல தையே எண்ணி—நன்மைகளையே செய்தால் கடவுள் நல்ல வழிகாட்டமாட்டாரா என்கிற ஆசையினுல் நான் ஓடி னேன். இந்த மகனின் சுகத்தையோ, ஆனந்த சந்தோ ஷத்தையோ கவனிக்காமல் இவருடைய பிம்பத்தை முத லாக வைத்து வ்யாபாரம் செய்வதுபோல் இவருடைய பணத்தை எடுத்து அவருக்குப் புறட்டிவிட நினைத்த த்ரோகம் கைமேல் பலனுக அடித்துவிட்டது என்ருலும் தாயின் கடமையில் அவள் பிசகிவிட்டதைப்போல் தனயனின் கடமையில் அவர் பிசகாத வழியில் நடந்தால் பகவான் கருணைபுரியாமலா போவான்,என்கிற மகத்தான நம்பிக்கையில் இரவு அங்கு இருந்தேன் (நடந்ததைச் சொல்லி) அப்பா! அம்மா! பகவான்! எத்தனை அதிசயமாக இத்தகைய மாபெரும் மர்மத்தை விளக்கிவிட்டார் பார்த் தாயா! பாலாம்பாளுக்கு நாம்எத்தனைமுறை வணங்கினுலும் போதாது. முதலில் நீங்கள் வாருங்கள். இப்போதே ஆஸ்பத்ரிக்குப் போயாக வேணும். ஏனென்ருல் என்ன விருப்பினும் பேத்த பாசம் விடுமா! பாஸ்கரனை நினைத்துப் பெரியதாகக் கத்தியவேகத்தில் சற்று அதிர்ச்சி உண்டாகி விட்டது. நர்ஸ் மூலம் டாக்டருக்கு சொல்லியனுப்பிவிட்டு, நான் ஓட்டமாக ஓடிவந்தேன். ஒரு வேளை இந்த அதிர்ச்சி யில் மூச்சு நின்றுவிட்டால் என்ன செய்வது. உடனே போய்ப் பார்த்தால்தான் சகலமும் நிவ்ருத்தியாகும். பழைய டைரிகளையும் எடுத்துக்கொண்டு வாருங்கள்...பூமாவுக்குப்

பிறகு சொல்லலாம். வாருங்கள்" என்று கத்தியவாறு இருவரையும் கையைப் பிடித்து இழுத்தாள்.

தானே ஓடிச் சென்று பழைய டைரிகளைத் தூக்கிக் கொண்டு ஒரே ஓட்டமாக வந்து காரில் ஏறினாள். காற்றினும் கடிய வேகத்துடன் கார் ஆஸ்பத்ரியை அடைந்ததும் மூவரும் தாவிக்குதித்து உள்ளே சென்றார்கள். அப்போது தான் சந்திரசேகரன் முகத்தில் கோபக் கனலும் வெறுப்பும் ஜ்வலிக்க நின்றிருந்தார். பெரிய டாக்டர் அகிலாண்டம்மாளை பரிபூர்ணமாக சோதனை செய்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அகிலாண்டத்திற்கு நல்ல தெளிந்த ஞாபகம் வந்திருந்தது. பாலாம்பாளும் விச்வமும், "டாக்டர்! உயிருக்கு பயமொன்றுமில்லையே...எதனால் இந்த மயக்கம் வந்தது" என்று தொணப்பிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஆவலே வடிவமாக அகல்யா டாக்டரை நோக்கி, "டாக்டர்! பயமொன்றுமில்லையே!" என்று பதட்டமாகக் கேட்டாள். டாக்டர் சிரித்துக்கொண்டே, "ஓ! அகல்யாவா!" என்று வியப்புடன் பார்த்தார்.

இந்த வார்த்தை காதில் பட்ட க்ஷணமே நெருப்பை மிதித்தவள்போல் அகிலாண்டம் துள்ளியவாறு..."யாரு! அகல்யாவா! அந்தப் பணக்கார...." இந்த வார்த்தைகள் முடிவதற்குள்ளேயே அகல்யா யாருமே எதிர்பாராதவிதம் அகிலாண்டத்தின் இரு கைகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "ஆமாம்! அத்தை! என்னருமை அத்தை! அதே அகல்யாதான். வெகு வருஷத்திற்கு முன்பு காணாதுபோன உன்னருயிர்த் தம்பி சுப்பிரமணியன்—முருகக் கடவுளின் வேல் போன்ற வடிவில் சுட்டு வடுவை ப்ரத்யக்ஷ ப்ரமாண சாக்ஷியாகக் கொண்ட உன்னுடன் இரட்டையாகப் பிறந்த தம்பி சுப்பிரமணியனின்—ஏக புதல்வி அகல்யாதான் பேசுகிறேன். அத்தை! இதோ அப்பா....அம்மா...எல்லோரும் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லும் வார்த்தையைக் கேட்ட அங்குள்ள அத்தனை பேரும் தம்பித்துப் ப்ரம்மித்து வியப்புக்கடலாடி விழிக்கிறார்கள். சந்திரசேகரனுக்கு மட்டும் உலகத்தையே தனக்கு சாம்ராஜ்ய பட்டாபிஷேகம் செய்துவிட்டது போன்ற நூதன உணர்ச்சிப் பெருக்கெடுத்த ஆவேசத்துடன் ஸேதுராமனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் உதிர்த்தவாறு குதிக்கிறார். சுற்றிச் சுற்றி வருகின்றார். குழந்தைபோல் கும்மாளமடிக்கிறார்.

அதே வார்த்தை அகிலாண்டத்தின் காதில் விழுந்ததும், "ஹா! என்ன! என்ன! என் சுப்பிரமணியனு....என்னுடன் பிறந்த தம்பி=முருகர் கோயிலில் காணுதுபோன என் கண்மணியா! ஐயயோ! இது என்ன நிஜமானதா! கட்டுக்கதையா!....ஐயோ! கண்ணும் தெரியவில்லையே!" என்று வாய் விட்டு கத்தும்போது 'கடகால் தோண்டப் போய் கங்காளப் புதயல் கிடைத்ததாம்' என்பதுபோல் டாக்டருக்கும் இந்த விஷயம் பெருமகிழ்ச்சியாயும் நம்பமுடியாத அதிர்ச்சியாயுமிருந்தது. ஸேதுராமன் அதே சமயம் "அக்கா!" என்று அன்புததும்பக் கூப்பிட்டுக் கைகளை எடுத்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். பாலாம்பாளும், விச்வமும் விழிக்கிருர்கள். "ஐயோ! டாக்டர்! என் கண்களை யவிழ்த்து அந்தகாரத்தைப் போக்குங்களேன். என்னருமை மணியின் முகத்தை ஒருமுறை பார்த்து விடுகிறேன்" என்று கெஞ்சியவாறு கூறியபடியே "மணீ! மணீ! உண்மையாக என் சுப்பிரமணியா....முருகக் கடவுள்மீது ஆணையாக என் மணியா?" என்று அகிலாண்டம் பிதற்றினுள்.

**டாக்டர்:** மிஸ்டர் ஸேதுராமன்! நான் ஏதோ மிகப் பொறுப்புவாய்ந்த டாக்டராக இருந்து அந்தத் தொழிலுக்கான முக்ய புத்தகங்களைப் படித்து விஷயமறிவதோடு மனத்திற்கு ஆனந்தமும் சாந்தியும் கொடுக்கக்கூடிய அனேக சிறந்த நவீனங்களைப் படித்திருக்கிறேன். அவைகளில் திடும் திடும் என்று வரும் கற்பனைக் களஞ்சியம் போன்ற அதிர்ச்சிகரமான சம்பவங்களை இன்று நேரில் வாழ்க்கையிலேயே கண்டு ப்ரமிக்கிறேன். நானும் தெய்வ பக்தியில் நம்பிக்கை யுள்ளவன்தான். முருகக் கடவுளின் பாதங்களை நம்பி கண் கட்டை அவிழ்க்கிறேன். அந்தக் கடவுள் அந்தம்மாளின் அந்தகாரத்தைப் போக்கி பளிச் சென்ற ஜகஜ்ஜோதியான ப்ரகாசத்தைக் கிழக்கு வெளுப்பது போல் கொடுக்கட்டும்...அம்மா! ஆண்டவனை வேண்டுங்கள். கண் கட்டை அவிழ்க்கப் போகிறேன் என்று கூறி எச்சரித்துவிட்டு பகவானை வேண்டியபடியே கட்டை அவிழ்த்துவிட்டார்.

என்ன ஆச்சரியம்! இத்தனை நாட்களாக ஒரே கும்மிருட்டில் மூழ்கிக் கிடந்த அகிலாண்டம்மாளுக்கு பளிச் சென்று கண்கள் நன்ருகத் தெரிந்ததும், "ஹா...ஹா" என்று ஏதோ பிதற்றிக் கத்துகிருளேயன்றி பேசத் தெரியவில்லை. அதே சமயம் அகல்யா ஒரே குதூகலத்துடன், "அத்தை! இதோ பாருங்கள். அப்பாவின் துடையில் என்ன இருக்கிறது பாருங்கள். சித்தியம்மா! நீங்களும் பாருங்கள். சித்தப்பா எல்லோரும் பாருங்கள்" என்று

தானே அத்தனை பேருக்கும் காட்டியதோடு, "அத்தை! அப்பா, உங்கள் சுப்ரமணியந்தானு? இனி சந்தேக மில்லையே! ...அத்திம்பேரே! சித்தப்பா இதோ இந்தப் பழைய டைரிகளைப் புரட்டிப் பாருங்கள்" என்று சந்திரசேகர னிடத்தில் தானே டைரியைக் காட்டினுள். அவர் அதை விச்வத்திடம் கொடுத்து, "விச்வம், சரியாக உறக்கப் படி. உன் அக்கா கேட்கட்டும்" என்ருர். டாக்டர், இந்த அதிசயத்தில் லயித்துப்போய் அப்படியே உட்கார்ந்து விட்டார். விச்வம், டைரியைப் படிக்கவாரம்பித்தான்.

வருடம்...மாதம்...தேதி.

சென்ற வருஷம் உத்ஸவம் செய்தது இப்போதுதான் போலிருக்கிறது. இதற்குள் ஒரு வருடம் ஓடிவிட்டது. முருகா! உன்னருளால் ஒரு குழந்தைப் பேருக்கு பாக்ய மில்லாவிட்டாலும், உன் உத்ஸவ கைங்கர்யத்திற்காவது குறையாது பாக்யத்தைக் கொடு...வழக்கப்படி சகல சாமான்களுடன் வண்டியனுப்பி யாகிவிட்டது. மழை இல்லாது உத்ஸவம் நன்ருக நடக்கவேண்டும்.

* * * *

என்னப்பனே! உன்னுடைய விலையிலாத ப்ரேமை யின் அதிசயத்தை நான் என்னவென்பேன். உத்ஸ வத்தை ஆனந்தமாக முடித்துவிட்டு வீடு திரும்புகையில் நீயே ஒரு குழந்தை வடிவத்தில் உன் வேலாயுதம் போன்ற சூட்டுத் தழும்பு துடையில் ப்ரகாசிக்க எங்கள் சாமான் வண்டியில் படுத்துவிட்டு எங்கள் பிள்ளைக் குறையைத் தீர்க்க வந்துவிட்டாயா......ஆகா......சீட்டு போட்டதும் முருகன் ப்ரஸாதமாகவே கிடைத்தது. எந்த மகராஜன் பெற்ற குழந்தையோ? ஒருத்தி மகனுய் கண்ணன் பிறந்து மற்ருெருத்தி மகனுய் வளர்ந்ததுபோல் இங்கு வளர வந்து விட்டான். முருகா உன் திருவடியே துணை.

* * * *

இன்றுதான் எனக்குப் புத்திரோச்சவம் ஆன நாள். வேலாயுதம் போன்ற தழும்புடைய குழந்தை பிறந்த நன்னுளை வெகு தடபுடலாகக் கொண்டாடி மகிழ்ந்தேன். ஆயிரக் கணக்கான ஏழை பரதேசிகளுக்கு அன்னமிட்டு ஆனந்தித்தேன். அத்தனை பேர்களும் வேலாயுதத் தழும்பையே பார்த்து ப்ரமித்துப் பேசுகிருர்கள். குழந்தை தீர்க்காயுஸாயிருக்க முருகன் அருளவேண்டும்... இவனுக்கு என்ன பெயர் அங்கு சூட்டியிருந்தார்களோ! இங்கு என் தாயாரின் ஆசைப்படிக்கு ஸேதுராமன் என்று பெயரிட் டாயிற்று.

இவ்வளவு தூரம் படித்த உடனேயே அகிலாண்டம்மாள் ஆவேசத்துடன் எழுந்து, "விச்வம்...போதுமடா! இத்தனை அடையாளமே போதுமடா! என்னருமைத் தம்பீ...சுப்ரமணீ! என்னப்பனே! நான் பண்ண சகலவித அனியாயத்தையும் மறந்துவிட்டு என்னை மன்னித்துவிடு.... என் கண்மணீ அகல்யா...சித்தி! இதோ இவள்தான் நான் முன் சொன்ன அதே பெண் என்று அகல்யாவை மார்புறத் தழுவியவாறு பூரித்தாள்.

பாலாம்பாளுக்கு ஆச்சரியம்....ஆனந்தம் எல்லாம் ஒருங்கே உண்டாகிய போதிலும் தன் பேத்திக்குக் கிட்டவிருந்த அதிர்ஷ்டம் தன் கைநழுவிப் போய்விட்டதே என்ற ஒரு லேசான உணர்ச்சியும் கூடவே தோன்றாமலில்லை...சுப்ரமணியனைத் தடவிக்கொடுத்து ஆசிர்வதித்து—என்னருமைக் குழந்தாய்! சற்று முன்புதான் நான் உன்னைப்பற்றிப் பேசிக் கண்ணீர்விட்டேன்...அம்மா! அகிலாண்டம். துர்சொப்பனத்தின் விவரம் இப்போது புரிந்துவிட்டதடியம்மா! உன் பெற்றோர்களின் சொந்த மகனையும் அவன் பெண்ணையும் கைவிட்டு விடாதே என்று அந்த பித்ரு தேவதைகள் உன்னை இப்போது தான் எச்சரித்தார்கள். அதற்குள் எப்படி விசித்திரமாக சகலமும் விளங்கிவிட்டது பார்த்தாயா...தெய்வம் ஒரு போதும் தீமை செய்யாது. தெய்வத்தையும் முன்னோர்களையும் மறந்தால்தான் தீமை உண்டாகும். அதுசரி.... நாம் எதிர்பார்க்காமல் இத்தனை நன்மைகள் எங்கிருந்தோ பகவான் ஒன்று கூட்டிவிட்டாரே! இந்த ஆனந்தத்தைப் பங்கிட்டுக்கொள்ள நம்ம பாஸ்கரன் இல்லையே!" என்று நினைப்பூட்டினாள்.

"அக்கா! இப்போதுதான் நாம் வெகு வருஷத்திற்கு முன்பு நடந்த சம்பவத்தைப் பற்றிப் பேசினோம். கடவுள் கருணையால் கனவு கூட காணமுடியாத விஷயங்களைக் கண் முன்பே காட்டிவிட்டார்...அப்பா சுப்ரமணி!" என்று மார்புறச் சேர்த்துத் தழுவிக்கொண்டான் விச்வம். அகிலாண்டத்தின் நிலைமை அவளாலேயே விவரிக்க முடியாத ஆனந்தப் பெருக்கெடுத்துவிட்ட வேகத்தில் சிறு குழந்தையைப் போல் அழுவதும் சிரிப்பதும், தம்பியையும் அகல்யாவையும், ஸீதா லக்ஷ்மியையும் கட்டித் தழுவுவது மாகத் துள்ளுகிறாள்.

"அப்பனே! சுப்ரமணீ! எனக்குப் பேசவே தெரியவில்லை. உன்னை முருகக் கடவுளின் கருணையால் இத்தனை உயர்தர பதவிக்குக் கொண்டுவந்து உருப்படியாக்கிய பெரியவர்களை திக்கு நோக்கி வணங்குகிறேன். என்

மீதுள்ள சகலமான குற்றத்தையும் மறந்து மன்னித்து, உன்னருமை மருமான் பாஸ்கரன் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடி....அம்மா! ஸீதாலக்ஷ்மி....என்னை மன்னித்துவிடு" என்று கலங்கி கூறியவாறு அவள் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

மணி: அக்கா! எனக்கு ஒன்றுமே தோன்ருமல் ஒரே வெளிச்சத்தைப் பார்த்தவன் கண் கூசுவதுபோல் பேசத் தெரியாது தம்பிக்கச் செய்கிறது. பாஸ்கரனைப் பற்றி நீ கவலைப்படாதே. எத்தகைய மனிதர்களின் வாழ்க்கையிலும் ஒரு சரக்கல்—கலக்கம்—தடுமாற்றம்—ஏமாற்றம்—சூருவளி—சுழல் பள்ளம்—முதலிய எத்தனையோ பயங்கரங்கள் தோன்றி அந்தந்த சமயத்தில் அததன் ஆட்சியைப் புரிந்து வாட்டித் திருகிறது. உன் விஷயத்தில் பயங்கர வரதக்ஷிணை என்கிற பேய் பிடித்து ஆட்டி வதைத்த வேகத்தில் பூகம்பமே உண்டாகியது போல் எதிர்பாராத நன்மைகள், தீமைகள் இரண்டும் தோன்றி சக்கை போடு போட்டு நல்ல படிப்பினையைக் கற்றுக் கொடுத்து விட்டதல்லவா...

"ஐயோ! தம்பி! இனிமேல் இந்த புத்திகெட்ட காரியத்தின் பயங்கரத்தைப் பற்றிச் சொல்லாதேப்பா...டாக்டர்! என்னைக் கண்டு பரிகசிக்கிறீர்களா! கைகொட்டிச் சிரிக்கிறீர்களா! ஐயோ...அப்போது மிகவும் பிர்ப்போக்கான அந்தப் பிச்சை வாங்குவதை உயர்ந்த-உத்க்ஷ்ருடமான புண்ய கைங்கர்யமாக இந்தப் பாழும் மனம் எண்ணி அதையே ப்ரதானமாகக் கொண்டு திரிந்துவிட்டேன். இப்போது அதைப் பார்த்தால் என்னையே நான் வெறுக்கும்படி கூசுகிறது உள்ளம். பிள்ளைக்கும் பெண்ணுக்கும் என்றென்றும் அழியாமலிருக்கும் வகைகளில் பணத்தைக் கொடுத்தால் எத்தனையோ புகழுடையலாம். பிள்ளை வீட்டார் அந்தப் பணத்தை வாங்கி தம்மிஷ்டப்படி செலவு செய்து தின்றுவிடவோ, தாம்பட்ட கடனைத் தீர்க்கவோ, தம் மக்களுக்குக் கல்யாணத்தைச் செய்யவோ உபயோகிப்பதைப் போன்ற கேவலம் உலகில் உண்டா? என் பாஸ்கரன் சின்னஞ் சிருவனுனுலும் பலதரம் என்னிடம் கூறி வாதாடி இருக்கிறுன். மகாபாவி! அப்போதெல்லாம் அவைகளைக் காதில் வாங்காமல் அவனைப் புலிபோல் சீறினேன். நாய்போல் குறைத்தேன். செவிடன் காதில் ஊதிய சங்கநாதத்திற்குச் சமமாய் இருந்தேன். அந்தப் பாதகத்தின் விளைவை நன்ருக இப்போது புரிந்து கொண்டேன். என் பெற்ரேர்கள் கனவில் தோன்றி என் குடும்பத்தை வஞ்சித்ததால் தெரியும் சேதி! என்று கர்ஜித்த வாசகத்தின் அர்த்தத்தை இப்போது புரிந்து கொண்

டேன் டாக்டர்! இனிமேல் நான் புனர்ஜென்மம் எடுத்தவளாகிவிட்டேன். நானே இனி இதைப்பற்றி சக்கைப் போடு போடுவேன்'' என்று தனக்குத் தோன்றியபடியெல்லாம் தடதடவென்று உளருவதையும், ஆவேச உணர்ச்சியையும் பார்த்து டாக்டர் கடகடவென்று சிரித்துக்கொண்டே...''அம்மா! கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது என்பது பழமொழி. ஆனல் நீங்கள் அதிர்ஷ்டசாலி! கண் கெடுவதற்கு முன்பே சூரிய நமஸ்காரம் செய்துவிட்டீர்கள். சரி...இதோடு கண்ணை இப்படியே விடக்கூடாது. மறுபடியும் கட்டிவைக்க வேண்டும். அதிர்ச்சியினல் ஏதாவது ஆகிவிட்டால் கஷ்டம்.''

என்று டாக்டர் முடிப்பதற்குள் அகல்யா ஓடோடி வந்து ''அத்தை! இன்னெரு முக்கியமான சந்தோஷச் செய்தியை உனக்குச் சொல்லப் போகிறேன். இந்தா! இந்த பாலேயும் பழத்தையும் என் கையால் தருகிறேன். சாப்பிடு. பால் சாப்பிட்ட வாயால் பழிக்கக் கூடாது. தெரியுமோன்னே...இத்தனே பேர்களேயும் பார்த்தாயே உன் நாட்டுப் பெண் பூமாவைப் பற்றி நீ கேட்டாயா?'' என்று வெடிகுண்டை வீசிய உடனேதான் அந்த நினைவு வந்தது. ''ஐயயோ! என் கண்ணே அகல்யா! மன்னித்து விடடியம்மா...எங்கே அந்த...'' என்பதற்குள், ''அத்தை! இனி நீ எத்தகைய அனகரிகப் பதத்தாலும் அந்த உத்தமியைப் பழித்துப் பேசக்கூடாது தெரியுமா! அந்தப் புண்ணியவதியினல்தான் நாம் இன்று இத்தகைய மகோன்னதமான நிலையை அடைய பகவான் வழிவகுத்தான். அவளுடைய உடல் நிலை சரியில்லாது ஆஸ்பத்ரி வந்ததனல்தான் விஷயம் வளர்ந்து சங்கிலிபோல் நீண்டு சரியானபடி ப்ரகாசத்தைக் கொடுத்துவிட்டது. ஆஸ்பத்ரி வராதிருந்தால் இத்தனே நன்மைகள் எப்படி வரும். உனக்கு எப்படி அடிபடும். பாலாம்பா பாட்டியிடம் பச்சை மிளகாய் என்று நான் எப்படிப் பட்டம் வாங்கியிருக்க முடியும்'' என்று முடிப்பதற்குள், ''ஐயயோ! அந்த நர்ஸ் நீயாடி என் செல்வமே'' என்று பாலாம்பாள் கூச்சலிட்டாள்.

''ஆமாம் பாட்டீ! நானேதான். உறவு முறை தெரியாவிடினும் பகவான் ரத்த சம்மந்தத்தின் உணர்ச்சியைக் காட்டி அத்தைக்கு அருகிலேயே இருந்து செய்யும்படியும், பூமாவைக் கண்ணில் வைத்து இமையால் மூடும்படியும் செய்துவிட்டார். அத்தை! நீ இன்னும் கூடிய சீக்கிரத்தில் பாட்டியாகப் போகிருய். பூமா கர்ப்பவதியாயிருக்கிருள். அந்த அதிர்ஷ்டக்காரப் பயல் வரும்போதே எத்தனை

நன்மைகளைச் செய்துவிட்டான் தெரியுமா!" என்று முடிப்பதற்குள், "என்ன! பூமா கர்ப்பவதியா! நிஜமாகவா? ஆண்டவனே..." என்று தன்னை மறந்து கைகளைக் கூப்பினாள்.

இதுவரையில் எந்த சம்பாஷணையிலும் கலந்துகொள்ளாமல் தூர நின்றிருந்த சந்திரசேகரனுக்கு அதற்குமேல் பொருமையை வகிக்க மாட்டாது அருகில் ஓடிவந்து, "ஆண்டவனே! அடேயப்பா! ஆருக்கும் பயப்படேன் ஆண்டவனே! ஆனை குதிரை வந்தாலும் தாண்டுவனே" என்கிற பழமொழிபடிக்கு மதம்பிடித்த ஆனையைப் போலிருந்த உன்னை அங்குசத்தா லடக்கிவிட்டானே" அவனை ப்ரதக்ஷணம்பண்ணிதான் நமஸ்கரிக்கவேண்டும். ஆண்டவனேயாம் ...ஆண்டவனே" என்று பொரிந்துத் தள்ளியதைக் கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். அந்தச் சிரிப்பொலி அந்த அறை பூராவும் சுற்றி வட்டமிட்டது.

---

## 22

### பாலைவனமே சோலைவனம்.

வேலனை ஊருக்கனுப்பிவிட்டு பாஸ்கரன் தன்னந்தனியாகஉட்கார்ந்திருக்கும்போதுதான் தனது தனிமையின் பரிபவமும் சில தினங்களுக்குள்ளேயே இத்தகைய ஒரு பயங்கரமான புயலடித்து ஆளைக்குலுக்கிவிட்ட அதிர்ச்சியையும் எண்ணி எண்ணிப்பார்க்க, அவன் இதயம் சோர்வுற்று ஓய்ந்துவிட்டது போன்ற உணர்ச்சி உண்டாகியது. இதே என்றாலும் வேலன் ஊருக்குச் சென்று விஷயமறிந்து கடிதமெழுத எத்தனை நாட்கள் மத்தியில் கழியவேண்டி யிருக்கிறது. அதுவரையில் எப்படி நாட்களைக் கடத்துவது....என்கிற பயமும் கூடவே பிடித்துக் கொண்டது.

திராசுத் தட்டில் ஒருபுறம் விலை மதிக்கமுடியாத அகல்யாவின் அமைதியும், பண்பாடும் நிறைந்த அழகிய உருவமும், மற்றொருபுறம் பாரதியின் வெறுக்கத்தக்க—பாரதநாட்டின் பெருமைக்கே இழிவை—அழிவைத் தேடும்—களங்கம் நிறைந்த முகம் தோன்றி அவனது சிந்தனைச்சங்கிலியைப்பிடித்துப் பலமாக ஊஞ்சலாட்டியது. மழையோ 'ஜோ' வெனக் கொட்டி உலகைக் குளிரச் செய்கிறது. எனினும் இவன் உள்ளத்தைக் குளிரச் செய்யும் சக்தி அதற்கில்லாது போயிற்று.

கலக்கமே வடிவாய் சாய்வு நாற்காலியில் படுத்திருக்கையில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டுத் திறந்து பார்த்தான். தன் ஆபீஸ் சினேகிதன் தன்னைப் போன்ற ஒரு ஐ. ஏ. எஸ். சிரித்த முகத்துடன் நிற்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் "வாருங்கள்! வாருங்கள்" என்று மிக்க மரியாதையாகக் கூப்பிட்டான்.

வந்தவரும் வெகு அன்பாயும் வெகுநாட்கள் பழகியது போன்ற ஐக்யத்துடனும் உட்கார்ந்தார். "ஏது இந்த நேரத்தில் கொட்டுகிற மழையில் வந்திருப்பது ஆச்சரியமாயிருக்கிறதே! ஏதாவது வரன் வேட்டையாடுவதற்குக் கிளம்பினீர்களா? அவர்கள்தான் வெய்யில், மழை எதையும் பார்க்காமல், கால நேரத்தையும் கவனிக்காமல் செல்வார்கள் பாவம். தங்களுக்கு அப்படிப்பட்ட...என்று" இழுத்தாற்போல் குரும்புத்தனமாகப் பேசுவதைக் கேட்டு வந்தவர் சிரித்துக்கொண்டே, "ஸார்! உங்களுக்கு ஜோஸ்யம் கூடத் தெரியும்போலிருக்கிறதே! எப்படி ஸார் என்னுடைய ரகஸியத்தை நீங்கள் அறிந்தீர்கள்" என்று அதிசயித்தவாறு கேட்டார்.

**பால்:** ஸார்! இது தெரியாதா! என் மாமனுர் தன்னுடைய புத்ரகாமேஷ்டியாகத்தின் பலனுல் கிடைத்த மூன்று பெண்களுக்கும் அவர் போட்ட நடைகள்"...என்று இவன் முடிப்பதற்குள், "அடடா! என்ன ஏமாற்றமாகி விட்டது ஸார். தாங்கள்..."

**பால்:** ஆமாம்! முழு ஏமாற்றம்தான் ஸார்! ஏதோ ஆள் வாட்டசாட்டமாய் நல்ல உத்யோகத்திலிருக்கிருனே சின்னப் பயல்; இன்னும் கல்யாணமாகியிருக்காது... என்று...

**வந்தவர்:** ஸார்! என்னுடைய தவருன எண்ணத்திற்கு நானே வருந்துகிறேன். உங்களைப் பார்த்தால் ப்ரம்மச்சாரியாகவே நான் நினைத்துவிட்டேன். அதோடு தங்களிடம் ஆபீஸில் பலதரம் பேசியதில் வரதக்ஷிணை வாங்கும் கூட்டத்திற்குத் தாங்கள் விரோதி என்றும் என் மனத்தில் பட்டது. அதே கொள்கையைத்தான் என் பிதாவும் கொண்டிருக்கிருர். அதனுல் என் பெண்ணுக்காக...

**பால்:** ஸார்! வருந்துகிறேன்; மன்னிக்கவும்...." என்று இழுத்தான். வந்தவர் ஏமாற்றத்துடன் கொட்டும் மழையில் விடைபெற்றுக் கொண்டு சென்ருர்.

பாஸ்கரனுக்கு அப்பாடா! என்று ஒரு பெருமூச்சு பலமாகக் கிளம்பியது. எனக்குள்ள மனக்குழப்பம் போதாதென்று சனியன்பிடித்தவர்களெல்லாம் கல்யாண

வேட்டையல்லவா ஆட வந்துவிடுகிறார்கள். இதென்ன சாபக்கேடோ தெரியவில்லையே! வேலனுக்குச் சௌகரிய மாய் வண்டிகிடைத்துப் போயிருக்க வேண்டும். அவனிட மிருந்து தகவல் வரும்வரையில் ராம நாம பஜனைதான் செய்ய வேண்டும்...என்று எண்ணமிட்டவனாய் சாய்வு நாற் காலியில் படுத்திருக்கையில் மறுபடியும் யாரோ கதவிடித்த ஓசைகேட்டதும், அட க்ரகசாரமே! இன்னும் எந்த மகானு பாவன் வரன்வேட்டைக்கு வந்துவிட்டானோ தெரிய வில்லையே.. கடவுளே! காப்பாற்று...என்று வேண்டியபடி கதவைத் திறந்தான். 'சொட்ட சொட்ட வந்தேன் தோழி கதவைத் திற' என்பது பழமொழி. அதுபோல் வேலன் சொட்டச் சொட்ட குளிரில் நடுங்கியபடி வந்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு, "என்னடா! வேலா! ஏன் இப்படி வந்து விட்டாய்! பணத்தை எங்காவது கோட்டை விட்டுவிட்டாயா என்ன?" என்று பதறியவாறு கேட்டான்.

வேலன் நடுங்கும் சரீரத்துடன் "எஜமான்! மழை பெரும் வெள்ளக்காடாய் ஓடுதுங்களாம். வழியில் தண்ட வாளமே பெயர்ந்து போய் வண்டி போக்கு வரத்து நின்று விட்டதாம். ரயில் கிளம்பி அடுத்த ஸ்டேஷனுக்குப் போனதும் அதிகாரிகளிடமிருந்து இத்தகவல் கிடைத்து விட்டதாம். உடனே போன வண்டியைத் திருப்பி அத்தனை ஜனங்களையும் இறக்கிவிட்டார்கள். என்ன அல்லோல கல்லோலப் படுகிறது தெரியுமா! கல்யாணப் பார்ட்டி கர்மாதி பார்ட்டி, ஊர் சுற்றும் கோஷ்டி, வ்யாபார கோஷ்டி...அடேயப்பா! தவி தவி என்று தவித்துக் கொண்டு கூக்குரலிடுகிறதுகள். பாவம்!"

பாஸ்: அட அபசகுனமே! உன்னை அனுப்பி விட்டு அந்த நிமிஷம் முதல் நான் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மனக்கோட்டைகள் பல பல கட்டிக் கொண்டிருந்தேன்....உம்....வேலா! முதலில் நீ ஈர உடை களை மாற்று. இந்தா சூடாக இந்தப் பாலைக் குடி" என்று ப்ரளாஸ்கிலிருந்து ஒரு டம்ளர் பாலைக் கொடுத்தான். வேலன் உடை மாற்றிக்கொண்டு மூணும் பேஸ்த்து வைத் ததுபோல் உட்கார்ந்தான். பாஸ்கரனுக்கு மனது ஒரு நிலை கொள்ளாமல் தவிக்கும் வேகத்துடன் கண் மூடி மவுனியாகிச் சாய்தான்.

கவலையே உருவாய் ஒன்றும் தோன்றாமல் தலையில் கையை ஊன்றியபடி பாஸ்கரன் ஆபீஸில் உட்கார்ந்திருக் கையில் ஆபீஸ் கடிதங்களில் 'ப்ரத்யேகம்' என்று கொட்டை எழுத்தில் எழுதிய தனிக் கடிதம் தன் விலாசத்திற்கு இருப் பதைக் கண்டு வியப்புற்று யாருடைய கையெழுத்தாக

இருக்குமென்று உற்றுக் கவனித்தான். ராமுவின் கை எழுத்தும், தங்கள் ஊரின் தபால் முத்திரையையும் பார்த்ததும் முதலில் ஆபீஸ் கடிதங்களைக் கூடப் பார்க்கத் தோன்றாமல் ஆவல் துடிக்கக் கடிதத்தைப் படிக்கத் துடங்கினான்.

என்னருமை நண்பா! பாஸ்கரா! உபயக்ஷேமம்.

நான் கதைகளில் படித்திருக்கிறேனேயன்றி வாழ்க்கையில் கண்டதுமில்லை! கேட்டதுமில்லை! அத்தகைய புதுமை... விசித்திரம்! ஆச்சரியம்! அதிசயம்....இன்னும் எத்தனை பதங்கள் சொன்னாலும் போதாது. அத்தனையும்நம்பும்படியான மகத்தான சம்பவம் உன் குடும்பத்தில் நடந்துவிட்டது. அதிர்ஷ்டசாலி என்றால்—பாக்கியவான் என்றால்—கொடுத்து வைத்தவன் என்றால்-உனக்கே தகும். முதலில் உன் தாயார் பிழைத்துக் குண்டு போலாகியதைத் தவிற கண்கள் நன்றாக பளிச் சென்று தெரிகிறது! முதல் மேக்ஷ சந்தோஷச் செய்தி இது. அடுத்த செய்தி இருக்கிறது பாரு அத்புதமான நாவல் படிப்பதுபோன்ற அதிஸ்வாரஸ்யமான விஷயமாகும்!

(ஆஸ்பத்ரியில் நடந்த சகல விவரங்களையும் எழுதிப் பின்)

பாஸ்கரா! விஷயம் எப்படி! ஐ. ஏ. எஸ். ஸேதுராமனவர்கள் உன் தாயின் கூட இரட்டையாகப் பிறந்த ஒரு அபூர்வ பந்துத்வம் சேர்ந்து விட்ட அதிசயத்தை என்னால் நம்பவே முடியவில்லை.

முக்கியமானதை விட்டு விட்டேனே! என் தாயாரும் பிழைத்துக் கொண்டாள். என்னையும் லலிதாவையும் பார்த்த உடனே அவளுக்கு எங்கிருந்தோ ஒரு புதிய தெம்பு, பலம் ஹனுமார் சஞ்சீவி கொடுத்ததுபோல் திடீர் தெளிவு உண்டாகி விட்டது. அது விஷயத்தில் மன நிம்மதியுடன் உன் தாயாரைப் பார்க்கப் போனேன். அங்கு ஆஸ்பத்ரியாகவே தோன்றவில்லை. ஆனந்த பவனமாகவும் ஒரே குதூகலமாகவும் இருந்தது. உன்னருயிர் ப்ரேமவல்லியைப் பார்த்தேன். உனக்காக உன் தாயார் தேடி வைத்திருந்த துதிக்கையில்லாத ஆனைக்குட்டியையும் பார்த்தேன். உன்னைக் காணாத வருத்தத்தில் ஸேதுராமன் முதல் தவியாய்த் தவித்ததைப் பார்த்த பிறகு என்னால் மவுனமாக இருக்க முடியவில்லை. நீ உயிருக்கு ஆபத்தின்றி க்ஷேம

மாக இருக்கிறாய் என்று மட்டும் சொல்லி வைத்தேன். உன் மாமாவின் ஆதி சரித்திர டைரிகளை நான் கதை படித்தது போல படித்தேன். பாஸ்கரா! இனிமேல் கவலையின்றி நீ நிம்மதியா இரு. நான் அடுத்த வாரமே ஊருக்குப் போய் விடுவேன். அதற்குள் ஏதாவது விசேஷமிருந்தால் எழுதுகிறேன். லலிதா உனக்கு நமஸ்காரத்தைச் சொல்லச் சொன்னாள்.

இதற்குமேல் அவனால் சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் கட்டுப்படுத்த முடியவே இல்லை. தன்னை இது காறும் வாட்டி வருத்திய சகல துன்ப இருளும் நீங்கி திடீரென்று வாழ்க்கை வானத்தில் கிழக்கு வெளுத்துவிட்டது போன்ற உணர்ச்சியுண்டாகிய வேகத்தில்தான் ஒரு உத்யோக நிலையத்திலிருப்பதை எல்லாம் மறந்து குதிக்கவே ஆரம்பித்துவிட்டான். ஸேதுராமன் என் தாய் மாமாவா! என் கண்ணான அகல்யா என் மாமா மகளா! ஐயோ! இப்போதே போய்ப் பார்க்க வேணும் போல் பதைக்கிறதே! அதிகமான வருத்தத்தைப் பட்டதனால் அதிகமான பன்மடங்கு சந்தோஷத்தைப் பகவான் கொடுத்து விட்டாரே! என்னப்பனே! உன் திருவடிகளுக்கு ஆயிரம் கோடி நமஸ்காரம் செய்கிறேன்....

என்று வேண்டிக்கொண்டு மறுபடியும் அதே கடிதத்தைப் பலமுறை படித்தான். உடனே தன் பிதாவுக்கு ஒரு தந்தி கொடுக்கலாமா? மாமா...அகல்யா—முதலிய எல்லோருக்கும் ஆளுக்கொரு தந்தியடித்து என் மகிழ்ச்சியை தெரிவிக்கலாமா! என்று துடிக்கிறான். அகத்தினழகு முகத்தில் தெரியும் என்றபடி முகம் ஒரே சந்தோஷ பிம்பமாய் மலர்ந்து பூத்துக் குலுங்குவதைத் தானே கண்ணாடியில் பார்த்துக் களிக்கிறான். இந்த குஷியை யாரிடமாவது சொல்லிக் களித்தால் தேவலைபோல் தோன்றியதால் வேலனின் வரவையும் அவன் மனம் எதிர்பார்த்தது.

ஆபீஸ் காரியங்களை இத்தனை நேரம் கவனிக்காதிருந்து விட்டோமே என்கிற நினைவு வந்ததும் அந்தக் கடிதத்தை ஜேபியில் போட்டுக்கொண்டு வேலைகளை செய்யவாரம்பித்தான். சற்று முன்பு வரை வாடி வருந்திக் குமுறிய உள்ளம் இப்போது சந்தோஷப் பரவை போல் சிறகடித்துப் பறக்க வாரம்பித்தது.

## வரன் வேட்டையும் உறுதி உள்ளமும்.

அதி ஸ்வாரஸ்யமாகப் புத்தகம் படித்துக் கொண்டு ஒய்யாரமாய்ப் படுத்திருந்த லில்லியை அங்கு வந்து பின்புறமாகப் பின்னலை இழுத்து உலுக்கியும், முதுகில் தட்டியும் கூப்பிட்டு, "அக்கா! அக்கா! யாரோ ஒரு மாமாவும் ஒரு ஷோக்கான உன்னைப் போன்ற பெண்ணும் உன் சிநேகிதையாம்....இருவரும் வந்திருக்கிறார்கள். உன்னைப் பார்க்க வேண்டுமாம்" என்று கூப்பிட்டாள்.

லில்லி: இதோ வருகிறேன் என்று சொல்லு என்று கூறியபடியே தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு கையிலுள்ள புத்தகத்துடன் எழுந்து வந்தாள். விருந்தினர் உட்காரும் விடுதியில் தனது பாலிய சிநேகிதை அகல்யாவும் அவள் பிதாவும் இருப்பதைக் கண்டு, ஓ...அகல்யாவா...வாம்மா....வாவா...ஏது இத்தனை தூரம் என்று கூறியபடியே தாவிக் கட்டிக்கொண்டு வரவேற்றுப் பின் அவள் பிதாவையும் உபசரித்துப் பேசினாள்....ஆமாம், நாங்கள் இந்த ஊருக்கு வந்து ஒரு மாதங்கூட ஆகவில்லையே! உனக்கு எப்படித் தெரிந்தது எங்கள் விலாசம் என்று வியப்புடன் கேட்டாள்.

அகல்யா: உன்மீதுள்ள விச்வாசத்தில் எப்படித்தான் இடத்தை மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துவிட்டோம் பாரு. பெரிய உத்யோகஸ்தர்களைப் ஊர் விட்டு ஊர் மாற்றினால் பத்ரிகையில் வராதா? தவிர நாம் இருவரும் சிநேகிதர்கள் போல் உங்கப்பாவும் எங்கப்பாவும் உத்யோக முறையில் சிநேகிதர்கள் என்பதை மறந்துவிட்டாயா...

லில்லி: மறக்கவில்லை அகல்யா! அப்பாதான் கடிதம் போடுவதில் முழுச் சோம்பேரியாயிற்றே! இதை நாம் காலேஜ் படித்த காலத்தில் பார்க்கவில்லையா! அதனால் கேட்டேன்.

அகல்: அப்பா இன்னமும் அப்படியே சோம்பேரியாயிருப்பாரா லில்லி! உனக்கு வரன் தேடும் வேட்டையில் இப்போதுதான் இறங்கி இருக்கிறாராம். நல்ல வரனாகத் தெரிந்தால் லில்லிக்குச் சொல்லு என்று அப்பா கடிதம்

எழுதினர். விலாஸம் தெரிந்தது. ஏதாவது வரன் நிச்சய மாகியிருக்கிறதா லில்லி?

லில்லி: ஓகோ! அப்பாவின் கைவரிசை உங்களிடமும் காட்டிவிட்டாரா! சரி! சரி! முதலில் சூடாக ஏதாவது சாப் பிடுங்கள் என்று கூறி ஒரு மணியை அழுத்தினள். அடுத்த நிமிடம் டிப்பன் காபி சகிதம் வேலைக்காரன் ப்ரஸன்ன வதனத்துடன் தோன்றினன். டிபன் சாப் பிட்டவாறே அகல்யா, "என்ன லில்லி! இந்த ஊர் எப்படி இருக்கிறது. உனக்குப் பிடித்திருக்கிறதா!......வரன் ஏதாவது....

லில்லி: அடேயப்பா! வரனைப்பற்றி விடமாட்டாய் போலிருக்கிறதே! அப்பாவுக்குக் கூட இப்படித்தான் பயித்தியம் பிடித்து அலைகிறார்...யாரோ ஒரு ஐ. ஏ. எஸ். இருக்கிறனும். அவனையே நேரில் போய் பார்த்து விசா ரிக்கப் போவதாகச் சொல்லிச் சென்றுர். அப்பாவுக்கு ஜாதகத்தில் நம்பிக்கை இல்லை.

அகல்: ஐ. ஏ. எஸ்ஸா........பலே........என்ன பெயர் அவருக்கு.

லில்லி: அடேடே! உனக்கென்ன ஐ. ஏ. எஸ். என்றால் அத்தனை மவுஸா! அவர் பெயர்...பாஸ்கரனும்....

அகல்யாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தன் பிதா வின் முகத்தை ஒருதரம் பார்த்தாள். தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு பேசத் தொடங்கி....பேஷ் லில்லி! பெயரே வெகு அழகாயிருக்கிறது. நீ ஆளை நேரில் பார்த் திருக்கிறயா? எப்படி இருக்கிறன்.

லில்லி: ஆள் பலே ஜோராயிருக்கிறன். அதனல் தான் அப்பா முனைந்து கேட்கச் சென்றிருக்கிறர்... அதோ கார் வந்துவிட்டதே. அப்பாவே வந்துவிட்டார்.... அப்பா! நம்மெல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைக் கொடுக் கும் பொருட்டு என் சிநேகிதை, உன் சிநேகிதர் எல்லாரும் வந்திருக்கிறர்கள்.. என்று கூறி வரவேற்றுள்.

"அடாடாடா! ஸேதுராமன்! வரணும்...வரணும். வெகு வெகு மகிழ்ச்சியடைகிறேன். என் கடிதம் சேர்ந்த தோன்னே" என்றார்.

ஸேதுராமன்: அதனல்தான் இடத்தை நேராகப் புரிந்து கொண்டு வந்துவிட்டோம்....

அகல்யா: மாமா! ஏதோ வரன் பார்க்கப் போனீர் களாமே! அதென்னவாயிற்று. காயா, பழமா...

லில்லி: அகல்யா! அப்பா வரும்போதே அது தோல்வி தான் என்பதை அவர் முகமே எனக்குச் சொல்லிவிட்டதே....ஏம்பா! அதானே.

வாசுதேவன்: ஆமாம்மா! முன்பின் விசாரிக்காமல் முட்டாள் போல் நான் போய் அவமானப் பட்டுக்கொண்டு வந்தேன். அந்தப் பிள்ளையாண்டானுக்குக் கல்யாண மாகிவிட்டதாம். இதைக் கேட்டதும் முகத்தில் கரி பூசியது போலாகிவிட்டது. பேசாது வந்துவிட்டேன்.

லில்லி: அப்பாவுக்கு நன்றாக வேண்டும். ஐ. ஏ. எஸ். என்று எந்த மனிதனைப் பார்த்தாலும் ஓடவேண்டியது தான்...அதில் மட்டுமென்ன அத்தனை மவுசு. மற்ற உத்யோகங்கள் என்ன குறைந்துவிட்டதா! சொத்தையா! சொள்ளையா!

தந்தையும் மகளும் பேசும் விஷயம் பூராவும் அகல்யாவுக்கும் அவள் பிதாவுக்கும் வியப்பிலும் வியப்பாகப் பட்டதோடு, பாஸ்கரனின் க்ஷேமத்தையும் மனோ உறுதியையும் சமய சஞ்சீவியாய் ஒரு பெரிய பொய்யைச் சொல்லி சாதித்த உத்தம குண லக்ஷணத்தையும் நன்றாக அறிந்து கட்டுக்கடங்காத சந்தோஷமும் புதிய உணர்ச்சியையும் அடைந்து ஒருவரை யொருவர் பார்த்துக் கண்களாலேயே பேசிக் களித்தார்கள். சிறிது நேரம் பேசிவிட்டு இருவரும் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினார்கள்.

## 24

### ஆனந்த பூங்காவில் அத்புத மலர்கள்.

“அப்பா! நாம் இந்த அதி ஆச்சரியமான விஷயத்தை பாஸ்கரனிடம் சொன்னால் அவர் என்னமாய் ப்ரமித்துப் போவாரப்பா! அதை நினைத்து நினைத்துப் பூரிக்கிறதப்பா நெஞ்சம். அவருக்கு விஷயம் தெரியாததால் எத்தனை கவலையுடன் தத்தளித்துக் கொண்டிருப்பார் பாவம்...” என்று தன்னுடைய உள்ளத் துடிப்பை அப்படியே எடுத்துக் காட்டிக் கூறினாள் அகல்யா.

தான் பாஸ்கரனை எப்போது பார்த்துப் பேசி இந்தப் புதிய அதிசயகரமான விஷயத்தைக் கூறி அவனைக் களிக்கச் செய்யப் போகிறோம். அவன் என்ன மாதிரி

நடந்து கொள்வான். என்றெல்லாம் தனக்குள் எண்ணி ஏதேதோ சிந்தனைக் கயிற்றில் ஊசலாடியது அகல்யாவின் உள்ளம்.

நேராக பாஸ்கரன் விடுதிக்குக் கார் வந்து நின்றதும் சரீரம் பூராவும் இன்பத் தேன் பாய்ந்து இனிய மின்ஸாரம் தாக்கியது போல் புல்லரித்த நிலையில் அகல்யா பாஸ்கர னுக்குப் பிடித்தமான பழங்களைக் கையில் ஏந்தியவாறு, ஆடும் மயிலோ! அன்னப் பேடோ! பாடுங் குயிலோ! பங்கயச் செல்வியோ! என்று ஐயுறும்படி ஆனந்தமே வடிவமாய் மாடிப்படி ஏறினாள். சாய்வு நாற்காலியில் வாடிய முகத்துடன் தலையில் கைகளை வைத்துக்கொண்டு பரிதாப பிம்பமாய்ப் படுத்திருக்கும் பாஸ்கரனைப் பார்த் ததும், உண்மையில் பெண்மையின் அச்சம் ஒருபக்கம் இழுத்த போதிலும் அன்பு வெள்ளம் கட்டறுத்துக் கரை புரண்டுவிட்ட வேகத்தில் தன்னை மறந்து "அத்தான்... அருமை அத்தான்! நம் வாழ்வின் அந்தகாரம் நீங்கி இன்ப சூரியன் பல்லாயிரக் கிரணங்களுடன் தோன்றிவிட்டான். கிழக்கு வெளுத்துவிட்டது..." என்று ஆவேசம் வந்த வளைப் போல் கூறி அவன் கனவிலும் எதிர்பாராத விதம் பாஸ்கரனின் காலில் விழுந்து இரண்டு கால்களையும் சேர்த்துக் கட்டிக்கொண்டு முகத்தில் பதித்தாள்.

ப்ரேமை ஜ்வாலையின் அனல் வீசும் அறிகுறி போலும் ஆனந்த குமுறலும் விம்மலும் கூடி கர்ஜிப்பது போலும் பெருமூச்சும் படபடப்பும் மார்பின் துடிதுடிப்பும் ஒன்று சேர்ந்து பெரிய சப்தத்தை உண்டாக்கி பாஸ்கர னைத் திடுக்கிட்டு ப்ரமிக்கச் செய்த வேகத்தில் தாக்குண்ட பாஸ்கரன் சடக்கென்று நிமிர்ந்து பார்த்தான். தன் கண்களையே தான் நம்பாமல் திகைப்பும் அதிர்ச்சியும் ஆவேசமும் கொண்டு, "ஹா! அகல்யாவா...என்னிதய ராணி...என்னுயிரினும் இனிய மாமன் மகள் அகல் யாவா....நான் உண்மையான காக்ஷியையா காண் கிறேன்...அகல்யா....அகல்யா" என்று தன்னை மறந்த உணர்ச்சியால் தாக்கப்பட்டு ஆவேசத்துடன் எழுந்து அகல்யாவை அப்படியே தூக்கி நிறுத்தி முகத்தை நிமிர்த்திக் கண்குளிர...மனங் களிக்க, இதயம் ஆனந்தப் பரவசமுற....இமை அசைக்காமல் பார்த்தான்.

இருவரிடையேயும் மவுனம் குடிகொண்டது. ஏற் கெனவே இளந் தம்பதிகளின் ப்ரேமை வெள்ளம் எத்தகைய கடும் வேகத்துடன் கரை உடைத்துக்கொண்டு வரும் என்கிற உணர்ச்சியை அகல்யாவின் பிதா தன் வாழ்க்கையிலும் தற்சமயம் இந்த அன்பு பிம்பங்களிடமும்

கண்டு அறிந்திருப்பதால் அகல்யாவை வேண்டுமென்றே முன்கூட்டி அனுப்பிவிட்டு அவர் சற்று தாமதித்துப் படிகளிலேயே நின்று இந்த அத்புத ஆனந்தக் காக்ஷியைக் கண்டு பூரித்துக் கண்ணீரைச் சிந்தியவண்ணம்.... என்றென்றும் இந்த தம்பதிகளின் அன்யோன்ய இன்பத்தை மலைபோல வளரவைத்து ரக்ஷிக்க வேண்டும் என்று தந்தையின் கடமைப்படிக்கி பகவானை வேண்டிய படி மறைவாக நின்றார்.

ஆவேசப் புயல்—அந்தரங்க சூறுவளி—ஒரு சிறிது தணிந்த பிறகு பெண்மையின் கூச்சம் குபீரென்று அகல்யாவின் இதயத்தைத் தாக்கியதும் மெல்ல மிரண்டு மிரண்டு பார்க்கும் மான் போல் பாஸ்கரனைப் பார்த்தபடி ஒரு சிறிது விலகி நின்றவண்ணம், "அத்தான்...." என்று அழைத்தாளேயன்றி வார்த்தை நாக்கைவிட்டு வெளி வராது தடைபட்டுவிட்டது. அதன் பிறகே தன்னோடு வந்த தந்தையின் நினைவு பளிச்சிட்டதும் நாற்புறமும் திரும்பிப் பார்த்தாள்.

அதே சமயம் பாஸ்கரன் வெகு அமைதியுடன், "அகல்யா....நான் காண்பது கனவல்லவே....நினைவுதானா" என்று தடுமாறிய நிலையில் கேட்கும்போது, ஒரே பாய்ச்சலில் பாய்ந்த சுப்ரமண்யம், "என்னருமை மருமானே! என்னுருயிர் செல்வமே....நீ காண்பது முற்றும் கனவே அல்ல. சகலமும் இன்ப முறசடித்து இனியக் கட்டியங் கூறி விளக்கும் ஆனந்தமிகும் அத்புத காக்ஷியாகும். இனி எத்தகைய பயங்கர இருளும் உன் வாழ்வில் தோன்றாது. பாஸ்கரா!....என்னுருயிர் பாஸ்கரா!" என்று கட்டித் தழுவியவாறு, "நான் உனக்கு ஒரு அற்புதமான ரகஸிய விஷயத்தை..."

"அப்பா... அப்பா....நான்தான் சொல்லப் போகிறேன். எனக்குத்தான் அந்த உரிமை வேணும்" என்று அகல்யா பெரிய சத்தமிட்டுக் கூறி முடிக்கு முன்னர் இவ்விருவருமே திகைக்கும்படி பாஸ்கரனே முந்திக்கொண்டு "மாமா...மாமன் மகளே...நான் உங்கள் எட்டு பொட்டு ரத்தத்தில் பல பொட்டுக்கள் கலந்த சொந்தக்காரனாகி விட்டேன். ஸ்ரீமதி அகிலாண்டேச்வரியம்மாளுடன் இரட்டைப் பிறவியாகப் பிறந்த—வேல் முருகன் வேலாயுதத்தின் ட்ரேட் மார்க்குத் தொடையில் பதிந்த—என் மாமா சுப்ரமண்யமல்லவா தாங்கள். என் மாமி சவுக்யமா? பாலாம்பா பாட்டிக்கு உண்மையில் என்னுடைய சந்தோஷத்தில் கோயில் கட்டிவைத்துக் கும்பாபிஷேகம் செய்து பூஜிக்கலாம் போலிருக்கிறது என்று சொல்வதைக் கேட்டு நம்பவே முடியாது வியப்புக் கடலாடினார்கள்.

"மாமா! இதற்குள் இத்தனை அற்புதமான மர்மத்தை இந்தப் பயலுக்கு யார் தெரிவித்திருப்பார்கள் என்று வியக்கின்றீர்களல்லவா? இதோ இக்கடிதத்தைப் பாருங்கள். என்னருமை நண்பன் எழுதி இருக்கிறான்" என்று கூறி கடிதத்தைக் கொடுத்தான்.

அகல்யா ஆவலே வடிவமாக வாங்கி உரக்கப் படித்துத் தன் பிதாவும் கேட்கும்படிக்குச் செய்துவிட்டு கடகட வென்று சிரித்தபடியே, அடாடா! நான்தான் முதல்முதல் இந்தக் கதைகளில் வருவதுபோன்ற அற்புதமான—மர்மமான—ஆச்சரிய விஷயத்தைக் கூறி அத்தானை ப்ரமிக்கச் செய்வதற்காக ஆகாயத்தில் பறந்து வருவதற்குள் அதற்கும் வேகமான மற்ெருரு பறவை விஷயத்தைச் சிறகடித்துச் சிதறவைத்து விட்டதே....அத்தான்... இந்த மாதிரி ஒரு சம்பவங்களை நாம் கனவிலாவது காணமுடியுமா! எத்தனை சிக்கல் முக்கல்களை எல்லாம் வாழ்க்கையில் புகுத்திய கடவுள் ஒரே க்ஷணத்தில் அதை அவிழ்த்தும் விட்ட அருள் வடிவத்தை ஆயிரம் தரம் வணங்கினலும் போதாது....

ஆமாம்மா! இதில் இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமா? பாலாம்பாள் பாட்டிக்குக் கோயில் கட்டிவிட வேண்டுமென்று என்னருமை மருமகன் சொல்லிவிட்டான். எந்த பாலாம்பாளால் இத்தனை நன்மைகளும் மறைந்திருந்த மர்மங்கள் வெளியாகி ஆனந்தத்தைக் கொடுத்ததோ அதே பாலாம்பாளின் மகன் விச்வத்தினல்தான் இந்த சிக்கு முக்கு குழப்பம்—வீபரீதங்கள் உண்டாகியது. மகன் செய்த சதியைத் தாய் நிவர்த்தி செய்துவிட்டாள். இந்த ஆச்சரியத்திற்கு என்ன சொல்வது....

என்று சுப்ரமண்யம் முடிப்பதற்குள் "......என்ன! என்ன! விச்வமா இதற்கு முட்டுக்கட்டைப் போட்டு அனமதேயம் என்றும் உன்னை வேசிமகன் என்றும் கூறி தீக்ஷிதர் என்கிற பெயரில் கலைத்தானு? இது எனக்குத் தெரியாதேப்பா!" என்று பதைத்தாள் அகல்யா....

"எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே! விச்வம் என்கிற மனிதனை எனக்குத் தெரியும். மாமா முறையாக வேணும். அவன் எப்படி உங்கள் விஷயத்தில் தலையிட்டான்" என்று பாஸ்கரன் சாவதானமாகக் கேட்டான்.

சுப்ர: அதுதானப்பா கால தேவதையின் கோலக் கூத்து...விச்வத்தைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஏன், உன் பெற்ரேரைப் பற்றிக் கூட எனக்குத் தெரியாது. உன்னைப் பற்றி உன்னுடைய காலேஜ்

மேலதிகாரியும், பிறகு உத்யோகத்தில் மேலதிகாரியும் ப்ர மாதமாகச் சொல்லி என் மனத்தை நிரப்பினார்கள். அகல் யாவுக்கும் உன்னைப் பிடித்துவிட்டது. இருவரும் ஒருவரை யொருவர் அறியாதபடி ஒரு பிக்னிக் பார்ட்டியில் கடவுள் சந்திக்க வைத்தார். இந்த ரகஸியம் உனக்குத் தெரி யாது.

பாஸ்: மாமா! இந்த ரகஸ்யம் அகல்யாவுக்குத் தெரி யாது. அவளை மட்டும்தான் நான் பார்த்திருப்பதாக நினைத் திருந்தேன். சரிசரி; இது விஷயத்தில்கூட நாம் போட்டி போட்டது தோல்வியாகி விட்டது. உம்...பிறகு...

சுப்ர: விச்வத்திற்கு மகாகனம் பொருந்திய பர்வத வர்தனி என்கிற ஒரு புதல்வி இருக்கிறாள். அது உனக்குத் தெரிந்திருக்குமே.

"கடகடவென்று சிரித்துக்கொண்டே, ஆமாம். நன் றாகத் தெரியும். துதிக்கை, தந்தம், வாலு மூன்றுமில்லாத யானை. அதுதானே..."என்கிறபோது அகல்யா த்ரேகம் குலுங்க நகைத்தவாறு "அத்தான், முறங்கள் போன்ற காதுகளும் இல்லை" என்றாள்.

அந்தப் பெண்ணை எப்படியாவது உனக்குக் கல்யா ணம் செய்து வைத்து விடுவதோடு உன்னுடைய அண்ண னைக் கைக்குள் போட்டுக்கொண்டு காட்டன் விளையாட்டில் குபேரனாகிவிடவும், புதிய பிஸனஸ் ஆரம்பித்து நவகோடி நாராயணனாகி விடவும் சூழ்ச்சிகள் செய்து தான் மறைவா கவே இருந்து சில கையாட்களை ஏவி, சேஷகிரியை நன்றாக மூளை கலங்கும்படி உபதேசித்துக் குடும்பத்தையே குட்டிச் சுவரடித்து விட்டப் பரிபவத்தை நான் இன்னான் என்ற மர்மம் வெளியான உடனே அந்த மனிதனால் தாங்கமுடியா துத் துடித்துத் தவித்து என்னைத் தனிமையில் அழைத்துச் சென்று தன் வாயினாலேயே சகலத்தையும் கூறி மன்னிப் புக் கேட்டுக் காலில் விழுந்து கெஞ்சினான். கண்ணீர் வடித்தான். தனக்குள்ள நிலபுலன்கள் யாவும் கடனில் மூழ்கிவிட்டதை மறைத்து உன் காலில் அந்தப்பெண்ணைக் கட்டிவிட்டுப் பிறகு உன்னைக்கொண்டே அவைகளை விற்று விட எண்ணினானம். அகல்யாவின் தங்க பெட்டியைத் தன் கையாள் மூலம் தானே அமுக்கிவிட்டு அதை விற்று அந்த ரொக்கப் பணத்தை பணத்தாசை பிடித்த உன் தாயா ரிடம் கொட்டிவிட்டுப் பிறகு எப்படியோ சமாளித்து விடு வது...என்று பலவித சதியாலோசனைகள்—சூழ்ச்சிகள் செய்து நாசமாகி விட்டானம். சகலத்தையும் மடமட வென்று ஒப்பித்துவிட்டு என்னிடம் மன்னிப்புக் கேட் டான்.

பாஸ் : ஐயோ! மன்னித்து விட்டீர்களா மாமா. மூக்கை நறுக்கி சூர்பனகை போலச் செய்திருக்கக் கூடாதா. உம்....என்ன சொன்னீர்கள்.

சுப்ர : என்னத்தையப்பா சொல்வது. நமக்கோ பெரும் புயல் காற்று அடித்து உன்னையும் இவளையும் சித ரச்செய்து உலுக்கு உலுக்கு என்று உலுக்கும் வேகத்தில் திடீரென்ற அமைதி நிலையை பகவான் காட்டி என் வாழ் வுக்கோர் விளக்கேற்றி வைத்தப் பெருமையில் நான் திளை யும்போது அந்த அல்ப நாயை மூக்கையோ, நாக்கையோ நறுக்கிவிட்டால் மீண்டும் மீண்டும் ஆபத்தல்லவா விளைந்து கொண்டே இருக்கும். அவைகளை எல்லாம் ஆர அமர யோசித்துப் பின் தான் செய்ததெல்லாவற்றையும் அவன் கைப்பட எழுதச் சொல்லி, இனிமேல் இம்மாதிரி செய்வ தில்லை. குற்றத்தை மன்னித்துவிடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டதையும் எழுதிக் கையொப்பம் வாங்கிக் கொண்டு அந்தத் தாளை நான் பத்திரமாக வைத்துக் கொண்டேன். அவனுடைய நில விஷயத்தில் ஒரு பெரிய குற்றம் அவ னிடம் இருப்பதை நான் உத்யோக தோரணையில் ஒரு காலத்தில் அறிந்திருந்தேன். அந்த மனிதன் இவன்தான் என்று இப்போது நிரூபணமாகிவிட்ட பிறகு அந்த விவ காரத்தைக் கூறிப் பயமுறுத்தி எச்சரித்து நாயைப்போல் விரட்டி விட்டு நாங்கள் பறந்து பறந்து உன் தரிசனத் திற்கு வந்தோம். ஏதோ கடவுள் திருவடியில் நாம் பெரிய அபசாரப் பட்டிருப்போம். அவைகளைச் சரியானபடி பரீக்ஷை செய்து கண்டித்து நல்ல படிப்பினையை போதித்து நன்மையையும் செய்துவிட்டார். இப்படியே இனி உங்கள் ஆனந்த வாழ்க்கைப் படகு ஸம்ஸார ஸாகரத்தில் அமைதி யாய்—மகிழ்ச்சிமயமாய் மிதந்து சென்றால் போதும் என்று பெரிய சரித்திரத்தைக் கூறி முடித்தார்.

அகல் : அடேயப்பா! அந்த மனிதனா என் பெல்ட்டை திருடினான். ஐயோ பாவம். மூளை கலக்கத்தில் பெரிய அத் தான் ஏதேதோ உளறியதைக்கண்டு நாம் ஏமார்ந்துபோய் பழியோரிடம் பண்டமோரிடம் என்று நினைத்து விட் டோமே, அந்தப் பாவி மனிதன் பெல்ட்டை என்ன செய் தானும்.......

சுப்ர : செய்வதென்னம்மா! விற்று பணமாக்க இருந் தான். நீ எத்தனையோ ஆசைப்பட்டுச் செய்துகொண்ட பெல்ட்டை நீ போட்டு அனுபவிக்க எண்ணி அவனிட மிருந்து கக்கிவிட்டேன். இதோ என் பையிலிருக்கிறது பாரு. இதை பாஸ்கரன் கையால் உனக்குப் போட்டு அழகு பார்க்கவே உன்னிடம் சொல்லாமல் கொண்டு

வந்தேன். இந்தாப்பா பாஸ்கரா...என்று கூறி கண்களைப் பறிக்கும் மின்னலுடன் கூடிய பெல்ட்டை பாஸ்கரனிடம் கொடுத்தார்.

அடங்காத மகிழ்ச்சியுடன் பாஸ்கரன் மாமாவின் விருப்பத்தைப் பூர்த்தி செய்தபோது அவனை எங்கெங்கோ தூக்கிக்கொண்டு செல்வது போன்ற புல்லரிப்பு உண்டாகியது.

அகல் : அத்தான்! நானும் அப்போது முதல் பார்க்கிறேன். இத்தனை நேரத்துப் பேச்சில் உங்களம்மாவைப் பற்றி நீங்கள் ஏன் ஒன்றுமே கேட்கவில்லை.

பாஸ் : கேட்பதற்கு என்ன இருக்கிறது அகல்யா! பணத்திற்காக என்னிடம் பாசத்தைக் காட்டினுள். அதிலும் நான் சம்பாதித்துக் கொடுத்தால் அதை மற்றொரு மகனுக்கு அப்படியே கொடுத்து இன்புறுவதற்காக என்னையொரு கருவியாய் அந்த பெற்ற தாயுள்ளம் கருதியதேயன்றி உண்மையில் என்னிடம் தனது ஆத்மார்த்தமான ப்ரீதி இருந்தால் என்னுடைய ஆயுள் காலம் பூராவும் நான் சந்தோஷத்துடன் ஆனந்த வாழ்க்கை வாழும் கல்யாண விஷயத்தில் சத்யம் செய்துத் தரும்படியாகக் கேட்பாளா! அந்த நிமிடமே என் மனம் முறிந்துவிட்டது. யாராயிருந்தாலும் தம்தம் கடமையில் நெறியாய் நீதியாய் இருக்கவேண்டும். வாயால் சொல்வது ஒன்று. செய்கையில் காட்டுவது ஒன்று என்பது எனக்குக் கட்டோடு பிடிக்காது. இரண்டு கண்களைப் போன்ற இரண்டு பிள்ளைகளிடத்தில் சமமாக அன்பு செலுத்த வேண்டிய தாயார் பக்ஷபாதம் காட்டுவதை நான் அறியாதிருந்தவரை பேசாதிருந்தேன். அந்த மகனுக்குப் படிப்பு, உத்யோகம், மாமியார் வீட்டுப் பரிவு. ஒன்றும் இல்லை என்பதனுல் என் வாழ்வைப் பாழ்படுத்துவது ஒரு பெருமையா! அது என் நெஞ்சைச் சுட்டெரித்து விட்டது. நானே என் அண்ணனின் நிலையைப்பார்த்து உதவிசெய்ய மாட்டேனு! மோசம் செய்து தான் பாரபக்ஷம் காட்டி ஒரு தாயார் செய்வது. பேசுவது மட்டும் "அடாடா! காலணு கையிலிருந்தால்கூட ஒன்றரை தம்பிடி வீதம் என்னிரு பிள்ளைகளுக்கும்தான் கொடுப்பேன். என்று பவுறயடித்துவிட்டு பின்னுல் குழி பறிப்பதும் பிறர்கண்டு எள்ளிநகையாடி ஏளனம் செய்வது அவளுக்குத் தெரியுமா!...பாவம், பூமாவை என்னதான் கொடுஞ் சிறையில் வைத்துப் பொசுக்கினுள். அதுமட்டுமா என்னையும் அந்த உத்தமியையும்......சேச்சே இவைகள் எல்லாம் என் மனதைவிட்டு அகலாத புண்ணுகிவிட்டது.

பூமாதேவிஎன்ருல் அவளுக்கே தகும். அத்தகைய உத்தமியைக் களங்கப்படுத்தி அப்புறப்படுத்தவும் என் தாயார் துணிந்தாள். அகல்யா....ஒரு பெண் தெய்வம்....தாய்மை பீடத்தை அலங்கரித்த மாதரசி இப்படிச் சொய்யலாமா! என்றுமே இவைகளை நான் அறியாமலிருந்து விடுவேன் என்றுதானே அவள் நினைத்தாள். என் தாயின் செய்கை எனக்கு வெகு நாட்களாகத் தெரியும். நான் ஐ. ஏ. எஸ். படிக்கும்போது பெரிய சம்பளத்தில்தான் இருந்தேன். மாதாமாதம் தவருமல் அனுப்பி வைப்பதை விதரணையின்றி தாம் தூம் என்று செலவுசெய்து என் பிதாவையும் ஏமாற்றி அண்ணனையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி மன்னியையும் மட்டம் தட்டிப் பாழடித்துவிட்டுத் தான் மட்டும் அலங்காரப் பதுமையாய் சிங்காரி ஒய்யாரி மாதிரி சிங்காரித்துக்கொண்டு வாழும் வயிற்றெரிச்சலை நான் சிறியவனுயினும் என் பிதாவிக்கு வேண்டியவர்கள் எனக்கு எழுதினர்கள். என் தாயாருக்குப் பாழும் வரதக்ஷிணை யார் நிறைய கொடுக்கிருர்களோ, அப்போது மகனுக்குக் கல்யாணத்தைச் செய்து ஒரு வ்யாபாரம்போல் முடிக்க எண்ணினளேயன்றி என்னுடைய தனிவாஸமும் ஒண்டிக் கட்டையாய் வயது காலத்தில் தன்னந் தனியாய் ஓட்டல் சோற்றைத் தின்று எத்தகைய போஷாப்புமின்றி நான் திண்டாடுவதை அவள் கட்டாயம் மனப்பூர்வமாக நினைக்கவே இல்லை. இம்மாதிரி பேராசைப் பிடித்த நிலையில் சில தாய்மார்கள் இருப்பதினுல்தான் பிள்ளைகள் கண்டபடி கெட்டலையவும், நோயாளிப் பிண்டமாகிவிடவும், தகாத முறையில் கலப்பு மணத்தைச் செய்துகொண்டு திண்டாடவும், மனம் வெறுத்து மில்ட்ரியில் போய்ச் சேர்ந்து விடவும், சாமியாராகி விடவும், பலபல துன்பங்கள் உண்டாகி விடுகிறது. இது என்னுடைய கண்ணுல் பல இடங்களில் பார்த்து அனுபவித்துச் சொல்கிறேன் மாமா. இதோ இக்கடிதம் எழுதியவனின் கல்யாணமும் விசித்திர முறையில்தான் தன் பெற்ரேருக்காக நடந்தது. அகல்யா! அடாடா! நான் ஏதேதோ சொல்லிக்கொண்டே போய் விட்டேனே! என் சகோதரியையா சொல்கிருய் என்று மாமாவின் கண்களில் ரத்தக்கண்ணீர் வந்துவிடுமல்லவா ...மாமா!........மன்னியுங்கள். இதற்கு முன் இருந்த என் தாயாரைச் சொன்னேன். உங்கள் சகோதரிதான் புனர் ஜென்மமெடுத்து விட்டாளே. அது சரிதான்... இத்தனை புதுமைகள் நடந்த பிறகும் சத்யம்செய்யும்படி கேட்டாளா? அகல்யா...வீராங்கனையைப் போல் சீறி எழுந்து நீ சத்யம் செய்ய வந்தாயா!...என்று நமட்டுச் சிரிப்புச் சிரித்தபடி கேட்டான்.

அகல்யாவும் அதற்கு மேலான தோரணையில், "அடே யப்பா! அதைக்கூட அத்தை மறப்பார்களா? அகல்யா! நீ பாஸ்கரனைத் தவிர வேறு யாரையும் மணக்கக் கூடாது என்று சத்யம் செய்து வாங்கிக் கொண்டாள். சரிதானு...." என்கிறபோது சிரிப்பொலி அவ்வறையில் ரீங்காரம் செய்தது.

அதேசமயம் வெளியேசென்றிருந்த வேலன் வந்தான். அவனைப் பற்றி மாமாவிடம் கூறிவிட்டு இங்கு நடந்த சகலத்தையும் அவனுக்குக் கூறியதும் அவன் ஆனந்தக் கூத்தாடவே தொடங்கி விட்டான்.

சுப்ர : பாஸ்கரா! உன்னுடைய அனுயதியைப் பெருமல் நான் ஒரு காரியத்தைச் செய்துவிட்டேன். அதாவது இனிமேல் இந்த நல்ல சுப காரியத்தைத் தள்ளிப்போட எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் அதை இம்மாத கடைசியிலேயே செய்துவிட வேண்டும். உனக்கு உடனே லீவு கொடுக்க மாட்டார்கள். அதனுல் விவாகத்தையே இங்கு செய்து விடுவதற்காகவும் என்னையே நான் இந்த ஊருக்கு மாற்றி விடும்படிக்கான சிபார்சுகள்—ஏற்பாடுகள் செய்தும் விட்டேன். இதைப் பற்றி நீ கோபிக்க மாட்டாயே? உன் தாயாருக்கும் உன் மன்னிக்கும் இன்னும் ஒரு வாரத்தில் உடம்பு பூரண குணமாகி விடும். அவர்களையும் இங்கு வருவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து விட்டேன். உன் பிதாவை இனிக் கத்திக் கத்திப் பள்ளிக்கூடப் பிள்ளைகளுடன் போராடவிட எனக்கு மனமில்லையாதலால் உன்னேடு கூடவே அவர் இருப்பதற்காக உபாத்யாயர் வேலையை ராஜிநாமாச் செய்விடச் சொன்னேன். சேஷகிரிக்கும் இனிபயமில்லை. குணமாகி விடும். ஆனுல் அதிகப் படி ப்ரவர்தகம் வைத்துக்கொள்ளாமல்—கலக்கமில்லாமலிருந்தால் சரியாக இருப்பான் என்று டாக்டர் சொல்லி விட்டார். எல்லோரையும் ஒன்று திரட்டி இம்மாதக் கடைசி வாரத்தில் உன்னிடம் சேர்த்துவிடுகிறேன். இங்கு நல்ல வீடு பார்க்கவேண்டும் எனக்கு. என்ன! நான் சொல்வதெல்லாம் சரிதானே.......உனக்குச் சம்மதந் தானே?.......

பாஸ் : இதென்ன கேள்வி மாமா! மன்னிக்குச் சகல விஷயமும் தெரியுமா? என்ன சொன்னுள்?

அகல் : அவருடைய ஆனந்தத்திற்குக் கரையே இல்லை. நாம் ஒன்று சேர்ந்த மகிழ்ச்சி தனக்குப் பாப்பா பிறக்கப் போவதைவிட அதிகமாயிருக்கிறதாம். என்னைச் சேர்த்தணைத்துக் கொண்டார். அவருடைய பரிதாபம் நீங்கி இனி பெருமை உண்டாகிவிட்டதல்லவா...........அடாடா!

இன்னென்று சொல்ல மறந்து விட்டேனே!....உங்கம்மா பூமாவை அழைத்துவரச் சொல்லிப் பலர் முன்பு மன்னிப்புக் கேட்டுக் கட்டித் தழுவி என் கையுடன் அவர் கையைப் பதித்து என் கண்ணுன மருமகளால் நம் குடும்ப இருளே நீங்கிவிட்டது என்று வாழ்த்திப் பூரித்தாள்.

பாஸ்: அடேயப்பா! எட்டிக்காயே கரும்பு கட்டையாகி விட்டது என்ருல் எத்தனை வியப்போ! அத்தனை வியப்பு தான் இதில் உண்டாகிறது. எல்லாம் இறைவனருள். மாமா! நீங்கள் இப்போது மறுபடியும் ஊருக்குப் போக வேண்டுமா... அகல்யா....

அகல்: அத்தான்! உலகத்தோடு ஒட்டி நாம் நடக்கும் முறையைப் பிறழக் கூடாதல்லவா! நாம் முன்பு என்ன பேசிக்கொண்டோம். அதை மறந்து......

சுப்ர: பாஸ்கரா! உணர்கிறேன். இனி கிணற்று நீரை வெள்ளங் கொண்டு போகாது. பிறர் பேச இடம் கொடுப்பதழகல்ல. வீடு இன்றே ஏற்பாடு செய்து விடுவேன். கூடிய சீக்கிரத்தில் நாங்கள் இங்கு வந்துவிடப் ப்ரயத்தனம் செய்கிறேன். சந்தோஷமாயிரப்பா...என்கிறபோது சுப்ரமண்யத்தின் கண்களும் நீர்த்திரையில் மறைந்தது. மூவருடைய விழிகளும் மூன்றுவிதமாகப் பேசித் தமது மனத்தை வெளியிட்டன.


காற்றினும் கடிய வேகத்தில் நாட்கள் உருண்டு சென்று கெட்டிமேளத்தின் மங்களகரமான நாத வெள்ளத்தைக் கிளப்பிக்கொண்டு ஆனந்த அலேமோதச் செய்தது. மணவறையிலமர்ந்துள்ள தம்பதிகளின் கண்கொள்ளாத அழகு வெள்ளத்தில் சொக்கிப் போய்விட்ட அகிலாண்டம்மாள் மகனேத் தடவித் தடவிக் கொடுத்து, என் செல்வா! என்னே மன்னித்துவிடு; நான் கண்மூடித்தனமாகச் செய்த சகலத்தையும் மறந்துவிடு என் ராஜா! என்று கண்ணீர் வழியக் கேட்டாள். சந்தனக் கிண்ணியுடன் சேஷகிரியும், குங்குமம், புஷ்பத்துடன் பூமாவும் வாசலில் நின்று ஆனந்த வடிவங்களாய் வரவேற்கும் நித்ய கல்யாண மங்கள வைபவத்தைப் பார்த்துப் பூரித்து போவதைவிட சம்பந்திகள் நால்வருக்கும் வேறென்ன இருக்கிறது.

சுபம்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

முற்றிற்று.

ஆவணக் காப்பக நூலக
183226




## இத்தியாவில் மெட்ரிக் அளவு முறை

அக்டோபர் 1-ம் தேதி முதல் இந்தியாவில் பல பாகங்களிலும், தமிழ் நாட்டில் சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு ஜில்லாக்களிலும், மெட்ரிக் எடை, படி அளவு முறையானது அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பது நேயர்கள் அறிந்த விஷயம்.


படத்தின் மேல்பகுதியில் வார்ப்பு இரும்பு எடைகளும், கீழ்ப் பகுதியில் பித்தளை எடைகளும் இருப்பதைக் காணலாம்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5,



பண்டிட் கோபாலாச்சார்லு

[ஸ்தாபகர்]



1898 1958

# வைர விழா

## சமர்ப்பணம்

பகவான் தன்வந்தரியின் அருள் பெற்று பண்டித டி. கோபாலா சார்லுவும், அவரின் சந்ததியார்களும் செவ்வனே 60-ஆண்டுகளாக நடத்தி வரும் ஆயுர்வேதாஸ்ரமம், நோயினால் பீடிக்கப்படுபவர்களுக்கு தொடர்ந்து பாடுபடுமென இந்த வைரவிழா முகூர்த்தத்தில் உறுதியளிக்கிறது.

எங்களுக்கு இதுகாறும் பெரிதும் உதவியாக யிருந்து ஒத்துழைத்த அனைவரும், மேலும் நாங்கள் மக்கள் நலத்திற்குப் பாடுபட, உதவ வேண்டுகிறோம்.

**ஆயுர்வேதாஸ்ரமம் (பி) லிமிடெட்**

**மதராஸ்—17.**